பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:7 வள்ளுவர் ஆண்டு 2029 தை 4 சனிக்கிழமை (17-01-1998) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:33

# கூட்டணியினரின் வேட்புமனு ஏற்பு!

## நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, ஜனவரி 17

யாழ்ப்பாணம் மாநகர சபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்த மனுக்களை ஏற்றுக் கொள்ளும்படி தேர்தல் ஆணையாளருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மேற்படி இரு சபைகளுக்குமாக கூட்டணி சமர்ப்பித்த வேட்பு மனுக்கள் வேட்பாளர் பட்டியலில் உள்ள தலைவர் ஒவ்வொருவரின் வயதுகளில் ஏற்பட்ட தகுதியீனம் காரணமாக நிராகரிக்கப்பட்டதாக தெரிவத்தாட்சி அலுவலகரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பை ஆட்சேபித்த கூட்டணி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுச் செய்தது.

கூட்டணியின் நீதிமன்ற மனுவை எதிர்த்து, தேர்தலில் போட்டியிடும் புளொட் கட்சி நீதிமன்றத்தில் பதில் மனுத் தாக்கல் செய்து வாதாடியது.

இரண்டு நாள் விசாரணைகளின் பின்னர், கூட்டணியின் வேட்பு மனுக்களை தேர்தலுக்கு ஏற்றுக் கொள்ளும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டு நேற்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (உ-3)

# ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு இன்று முதல் முழுக்கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதை இன்று முதல் முற்றாகத் தவிர்க்கவேண்டும். ஆயுதங்களுடன் நடமாடினால் அவற்றைப் பறிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளிடம் வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று நடந்த சந்திப்பின்போதே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரிகேட்டுக்களின் இராணுவ அதிகாரிகள், வடபிராந்திய கடற்படை தளபதி கொமடோர் சந்தகிரி, யாழ் பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஆகியோரும் —

ஈ.பி.டி.பி. சார்பில் அதன் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே. ஜெகன், பேச்சாளர் எஸ் தவராசா, புளொட் சார்பில் அதன் உப தலைவர் என். மாணிக்கதாஸன், எஸ். விசன், ரெலோ சார்பில் அதன் முதல்வர் என்.கே. சிவாஜிலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், சுயேச்சைக்குழு சார்பில் எஸ். சிவா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் பணிகளுக்காக நூறு ஜீப்கள் யாழ். வரும்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். உள்ளூராட்சித் தேர்தல் பணிகளுக்காக நூறு ஜீப் வண்டிகள் அடுத்த சில நாள்களில் காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருக்கின்றன.

தற்சமயம் திருகோணமலைக்கு வந்து சேர்ந்துள்ள இந்த ஜீப்வண்டிகளை 'லங்கா முடித்' கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு புறப்பட்டுள்ள இக்கப்பல் ஜீப்வண்டிகளுடன் ஒரு தொகை பஸ்களையும் ஏற்றிக்கொண்டு திரும்பி வரும் எனத் தெரியவந்தது.

தேர்தல் பணிக்காக ஏற்கனவே 75 பஸ்கள் காங்கேசன் துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளமை தெரிந்ததே.

# 7 பிரதித்தேர்தல் ஆணையர் நேற்று யாழ். நகர் வருகை

## 25 சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள், 1500 அலுவலர்கள் விரைவில் வருவர்

யாழ்ப்பாணம், ஜன. 17

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ் உள்ளூராட்சித் தேர்தல்களில் பணிபுரிவதற்காக ஏழு பிரதி தேர்தல் ஆணையாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

தேர்தல் நடத்துவதற்கான ஆரம்ப பணிகளை இவர்கள் நேற்று ஆரம்பித்தனர் என்று யாழ். தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்து வரும் நாள்களில் மேலும் 25 சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

அத்துடன் தேர்தல் பணிகளை மேற்கொள்ள அடுத்து வரும் நாள்களில் ஆயிரத்து 500 ஊழியர்கள் விமானம் மூலம் கொழும்பில் இருந்து அழைத்து வரப்பட இருப்பதாகவும் தெரியவந்தது.

அதேநேரம்—யாழ். தேர்தலுக்காக யாழ். செயலகத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டணிக் குழு திங்கள் வரும்!

யாழ். உள்ளூராட்சித் தேர்தல்களில் பிரசார வேலைகளில் ஈடுபடுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் குழு ஒன்று நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உப-தலைவர் வி. ஆனந்தசங்கரி இத்தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி யாழ். தேர்தல் அலுவலகத்தில் வேட்புமனுக்கள் செய்வதற்காக கூட்டணி பிரமுகர்கள் சிலர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதையடுத்து, உடனடியாக அவர்கள் கொழும்புக்குப் பறந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பு மனுக்களை ஏற்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

நாளை மறுதினம் முதல் கூட்டணிப் பிரமுகர்கள் பலர் யாழ்ப்பாணம் வந்து பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடைசிப் பிரசார நாட்களில் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரமும் வந்து கலந்து கொள்வார் என ஒரு தகவல் தெரிவித்தது. (உ-3)

# வவுனியாவில் நேற்று ஏற்பட்ட பதற்றம்

வவுனியா, ஜன. 17

வவுனியா — ஹொரவப்பொத்தான வீதியில் ஆஸ்பத்திரி சந்தியில் அமைந்திருந்த புத்தர் சிலைப்பகுதியில் குண்டு வெடித்ததாக நேற்று அங்கு எழுந்த வதந்தியை அடுத்து வவுனியா நகர் நேற்றுக் காலை 10 மணி முதல் முக்கால் மணி நேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

கடைகள் திடீரென பூட்டப்பட்டன; மக்கள் பதற்றத்தால் வீதிகளில் தலைதெறிக்க ஓடினர்.

அந்தப் புத்தர் சிலைக்கு அருகில் வயர் துண்டுகளும், சில பற்றறிகளும் காணப்பட்டதாக பொதுமக்கள் கொடுத்த தகவலே பின்னர் குண்டு வெடித்த புரளியாக மாறியது என்று தெரிவிக்கப்பட்டது.

உண்மை நிலை தெரிய வந்த பின்னர் நகரில் கடைகள் மீண்டும் திறக்கப்பட்டன; மக்கள் நடமாட்டமும் வழமைக்குத் திரும்பியது.

# வவுனியாவில் சுடப்பட்ட பொலீஸார் தமிழராம்!

வவுனியா, ஜன 17

வவுனியா — மன்னார் வீதியில் நெளுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸார் தமிழர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தேவராசா (வயது 40) என்ற றிசேர்வ் பொலீஸாரே சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும்—

குளுமன்காட்டில் உள்ள பொலீஸ் நிலையத்தில் கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயமே அவர் சுடப்பட்டார் என்றும்—

விசாரணைகளில் இருந்து தெரிய வந்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வவுனியா நகரில் இருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ள பிரதேசத்தில் இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# யாழ். கிரிக்கெட் அணி இன்று கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். மாவட்ட கிரிக்கெட் தெரிவுக்குழு இன்று கொழும்பு செல்லவுள்ளது.

பெப்ரவரி 2 ஆம் திகதி வரை தெற்கில் தங்கி நிற்கும் இக்குழு ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் நான்கிலும் இரு கழகங்களுடனான சிநேகபூர்வ ஆட்டங்களிலும் பங்கு பற்றும்.

விளையாட்டுத்துறை அமைச்சினால் கொழும்பில் நடத்தப்படவுள்ள விளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் ஆஸி. தூதுவர்!

யாழ்ப்பாணம், ஜன 17

யாழ். உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான மக்களின் உணர்வலைகளை அறிவதில் அவுஸ்திரேலிய பிரதித் தூதுவர் ஈடுபட்டுள்ளார்.

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள அவர் தேர்தலில் மக்களின் பங்கு, அவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சமத்தர் செல்லத்துரை மரியநாயகம்

(ஆயுள்வேத முறிவு, நெரிவு, நோவு வைத்தியர்)

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை மரியநாயகம் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சமத்தர் செல்லத்துரை இராசமணி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், மேரி மாகிறேற்றின் அன்புக் கணவரும், ஞானேஸ், இந்திராமதி, புவனேஸ்வரி, தோறகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திருமதி றோசம்மா பிரான்சிஸ் (சுந்தானை), லயனல் ராஜா (லண்டன்), திருமதி சூசைதாசன் ராஜேஸ்வரி (சுந்தானை), அருட்பிரகாசம் நவரட்ணம் (வைத்தியர், யாழ்ப்பாணம்), மகேந்திரன் (லண்டன்), திருமதி பாலரத்தினம் பூமணி (பிரான்ஸ்), ஜேம்ஸ் (உரிமையாளர், சில்வஸ்ரார் ஹோட்டல், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17-01-98) சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் புனித சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. அருட்பிரகாசம்
(நவரட்ணம் சகோதரன்)
805, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(52683)

## திருமதி தெய்வானைப்பிள்ளை சுந்தரலிங்கம்

(இடைக்காடு)

இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இடம்பெயர்ந்து கிசுவமடுவில் வசித்தவருமான திருமதி தெய்வானைப்பிள்ளை சுந்தரலிங்கம் 4-1-98 அன்று காலமானார்.

இவர் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், நந்தினி, சாந்தி (மாணவி, யாழ் பல்கலைக்கழகம்), வதனி, மாலினி, காந்தரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. நந்தினி
(மகள்)
பாடசாலை வீதி,
இடைக்காடு,
அச்சுவேலி
(52670)

## திருமதி அருளம்பலம் சிவக்கொழுந்து

(காரைநகர்)

காரைநகர் குமிழங்குழியைச் சேர்ந்த திருமதி அருளம்பலம் சிவக்கொழுந்து ஸ்கந்தபுரத்தில் 13-1-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சு. க. அருளம்பலத்தின் (ஓய்வுபெற்ற அதிபர், சுப்பிரமணிய வித்தியாலயம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற செந்தில்நாயகி, செல்வநாயகி, செந்தில்நாதன், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரமூர்த்தி (கம்பளை), திருநாவுக்கரசு, அன்னலட்சுமி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ச. பரஞ்சோதி
(பேரன்)
354/7, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(52689)

## லெஸ்லி T. சோமநாதர்

முன்னாள் மெதடிஸ்த திருச்சபையின் உபதலைவரும், முன்னாள் ஹட்டன் நஷனல் வங்கியின் முகாமையாளரும், சுந்தரியின் அன்புக் கணவரும், சுபோ, ஜிட்டோ, நிமோ ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற கனம் J. V. J. ஆணல்ட் அவர்களின் அன்பு மருமகனுமான லெஸ்லி சோமநாதர் 14-1-98 இல் ஆஸ்திரேலியாவில் காலமானார். அன்னாரின் வாழ்வுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை 18 ஆம் திகதி ஞாயிறு மாலை 3 30 (புதிய நேரம்) மணிக்கு அன்னாரின் மானிப்பாய் இல்லத்தில் நடைபெறும் என அறியத்தருகின்றோம்.

தகவல்:
அருள் திரு. S C. ஆணல்ட்
''பீஸ்லீன்'',
உடுவில்றோட்,
மானிப்பாய்.
(52675)

## சீனியர் பரமநாதன் [பண்டாரி]

தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆனைவிழுந்தானில் வசித்துவந்தவருமான சீனியர் பரமநாதன் 12-1-98 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் சீனியர் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் (சாமியம்மா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் லோகாதேவி ஆகியோரின் சகோதரனும், கிருஷ்ணமூர்த்தி, விநாயகமூர்த்தி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13 1-1998 இல் ஆனைவிழுந்தானில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
அ. பொன்னுத்துரை
(மைத்துனர்)
ஆனைக்கோட்டை.
(52[illegible])

# சமய சந்நிதியில்

குருநகர், ஜன. 17

அமலமரித்தியாகிகள் யாழ்மண்ணில் கால்பதித்து 150 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் முதல்வர் பேரருட்திரு மார்செல் யோசாகோ தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(ஐ-51)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன 17

சுழிபுரம் அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஏகதின இலக்ஷார்ச்சனைப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பிற்பகல் 2. 30 மணிக்கு அக்னி முகாத்தம், தர்ப்பணம் என்பன நடைபெற்று மாலை சண்டி ஹோமம், தாரா ஹோமம், விசேட திரவிய ஹோமம் என்பன இடம்பெறும். அதனைத்தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவார்.

(ஐ-8)

## அரச அதிபர்களின் செயலமர்வு

கொழும்பு, ஜன. 17

நாட்டில் உள்ள சகல அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருக்கான விசேட செயலமர்வு ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

இந்த செயலமர்வுக்கு யாழ். அரச அதிபரும், குடாநாட்டில் பணிபுரியும் பிரதேச செயலர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 17

ஏணையில் தீ மூண்டதால் பலத்த தீக்காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐந்து மாதக் குழந்தை நேற்று அதிகாலை 4.00 மணிக்கு அங்கு மரணமானது

பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபின் குழந்தையின் உடல் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இருபாலை ஆனந்தபுரம் பகுதியில் கடந்த திங்கள் இரவு இந்த தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றது (ஐ-9)

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். பாரதி கான சபா நடத்தும் தியாகராஜ உற்சவம் இசை விழா இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாகவுள்ள சபா மண்டபத்தில் பிற்பகல் 2 30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ ★ ★

யாழ். வண்ணை இளைய தம்பி இந்து வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித் திட்டத்தைய பயிற்சி நெறிக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும். மகளிர் அபிவிருத்தி நிலையப் பொறுப்பாளர் திருமதி சரோஜினி சிவச்சந்திரன் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.


## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்

விஜய்,
குமாரி சாளினி
நடித்த
காதலுக்கு
மரியாதை
(புதிய வெளியீடு)

புதிய நேரம்:
9-00, 12-00, 3-00,
(மாலை)


# மரண அறிவித்தல்கள்

## முருகேசு சண்முகநாதன்

சுருவிலைப் பிறப்பிடமாகவும், குப்பிளான் ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்டவரான முருகேசு சண்முகநாதன் 16-01-98 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு—தெய்வானை தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், பராசக்தி (கொழும்பு) கணேசலிங்கம் (கனடா), உமாதேவி (ஆனைக்கோட்டை), பாமேஸ்வரி (இந்தியா), புவனேஸ்வரி (சுவிஸ்), ஈஸ்வரி (சுவிஸ்), விகனேஸ்வரன் (சுவிஸ்) பவானி (ஏழாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம் (C.T.B. கோண்டாவில்), செல்வனேசம் (கனடா), தவயோகராஜா (பிரான்ஸ்), பொன்னுத்துரை (இந்தியா), குணபாலசிங்கம் (சுவிஸ்), மோகன் (சுவிஸ்), கலா (சுவிஸ்), செல்வரத்தினம் (கற்கண்டு, ஏழாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 18-1-98 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் காடாகடப்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
து. செல்வரத்தினம்
(கற்கண்டு, மருமகன்)
(பிரபல வர்த்தகர்,
யாழ். - கொழும்பு)
மயிலங்காடு,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
(சி/2666)

## முத்துத்தம்பி மரியம்மா [அன்னம்]

கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துத்தம்பி மரியம்மா அவர்கள் 04-01-98 அன்று மல்லாவியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சவுரிமுத்து, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் மற்றும் பிலோமினா, றீற்றா ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, அல்பேட் ஆகியோரின் அன்பு மாமியும், நோபேட், றொபேட், டிசன்ரா யேசுதாசன், பேனாட், ஜெறாட், றெஜினோல்ட், சுபத்திரா, கமிலஸ், அமலதாஸ், கொன்சலா, நிர்மலன், ஜெனற்றாஸ், அஞ்சலா, முருகானந்தன், வென்சஸ்லோஸ், அனுசா, றஞ்சன், ஸ்ரனிஸ்லோஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சமலராஜன், சுதர்சனி, நிக்கலஸ், பிரகல்யா, பிரதர்சனா, மோனிஷா, யஸ்மின், சோபிகன், சுலக்ஷன், திவேரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மல்லாவியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பிலோமினா
(மகள்)
40/5, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(52646)

## கந்தர் காங்கேசு

(முன்னாள் ஸ்தாபகர் அதிபர்,
வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்)

வேலணை கிழக்கில் பிறந்தவரும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய கந்தர் காங்கேசு 15-01-98 அன்று கனடாவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி அண்ணாமலை கந்தரின் அருமை மகனாரும், காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை (நிவித்திக்கல வர்த்தகர்), பொன்னம்மா ஆகியோரின் மூத்த மருமகனும், திருமதி பாக்கியலெட்சுமி மருதையாவின் அன்புச் சகோதரியும் திருமதி விமலசோதி தவராசா (பேபி), திருஞானஸ்கந்தன் (கனடா), திருமதி கலாசோதி சர்வேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு. இராசையா தவராசா, திருமதி பிரேமிளாஞானஸ்கந்தன் (கனடா), திரு இரத்தினசிங்கம், சர்வேஸ்வரன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி வீரலெட்சுமி பொன்னுச்சாமியின் அன்புத்தாய் மாமனும், திரு. S. P. சாமி (பிரபல தொழில் அதிபர், கொழும்பு) அவர்களின் சிறிய தந்தையாரும் திருமதி யோகவதி இராசரெத்தினம் (கனடா), திருமதி மீனாம்பிகை நவரத்தினம் (கனடா), திரு. ச. கதிர்காமநாதன் B. A (அவுஸ்திரேலியா), திரு. ச. தர்மபாலன் B.Sc. (அவுஸ்திரேலியா) திரு. ச. கோபாலபிள்ளை (வர்த்தகர், கொழும்பு), திரு. க விமலேந்திரன் (கனடா), திரு. ச. சோமநாதன் (வர்த்தகர்), திரு. ச தியாகராசா (பொறியியலாளர், கனடா), திரு ச. பாலசுந்தரம் B. A Hons (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மைத்துனரும், செல்விகள் அசலை, நிமலி, சாமளா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்), அமலன் (பரியோவான் கல்லூரி மாணவன்), செல்வி மாதங்கி (கனடா), செல்வன் பிரணன் (கனடா), செல்வி சுகன்யா (கனடா), செல்வி சுபிளா (கனடா), செல்வன் தர்சன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி விமலசோதி தவராசா
(மகள்)
10/5 சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,
(52679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தேர்தல் குறித்த நிலைப்பாடு கடைசி நேரத்திலேயே வெளியாகும்?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு இன்னும் பன்னிரண்டு நாள்களே உள்ளன.

இலங்கையின் சுதந்திர தினப் பொன்விழாவுக்கும், வவுனியாவிலிருந்து வடக்கு இலங்கைக்குப் பாதுகாப்பான தரைவழிப் பாதையைத் திறப்பதற்கு இலங்கைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தமது படைகளுக்கு விதித்த காலக்கெடு முடிவதற்கும் இன்னும் பதினெட்டு நாள்களே உள்ளன.

யாழ். உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் கொழும்பிலேயே நடைபெற்று வருகின்றன; ஏற்பாடுகள் இங்கு நடைபெறுவதாகத் தெரியவில்லை.

சுமார் ஆயிரத்து அறுநூறு கிலோ எடை கொண்ட பொதிகளில் வாக்காளர் அட்டைகள் சில தினங்களுக்கு முன்னர் விமானத்தில் எடுத்து வரப்பட்டுள்ளன. அவை நாளை அல்லது மறுதினம் உரியவர்களுக்கு வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் அவை எப்போது, எப்படி விநியோகிக்கப்படப் போகின்றன என்பது குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் ஏதுமில்லை.

வழக்கமாகத் தேர்தல் என்றால் போட்டியிடும் கட்சிகள் வாக்காளர் பட்டியல்களைக் கையில் எடுத்துக் கொண்டு வீடு வீடாகச் சென்று வாக்காளர் பெயர்களை ஒப்பிட்டு, ஒவ்வொருவருக்கும் வாக்கு இருப்பதை உறுதிப்படுத்தி, அதனை அவர்களுக்கு நினைப்பூட்டி, அந்த வாக்குகளை தங்களுக்கு அளிக்கும்படி விநயத்துடன் கோரிப் பிரசாரம் செய்வது வழக்கம்.

ஆனால் ''விசித்திரமான முறையில்'' இங்கு, இம்முறை நடத்தப்படும் தேர்தல்களில் இதுவரை வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யும் பணி பரவலாக நடந்ததாகத் தகவல் ஏதுமில்லை.

பூரணப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலேனும் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளிடம் இருக்கின்றதா என்றால் எதிர்மறையான பதிலே கிடைக்கும்.

ஒவ்வொரு வீடுகளிலும் இருக்கும் — வயதுக்கு வந்தவர்களுக்கு — வாக்குகள் உண்டா? அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளனவா? இடம்பெயர்ந்து தங்கியிருப்பவர்களின் வாக்குகள் எங்கு பதியப்பட்டுள்ளன?—இது போன்ற வினாக்கள், சந்தேகங்கள் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளிடமும் இல்லை.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு தனிப்பட்ட ஒவ்வொரு வாக்காளருடனும் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்த இயலாமல் இருக்கலாம்; ஆளணி, அம்பு வசதிகள் இல்லாமல் இருக்கலாம்; அல்லது அதற்கான நிர்வாகக் கட்டமைப்பு வசதி இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் வளர்ந்த பொது மக்களும் கூட தங்களுக்கு வாக்குரிமை உண்டா? தங்கள் வாக்கு எங்கு பதியப்பட்டுள்ளது? அதனை அளிப்பதா? யாருக்கு அளிப்பது?— என்ற விவரங்கள் குறித்து அலட்டிக் கொள்ளாமலேயே நாள்களை நகர்த்துகிறார்கள். வாக்களிப்பது தொடர்பான நடவடிக்கைகளில் அவர்களும் உதாசீனப் போக்குக் காட்டுவதையும் அவதானிக்க முடிகின்றது. இது தேவையற்ற தேர்தல் என்று அவர்கள் கருதுவது அவர்களின் இத்தகைய நிராகரிக்கும் போக்குக்கு காரணமாக இருக்கலாம்.

தேர்தலுக்கு இன்னும் பன்னிரண்டு நாள்களே உள்ளன. வாக்களிப்பு நிலையங்கள் கொத்தணி ரீதியில் அமைக்கப்படும் என்று கூறுகின்றார்கள். ஆனால் அவை எங்கு அமையப் போகின்றன? யார், யார் எங்கு சென்று வாக்களிப்பது?— என்பவை குறித்தும் உத்தியோகபூர்வ அறிவித்தலோ, தகவலோ, பத்திரிகை விளம்பரமோ கூட இன்று வரை வெளியாகவில்லை.

வாக்களிக்கும் முறை என்ன? யாருக்கு வாக்களிப்பது — கட்சிக்கா? கட்சியின் சார்பில் போட்டியிடுபவர்களுக்கா? விருப்பு வாக்கு அளிக்கும் முறை உண்டா? அதை எப்படி உபயோகிப்பது? ஆள் ஒருவருக்கு எத்தனை வாக்குகள்? — போன்றவை குறித்தும் இன்னும் தகவல் இல்லை. இந்த விடயத்தை மக்களுக்கு சரிவர விளக்கி, மக்கள் தமது வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்த வைப்பதில் கட்சிகளுக்கும் முக்கிய பங்குண்டு. ஆனால் உள்ளூராட்சித் தேர்

பாசுபதன்

தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்திலும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. போஸ்டர் ஒட்டுவதிலும், ஸ்பிறே 'பெயின்ட்' அடிப்பதிலும் தான் அவர்களின் கவனம்.

ஆக மொத்தத்தில் தேர்தல் பிரசாரம் யாழ்ப்பாணத்தில் சுவர் போஸ்டர்களில் மட்டுமே தடபுடலாக உள்ளது. மற்றும்படி கூட்டங்கள் குஞ்சடிகள் மிக மந்தமாகவே காணப்படுகின்றன.

இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து புலிகளின் நிலைப்பாடு என்னவென்பது கொஞ்சம் கொஞ்சமாக தெளிவுபட்டு வருகின்றது. அவர்கள் இத் தேர்தலை அடியோடு ஏற்கவில்லை; நிராகரித்து விட்டார்கள்.

தேர்தலை நிராகரிக்கக் கோரும் போஸ்டர்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே ஒட்டப்பட்டு வருகின்றன.

இத்தேர்தல் குறித்து புலிகளின் பிரமுகர் வே. பாலகுமாரன் பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

''அரசியல் அடைமொழியில் 'மிதவாதிகள் எனப்படும் சமரசவாதிகளைக் கொண்ட மாற்றுத் தலைமையொன்று தமிழர் மத்தியில் உருவாகி விட்டது' என்பதைக் காட்டவே இத்தேர்தலைப் பயன்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

''இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் காட்டிய பாதை இது. தென் பிரான்ஸை ஆக்கிரமித்த ஹிட்லர், அதனை நிர்வகிப்பதற்காக பொம்மை அரசு ஒன்றை 'விச்சி' நகரில் அமைத்தான். பிரான்ஸ், பிரான்ஸியராலேயே நிர்வகிக்கப்படுகின்றது என்ற பொய்த் தோற்றத்தை உருவாக்கவே அத்திட்டம்.

''தமிழ் மக்களை ஏமாற்ற தென்னிலங்கை ஆட்சியாளர்கள் எடுத்த முயற்சிகளில் ஆகப்பிந்தியதாக இப்போது மிதவாதம் என்ற பெயரில் சமரசவாத — துரோகத்தனமான— அரசியல் முடி வட்டம் பூரணமாகின்றது. இந்த விபரீத அரசியல் முயற்சி எவ்வாறு முடிவுக்கு வரும் என்பது எமக்குத் தெரிந்த விடயம்தான்'' — இவ்வாறு பாலகுமாரன் குறிப்பிட்டிருக்கின்றார்.

## 'ராவய' கருத்து

எது எப்படியென்றாலும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக தங்கள் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை கடைசி நேரத்திலேயே புலிகள் பகிரங்கப்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்னும் அத்தகைய முடிவு ஏதும் வெளியானதாகத் தெரியவில்லை.

புலிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கோரினால் எழக்கூடிய நிலைமை குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் 'ராவய' சிங்கள வார இதழ் சில தினங்களுக்கு முன் தனது அரசியல் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. அதன் சில பகுதிகளை இங்கு பார்ப்பது பொருத்தமாகவிருக்கும்.

''வாக்குகளைப் பயன்படுத்த வேண்டாம் என விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண மக்களுக்கு கட்டளையிட்டால் அங்குள்ள மக்கள் எத்தகைய தீர்மானத்திற்கு வருவார்கள் எனக் கூறமுடியாது. இருப்பினும் யாழ்ப்பாண மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தேர்தலில் வாக்களிப்பது இல்லை என்ற முடிவுக்கு வருவார்களேயாகின் தேர்தல் நடவடிக்கைகள் முற்றிலுமாகக் கேள்விக்குறியாவதைத் தவிர்க்க முடியாது.

''பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் கட்டளையை அல்லது கோரிக்கையை ஏற்று வாக்களிப்பதைப் புறக்கணிக்கும் நிலை ஒன்று உருவாகும் போது அதனால் சினமுறும் படையினர் மக்களைப் பலாத்காரமாக வாக்களிக்கச் செய்ய முயற்சிப்பார்களேயாயின் அப்போது உருவாகும் வெறுப்பு நிலையானது யாழ். மக்களின் மனங்கள் விடுதலைப் புலிகளுக்கு சார்பாகத் திரும்புவதைத் தவிர்க்க முடியாததாக்கிவிடும்.

''தேர்தலில் ஆயுதக் குழுக்களே போட்டியிடுகின்றன. ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ போன்ற ஆயுதக் குழுக்களுக்கு யாழ். மக்களிடையே மதிப்பில்லை. அவ்வாறான குழுக்கள் மீது பொதுமக்கள் கொண்டுள்ள விருப்பமின்மையும் யாழ். மக்கள் தேர்தலில் அக்கறை கொள்ளாததற்குக் காரணம் எனக் கூறலாம்.

''எந்த விதத்தில் பார்த்தாலும் யாழ். உள்ளூராட்சித் தேர்தல்களானது அரசியல் ரீதியான ஒரு முடிவை எடுத்துக்காட்டும் எனக் கூறலாம்.

''பொதுமக்கள் பெருமளவில் பங்கு கொள்ளும் தேர்தலாக இத்தேர்தல் அமையுமாயின் அது யாழ். மக்கள் விடுதலைப் புலிகளைக் கருத்தில் கொள்ளாது ஜனநாயக வழியில் அமையும் அரசியல் அமைப்புகள் ... தலைமையை உணர்ந்துள்ளனர் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தும்.

''ஆனால்மறுபுறத்தில் விடுதலைப்புலிகள் மீது கொண்ட பற்றுக் காரணமாக—அல்லது பயம் காரணமாக — அல்லது போட்டியிடும் வேட்பாளர்கள் மீது கொண்டுள்ள வெறுப்புக் காரணமாக — பொதுமக்கள் வாக்களிப்பதைத் தவிர்க்கும் நிலை உருவாகுமேயானால், அது அரசியல் ரீதியில் பல புதிய பிரச்சினைகளை உருவாக்கும்.

''அவ்வாறான நிலை உருவாவதைத் தவிர்ப்பதற்காக தேர்தலில் போட்டியிடும் அமைப்புகளோ அல்லது இராணுவமோ அல்லது பொலிஸாரோ நேர்மையற்ற விதத்தில் பலாத்காரமாக வாக்குப் பெட்டிகளை நிரப்ப முற்படுவார்களாயின் அந்தச் செய்கையானது இதுவரை பெற்ற வெற்றிகள் அனைத்தையும் திசை திருப்பும் நிலைமையை உருவாக்கும் என்பதையும் தவிர்க்க முடியாது.

''எல்லாவிதத்திலும்பார்த்தாலும் தேர்தலை நடத்துவது ஒரு முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். இந்தத் தேர்தலை ஒரு நியாயமான தேர்தலாக நடத்துவதற்கு வேண்டிய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுவது அரசின் கடமையாகும்.

''தேர்தல் கடமைகளைக் கண்காணிக்க வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கௌரவமிக்கவர்களை—அங்கு அனுப்புவது மிகவும் முக்கியம். வரையறையற்ற விதத்தில் பத்திரிகையாளர்கள் அங்கு சென்றுவர இடமளிக்கப்பட வேண்டும். இவற்றை விட மிக முக்கியமான ஒன்று உள்ளது. யாழ். மக்களின் முடிவு எதுவாயினும் அதை அவர்கள் வெளியிட இடமளிக்கப்படவேண்டும் என்பதே அதுவாகும்.

''விடுதலைப் புலிகள் மீது கொண்ட பயம் காரணமாகவோ அல்லது போட்டியிடும் குழுக்கள் மீது கொண்டுள்ள வெறுப்புக் காரணமாவோ யாழ். மக்கள் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற கொள்கையைக் கொண்டிருந்தால் அதற்கு அரசு எதுவித இடைஞ்சல்களையும் உருவாக்கக்கூடாது.

''தேர்தலில் மக்கள் அக்கறை கொண்டு மக்களின் ஒத்துழைப்புடன் ஜனநாயக அமைப்புக்களை (உள்ளூராட்சி அமைப்புக்கள்) உருவாக்குவதில் வெற்றி பெற முடியுமாயின் அது ஒரு மிக முக்கியமான முன் முயற்சியாகும். மக்கள் அவ்வாறான ஒரு நிலை உருவாவதை விரும்பவில்லை என்றால் அந்த மக்களுக்கு தமது எண்ணங்களை வெளியிடுவதற்கு வழிவிட்டு அதன் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டியவை எவை என்பது குறித்து ஒட்டுமொத்தமாக கவனத்தில் எடுத்து முடிவுக்கு வருவது அரசின் கடமையாகும்.

ஜனநாயகச் செயற்பாடுகள் செயலிழந்துள்ள ஒரு பிரதேச வரையறைக்குள் மேன்மேலும் தேர்தல்களை நடத்துவது மிகவும் முக்கியமானதாகும். ஆனால் அந்தத் தேர்தல் நேர்மையான விதத்தில் நடத்தப்பட்டாலேயே அது அம்மக்களுக்கு பயன்படும் விதத்தில் அமையும்.''

-இவ்வாறு 'ராவய' தெரிவித்துள்ளது.

தேர்தலைப் பகிஷ்கரிக்கும் படிகோருவதும் தமதுவாக்குச் சீட்டுக்களை செல்லாததாக்குவதும் அவற்றுக்காகப் பிரசாரம் செய்வதும் கூட ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள்தான்.

ஆனால் வாக்களிக்கும்படியோ, வாக்களிக்காமல் விடும்படியோ மக்களை பலவந்தப்படுத்துவதும், பயமுறுத்துவதும் ஜனநாயக விரோதச் செயல்களாகும்.

சகல தரப்பினரும்—குறிப்பாக ஜனநாயகம், தீர்வு என்று பேசுபவர்கள்—இதை மறந்து விடக்கூடாது.

★ ★ ★

## வன்னி நிலைமை

வடக்கிற்கான தரைவழி விநியோகப் பாதையைத் திறப்பதற்கு வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை ஸ்ரீ லங்காப் படைகள் ஆரம்பித்து கடந்த செவ்வாய்க்கிழமையுடன் எட்டு மாதங்கள் பூர்த்தியாகி விட்டன.

இந்தக் காலத்தில் அரச தரப்பில் 3 ஆயிரம் படையினர் பலியாகியுள்ளதாகவும் சுமார் ஒரு டிவிஷன் (பத்தாயிரம்) துருப்புகள் உயிரிழப்பு மற்றும் காயங்கள் காரணமாக களத்திலிருந்து அகற்றப்பட்டிருப்பதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

நான்கு டிவிஷன்களைச் சேர்ந்த சுமார் முப்பத்தையாயிரம் துருப்புகள் இந்த இராணுவ நடவடிக்கை களத்தில் உள்ளன.

எட்டு மாத காலத்தில் 17 டாங்கிகள், நான்கு ஆட்லறிகள், ஹெலிகள் மற்றும் பெருந்தொகையான இராணுவத் தளபாடங்கள் தங்களால் அழிக்கப்பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் —

கண்டி வீதியில் புளியங்குளத்துக்கு அப்பால் கனகராயன் குளத்தை தாங்கள் இவ்வாரம் கைப்பற்றியதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் அறிவித்தன.

கரப்புக்குத்தி, கற்கிடங்கு, பெரியமடு ஆகியவை வழியாக— கண்டி வீதிக்கு கிழக்குப் பக்கத்தில் இருந்து— முன்னேறிய படைகளே கனகராயன் ஆற்றைக் கடந்து சென்று கனகராயன்குளம் பிரதேசத்தைக் கைப்பற்றியதாகக் கொழும்பில் கூறப்பட்டது.

கண்டி வீதியில் கடைசியாக புளியங்குளத்தை படையினர் கைப்பற்றியிருந்தனர். அங்கிருந்து 11 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது கனகராயன்குளம். புளியங்குளத்திலிருந்து கனகராயன் குளத்துக்கு கண்டி வீதி வழியாக படையினர் முன்னேறவில்லை. கண்டிவீதிக்கு கிழக்குப் பக்கமாகச் சென்று அதன் வழியே கனகராயன் குளத்தைப் படைகள் கைப்பற்றின என்று கூறப்பட்டது.


கனகராயன்குளத்தை படையினர் கைப்பற்றியது உண்மையானால் கனகராயன் குளத்துக்கும் புளியங்குளத்துக்கும் இடையிலான கண்டி வீதியைப் படைகள் முற்றாகக் கைப்பற்றுவதற்கு

(எட்டாம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலதிபர் தோழர் க. உமாமகேஸ்வரன் [முகுந்தன்]



எம் தலைவர்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொழும்புக்கிளைச்செயலாளராக தமிழ் மக்களின் விடுதலைப் பாதையில் பயணித்து தமிழீழ விடுதலைப்புலியாக 1976 இல் ஆயுதப் போராட்டத்தைமுன்னெடுத்து போர்க்களம் புகுந்தவர்.

1977 இல் தெற்கில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகிய தமிழ் மக்களை கொழும்பில் முகாமகள் அமைத்து பாதுகாப்பதில் முன்னின்று செயற்பட்டதோடு தமிழர் தாயகத்தில் தஞ்சம் புகுந்தவர்களுக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், காந்தீயம் ஆகிய அமைப்புகளூடாக குடியேற்றங்களை ஏற்படுத்தி மறுவாழ்வு தந்தவர்.


1980 இல் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை (புளொட்) நிறுவி தமிழ மக்களின் வரலாறு காணாத பரந்துபட்ட வெகுசன, தொழிற்சங்க அமைப்புகளை உருவாக்கி விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்தியவர்.

இந்திய விஸ்தரிப்புவாதத்தின் பரிமாணங்களையும், நோக்கங்களையும், விளைவுகளையும் வங்கம் தந்த பாடம் மூலம் வெளிப்படுத்தியதோடு அந்நிய இராணுவத் தலையீட்டை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்தவர்.

விடுதலைப் புலிகளுக்கெதிராக இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதைப் பகிரங்கமாகவே எதிர்த்ததன் காரணமாக பல சோதனைகளையும, வேதனைகளையும் சந்தித்தவர்.

உமா என்று வாஞ்சையுடனும் முகுந்தன் என்று நட்புடனும் அழைக்கப்பட்ட அவரால் புளொட் அமைப்பின் அரசியல் பிரிவாக உருவாக்கப்பட்ட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாம அவரது வழியில் நின்று என்றென்றும உங்களுக்குச் சேவையாற்ற உறுதிகொண்டுள்ளோம.





## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

விளம்பர இலக்கம் 67664

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடந்த ஜூலை முதல் நவம்பர் வரை

# யாழ். மாவட்டத்துக்கு வெளியே 176 பேர் காணாமற்போயினர்

கடந்த 5 மாதங்களில் யாழ் மாவட்டத்துக்கு வெளியே 176 பேர் காணாமற் போனதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குத் தகவல்கிடைத்துள்ளது. இவர்களில் 91பேர் பொலிஸ் நிலையங்களிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதை மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டறிந்துள்ளது.

இவர்கள் 1997 ஜூலை மாதத்திற்கும்நவம்பர் மாதத்திற்குமிடைப்பட்ட காலத்தில் மாத்தறை, அம்பாறை அனுராதபுரம். கண்டி, பதுளை கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளில் இருந்து காணாமற்போயினர் என மனித உரிமை ஆணைக்குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட கால எல்லைக்குள் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோர் தொடர்பாக 634 முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ளன.

கடந்த நவம்பர் பிற்பகுதியில் தடுப்பு முகாம்களில் ஆயிரத்து 128 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். (ஐ-10)

பஸ்ஸில் பயணம் செய்த

# பிரதம நீதிவானுக்கு ஏற்பட்ட அனுபவம்

"நான் முன்னாள் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலன் நீர் எவராக இருந்தாலும் எனக்கென்ன இந்த அரசு ஆட்சியில் இருக்கும் வரை என்னை அசைக்க முடியாது"

இப்படி பிரதம நீதிவான் அமர சேன சில்வா மீது சீறி விழுந்தாரராம் பஸ் நடத்துனர் ஒருவர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுதவாவது :-

கொழும்பிலிருந்து களுத்துறை வரை சேவையில் ஈடுபடும் மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சொகுசு பஸ் ஒன்றில் பிரதம நீதிவானும் நீறுமொருவரும் கல்கிசையில் இருந்து பயணம் செய்தனர்.

நீதிவான் குறித்த பஸ் கட்டணத்தொகைச்செலுத்திய போதும் பஸ் நடத்துனர் 'ரிக்கெட்' வழங்கவில்லை.

பஸ் சிறிது தூரம் சென்றதும் நீதிவான் ரிக்கெட் வழங்குமாறு கேட்டபோது பஸ் நடத்துனர் வழங்க மறுத்து விட்டார்.

தான் கொழும்பு பிரதம நீதிவான் என தன்னை அவர் அறிமுகப்படுத்திய போதும் பஸ் நடத்துனர் பொருட்படுத்தவில்லை எனவும் தன்னைத் தூஷித்தார் எனவும் நீதிவான் களுத்துறைதெற்கு பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பஸ்ஸை களுத்துறை வடக்கு பொலீஸ் நிலையத்திற்குச் செலுத்துமாறு நீதிவான் சாரதிக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து நடத்துனர் பஸ்ஸில் இருந்து இறங்கித் தலைமறைவாகிவிட்டார். (இ-10)

## இலவச ஆங்கில வகுப்பு

திருநெல்வேலி காளிகோயிலடி சனசமூக நிலையம் மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்களை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி வகுப்பில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கு இலவச பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும். (ஐ-7)

## ஐ.நா. அபிவிருத்தி திட்டம் மார்ச் வரை

யாழ்ப்பாணம், ஜன. 17

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் கடந்த வருடம் அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தித்திட்ட நிதி ஒதுக்கீடுகளை எதிர்வரும் மார்ச் மாதம் வரை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் அந்த அமைப்பு 50 - க்கு மேற்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த நிதி உதவி வழங்கியிருந்தது.

கட்டடப் பொருள் தட்டுப்பாடு காரணமாக பல திட்டங்களை கடந்த ஆண்டுஇறுதிக்குள் பூர்த்தி செய்ய முடியவில்லை.

இத்திட்டங்களை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் பூர்த்தி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின்பே இவ்வாண்டில் புதிய திட்டங்கள் மேற்கொள்ள நிதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-5)

# மனைவியையும் மாமியையும் சுட்டுக்கொன்ற பொலீஸார்!

## தற்கொலை செய்ய முயற்சி

கந்தளாய் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலீஸார் ஒருவர் தனது மனைவியையும், மாமியாரையும் சுட்டுக்கொன்ற பின் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்ய முயன்றுள்ளார். அவரது துப்பாக்கிச் சூட்டினால் மாமனாரும், மைத்துனரும் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனது கடமைக்காக வழங்கப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்தியே பிரஸ்தாப பொலீஸ் நபர் தாக்குதலை நடத்தியுள்ளார்.

இச் சம்பவம் குறித்து கந்தளாய் பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ஐ-7)

# மோட்டார் வாகன லைசென்ஸ்: பிரிகேடியருக்கு அமைப்பு கடிதம்

மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் (லைசென்ஸ்) பெறுவது தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் குறித்து யாழ். சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

யாழ். மாவட்டத்தில் பொலீஸார் வீதிகளில் செல்லும் மோட்டார் வாகனங்களை மறித்துப் பரிசோதித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை காண்பிக்குமாறு கேட்டு வருகின்றனர். வீதிப்போக்குவரத்தைசரிவரமேற்கொள்ளுவதற்குச் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டியது அவசியம் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. ஆனால் எமது பிரதேசத்தில் கடந்த 8 அல்லது 10 வருடங்களாக நிலவிய யுத்த கால நிலைகளினாலும், அடிக்கடி ஏற்பட்ட இடப் பெயர்வுகளினாலும் பலர் தங்கள் மோட்டார் சாரதி அனுமதிப்பத்திரத்தை இழந்து விட்டனர். மூலப் பிரதி தொலைந்து போனதால் வேறு பிரதி எடுக்கவும் முடியாதுள்ளது. இந் நிலையில் புதிய அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு பலர் தங்கள் விண்ணப்பங்களை யாழ். அரசாங்க செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளனர். வாகனப் போக்குவரத்துப் பரிசோதகர் யாழ். மாவட்டத்துக்கு இதுவரை நியமிக்கப்படாதிருப்பதால் இந்த விண்ணப்பங்கள் அங்கு ஆயிரக்கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன.

இந்நிலையில் பரிசோதகர் ஒருவரை நியமனம் செய்து அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட பின்பு சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பொலீஸார் பரிசோதனை செய்வது முறையானது என்பதைத் தங்களின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றோம். விரைவில் வெற்றிடமாகவுள்ள மோட்டார் போக்குவரத்து வாகனப் பரிசோதகர் பதவியை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அதன் பின்பே அனுமதிப் பத்திரம் பரிசோதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-135)

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 12 — 09 — 1921



விண்ணில்; 17 — 01 — 1978

**அமரர் ஆ. க. ஆறுமுகம்தம்பி**

[Station Superintendent, C G R.Maradana]

[ரயில் நிலைய அத்தியட்சகர், C G R மருதானை]

ஆண்டுகள் இருபது கழிந்தாலும்
நினைவுகள் என்றென்றும் நீங்காத

அன்பின் மனைவி கமலா,
பெறாமக்கள், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மகள், மருமக்கள்.

274, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[52621]

## அம்பனில் வழங்க கோரிக்கை

வரணி, ஜன. 17

வடமராட்சி கிழக்கு பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர் விதைகள் மற்றும் கிருமிநாசினி போன்ற உள்ளீடுகளை இப்பிரதேசத்திலுள்ள அம்பன் கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்குமாறு வடமராட்சி கிழக்கு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலர் சி. பசுபதி தலைமையில் நடைபெற்ற போது இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக இப்பிரதேச பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான விதைகள் மற்றும் கிருமிநாசனி, உரம் போன்ற விவசாய உள்ளீடுகள் பல மைல் தூரத்திலுள்ள புலோலி கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றை எடுத்துவருவதில் நிலவும் போக்குவரத்துக் கஷ்டங்களை ஒட்டியே விவசாய அமைப்புக்கள் இக் கோரிக்கையை விடுத்துள்ளன. (இ-171)

# யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## 1998 ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத்தெரிவும்

**காலம்:- 24 - 01 - 98**

நேரம்:- காலை 9 - 30 மணி

**இடம்:- கழகப்பணிமனை முன்றல்**

முக்கிய குறிப்பு:- ஆண்டு ஐந்து புலமைப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 1996 (1995 விசேட பரீட்சை) 1997 புலமைப்பரீட்சைகளில் முதல் பன்னிரண்டு இடங்களைப் பெற்ற யாழ். மாவட்ட மாணவர்களைக் கௌரவிக்க இருப்பதனால் தகுதியுடையமாணவர்கள் தங்கள் அதிபரின் சிபாரிசுடன் 20 - 01 - 98 இற்கு முன்பாக கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அன்பான வேண்டுகோள்

1. அன்றையதினம் தங்கள் வர்த்தக நிறுவனங்களைப்பூட்டி சகல கழக அங்கத்தவரும் தவறாது சமுகமளித்து உங்கள் பூரண ஒற்றுமையைக் காட்டி வலுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.
2. அன்பான பொதுமக்களே அன்றையதினம் கடைகள் பூட்டப்படும் என்பதனால் முன்கூட்டியே உங்கள் தேவைகளை நிறைவுசெய்யுங்கள்.
3. அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களிக்கவும் தெரிவில் இடம்பெறவும் அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இல. 19, நவீனசந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம். (சி-2659)

அல்லற்பட்டுத் துயருற்ற எமது இனம்
புன்னகைத்து, முகம் மலர எமது கரங்களைப் பலப்படுத்துங்கள்!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

X

[ஈ-0018]

noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

புதிய Video Mixer MX20 (New Model), Fuji A3 Size Laminator (புதியது) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- திரு வீடியோ விஷன், கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(52574)

மூளாய்ஆஸ்பத்திரிக்குஅண்மையில் பிரதான வீதியில் எட்டு (8) பரப்புக்காணி ஒன்று விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு சங்கானை பார்மசி, சங்கானை.

[52635]

**தேவை**

வெல்டிங், மின் உபகரணங்கள் திருத்துவதற்கு (மோட்டார் வைண்டிங் உட்பட) தகைமையுடையோர். நேரில் வரவும். R.S. நுண் பட்டறை, 109, சட்டநாதர் வீதி, நல்லூர்.

[52637]

**ENGLISH LITERATURE**

G C E, O/L and A/L Tuition Offered By Experienced Teacher (Individual and Group) Apply:- No 679, C/o 'Uthayan' Jaffna. [52661]

**இறைச்சிக்கோழி**

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 141, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [52664]

**கோழி மருந்து**

18-01-98 ஞாயிற்றுக்கிழமை 11மணிக்கு கம்றோ, ரணிக்கெற் மருந்துகள் வழங்கப்படும். தேவையானோர் வந்து பெற்றுக் கொள்ளவும். ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் [52666]

**உடன் விற்பனைக்கு**

பிறிமா பிறவுண் வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு விலை ரூபா 50 மட்டுமே 1½ மாதம் வளர்ச்சியடைந்த பிறிமா பிறவுண் பேட்டுக் குஞ்சுகளும்விற்பனைக்குண்டு, மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [52667]

ஜேர்மன் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட டாஸ்சவுண்ட் நாய்க்குட்டிகள் (ஆண், பெண் 2மாதம் நிரம்பிய) விற்பனைக்குண்டு. மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [52668]

## அந்தியேட்டி மண்டபம்

யாழ்ப்பாணம், ஜன. 17

கைதடிப்பகுதியில் வசிக்கும் மக்களின் நன்மை கருதி கைதடி ஊற்றல் மயானத்திற்கு அண்மையில் அந்தியேட்டி மண்டபம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப பணிமனைக்கென ஒதுக்கிய பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியில் இருந்து இந்த அந்தியேட்டி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

கைதடி கிழக்கு சனசமூக நிலையம் மேற்படி மண்டப வேலைகளைப்பொறுப்பேற்று நடத்தியது. இம்மண்டபத்திற்கு அருகில் தூர்ந்து போயிருந்த கேணியும் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## தேவை

நெல்லியடியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எமது ஸ்தாபனத்துக்கு கணனி முறையிலான அச்சகத் தொழில் தெரிந்தவர்கள் இத்துறையில் விண்ணப்பிக்கவும். தொடர்பு:-

**ஜெகா மோட்டோர்ஸ்,**
**நெல்லியடி, பிரதான வீதி,**
**கரவெட்டி.**

[52665]

## 2-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 01 — 1928



மறைவு: 09 — 02 — 1996

### அமரர் சதாசிவம் கனகலிங்கம்

திதி: 17-01-1998

அன்புத் துணைவராய் பாசமிகு தந்தையாய் எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து இரண்டு ஆண்டு சென்றாலும் உங்கள் அன்பு நினைவலைகள் எம்மைவிட்டுநீங்காது.

\- குடும்பத்தினர்

நவரத்தின ராஜா வீதி,
கோண்டாவில். (சி-2656)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் நல்லதம்பி வல்லிபுரம்

[B. Sc., M Sc. (Dip. in Edu) S L E A S. III
முன்னாள் விரிவுரையாளர் பலாலி, அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை]

விதையில்: 01 - 06 - 1934 — சிதையில்: 18 - 12 - 1997

வீரிய விதைகளை விதைத்து
சீரியமாய் எமை வளர்த்தீர்களே!
அப்பாவின் இருப்பில் இறுமாந்திருந்தோமே
இப்போது ஏனப்பா பாதியிலே
நம்மைத் தவிக்க விட்டுச் சென்றீர்கள்?
ஏற்க முடியாத திடீர் இழப்பில்...
தாங்க முடியா வேதனைத் தவிப்பில்...
ஏங்கி நாம் மனங்கலங்கித் துடிக்க
எம் விழிகளும் கசிந்து வழிகின்றன.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள்,
உறவினர்கள்.

186/23, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (52652)

## நிலாவெளியில் மோதல் சிப்பாய் பலி! மூவர் காயம்!

திருகோணமலையில் செவ்வாய் நள்ளிரவு இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதலில் இராணுவ வீரரொருவர் கொல்லப்பட்டார்.

நிலாவெளி கோபாலபுரத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இரவு ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்த இத்தாக்குதலை நடத்தினர். இச்சம்பவத்தில் அதிகாரி உட்பட 3 இராணுவத்தினர் காயமடைந்ததாகப் பாதுகாப்புத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

---

வட்டுக்கோட்டை
அராலி மேற்கு கோட்டைக்காடு
நொச்சியப்பதி அருள்மிகு
முத்தவிநாயகர் ஆலய

## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஈசுர வருஷம் தைமாதம் (19-01-98) 6ஆம் நாள் திங்கட்கிழமை பகல் 10-30 மேல் 11 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

18-01-98 காலை 8 மணி முதல்
எண்ணெய்க்காப்பு

19-01-98 பகல் 10-50 கும்பாபிஷேகம்
தொடர்ந்து ஆசியுரை

பிரதிஷ்டா பிரதமகுரு:
சிவாகமவித்தியாஜோதி
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

அனைவரும் வருக! அருள் பெறுக!

ஆலய பரிபாலனசபை

விநாயகர் தொண்டர். (சி-2647)

## மக்கள் நலன்காக்கும் பிரிவு

**இருபாலைச்சந்தி**
**கோப்பாய்**

1. தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பு (தமிழ்) மக்கள் நலன்காக்கும் பிரிவும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் இணைந்து நடத்தும் தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி.

கல்வித் தகைமைகள்:- க. பொ. த (சா/த) பரீட்சையில் தமிழ் மொழியில் விசேட சித்தியும், கணித பாடத்தில் சாதாரண சித்தியும் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2 தையல் பயிற்சி வகுப்பு:

பாடசாலையை விட்டு விலகியோர், கணவனை இழந்த மகளிர், தொழில் அற்று தொழிற்கல்வி பெற விரும்புவோர்.

மேற்படி பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 31 - 01 - 1998

செயலாளர்

(52651)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 01 — 08 — 1942



மறைவு: 16 — 12 — 1997

### செல்வி தம்பிஐயா தவமணி

எம் நெஞ்சங்களில் என்றென்றும் அணையாத சுடராக ஒளி வீசும் எங்கள் குலவிளக்கே தங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்,
\- குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (52642)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 29 ஜனவரி 1998

## யாழ். குடா நாட்டில் வாழும் அன்புக்கினிய மக்களே!

### வணக்கங்கள்

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது எம் மவரிடையே நீண்டகாலமாக நிலவிவரும் நம்பிக்கை. அந்த நம்பிக்கையுடன் உங்களுடன் பேசவிழைகிறோம். யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் நீங்கள் இன்னும் சில தினங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக வாக்களிக்க வேண்டிய நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது, நொருங்குண்ட இதயங்களோடு நாளாந்த வாழ்க்கையை நகர்த்தும் உங்களுக்கு இந்த வாக்களிப்புக் கூட ஒரு சுமையாக இருக்கலாம்.

ஆனாலும் கூட இந்தத் தேர்தல் முக்கியமானது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள். ஏனெனில் உள்ளூராட்சி முறையில் பிரதேச சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர்—குடா நாட்டின் செம்மண்பரப்பெங்கும் படையினர் நிலைகொண்டபின்னர் — சோர்ந்த இதயங்களுடனும் இழப்புகளுடனும், பிரிவுகளுடனும் — பழைய இடங்களுக்கு வந்து சேர்ந்தபின்னர் — நடைபெறவுள்ள முதலாவது தேர்தல் வாக்களிப்பு இது எனவே இந்ததேர்தலில் மக்கள் சொந்த அபிப்பிராயங்களை வெளிப்படுத்தாமல் மௌனத்தைப் போர்த்திக் கொள்வது பொருத்தமானதாக இருக்காது என்றே நாம் கருதுகின்றோம்.

[illegible] செய்வதோ — வாக்குகளை செல்லுபடியற்றதாக்குவதோ ஜனநாயக ரீதியாக உங்கள் சமூகக் கடமைகளை அலட்சியம் செய்வதாகவே அமைந்துவிடலாம். அத்துடன் நீங்கள் விரும்பித் தெரிவு செய்யாத — அல்லது உங்களால் விரும்பப்படாத ஓர் உள்ளூர் நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்துவாழ வேண்டிய அவலமும். ஆபத்தும் ஏற்படலாம். ஆதலால் எந்தவித அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும் அடி பணியாமல் வார்த்தை ஜாலங்களுக்கும், மயக்கு மொழிகளுக்கும் இடங்கொடுக்காமல் தெளிவாகச் சிந்தித்து துணிச்சலான முடிவை மேற் கொள்வது தான் இப்போதைய அவசர, அவசியத் தேவை என்று நாங்கள் கருதுகின்றோம். எனவே கடந்த காலத் தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு எதிர் காலம்பற்றிய தூரநோக்குடன் சிந்தித்து நிகழ் காலத்தில் பொறுப்புணர்வுடன் செயற்படுபவர்களை இனங்கண்டு தெரிவு செய்வீர்களென்ற திடமான நம்பிக்கை எமக்குண்டு. இந்தமண்ணில் மக்கள் வாழ்வை மலரச்செய்வதற்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியராகிய எம்மை பூ சின்னத்திற்கு ஆதரவாகப் புள்ளடியிட்டு ஆதரிக்கும்படி உங்கள் ஒவ்வொருவரையும் பணிவன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

நன்றி. வணக்கம்.

ஈ. பி. ஆர் எல். எவ்.

- இந்த மண்ணில் மக்கள் வாழ்வு மலரவும்...
- உள்ளூராட்சி சபைகளில் உங்கள் பிரதிநிதிகள் பங்குபெறவும்...
- அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு காண்பதில் உண்மையான ஜனநாயக சக்திகள் பலம் பெறவும்...
- அச்சந்தரும் ஆயுதங்களின் நிழல் இந்த மண்ணிலிருந்து அகலவும்...
- ஜனநாயக சூழல் மலர்வதற்காக அத்திவாரமிடவும்...
- பரந்துபட்ட வெகுஜன அரசியல் தலைமையை உருவாக்கவும்...
- சாதாரண மக்கள் நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப் பாடுபடவும்...

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரை

## (E. P. R. L. F.)

## பூ சின்னத்துக்கு ஆதரவாக புள்ளடியிட்டு ஆதரியுங்கள்!

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

## (E. P. R. L. F.)

X

[விளம்பர இலக்கம் 67663]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் முகாமைச் சேர்ந்த மூன்று சிப்பாய்கள் கைது

## 22 கொள்ளைகளில் தொடர்பு

கொழும்பு, ஜன. 17

நாட்டின் பல இடங்களில் நடைபெற்ற 22 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக நொச்சியாகம பொலிஸார், புத்தளம் இராணுவ முகாமைச்சேர்ந்த 3 சிப்பாய்களையும் நொச்சியாகமத்துள்ள வர்த்தகர் ஒருவரையும் கடந்த 12 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற 22 கொள்ளைகளுடன் தொடர்பு உடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்ட சுமார் 10 லட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் தொலைக்காட்சிப்பெட்டிகள், மின் உபகரணங்கள், பெருந்தொகையான புடைவைகள், கொள்ளையடித்தநகைகளை வங்கியில் அடைவு வைத்த பற்றுச் சீட்டுகள், கொள்ளைக்குப் பயன்படுத்திய வான் மற்றும் லொறி ஆகியனவற்றையும் பொலீசார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் இராணுவ முகாமைச் சேர்ந்த மேலும் 10 சிப்பாய்கள் இந்தக் கொள்ளைகளில் தொடர்புடையவர்கள் எனவும் அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் நொச்சியாகம பொலீசார் தெரிவித்தனர்.

(ஐ-10)


## சிவாச்சார்யார் (குருக்கள்)
அல்லது
## பூசகர் தேவை

அனலைதீவு எழு மங்கை நாச்சிமார் (அம்மன்) ஆலயத்திற்கு நன்கு அனுபவம் வாய்ந்த குருக்கள் அல்லது பூசகர் தேவை 5-2-98 வியாழனுக்கு முன் கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இல. 680, மே/பா உதயன்

அறங்காவலர் சபை
(அம்பாள் தேவஸ்தானம்)

(52682)



## நாவலர் கலாஷேத்திரம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கீழைத் தேய, மேலைத் தேய
## இசை வகுப்புக்கள்
ஆரம்பம்: 18 - 01 - 98
ஞாயிறு (நாளை) காலை 10 மணி

★ நடனம் ★ கிற்றார்
★ வாய்ப்பாட்டு ★ ஓர்கன்
★ வயலின் ★ மனோடிக்கா
★ மிருதங்கம் ★ டிறம்
★ வீணை ★ சித்திரம்
★ புல்லாங்குழல்

(52671)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11 — 01 — 1924

உதிர்வு: 30 — 12 — 1996

### திருமதி ஆறுமுகம் தங்கச்சியம்மா

திதி: 17 - 01 - 1998

அன்பின் வடிவமே! ஆருயிர் அம்மம்மாவே!
நாம் இங்கு கூடி மகிழ்கையில்
ஊர் விட்டு ஊர் சென்ற தங்களை
பார்விட்டு அகற்றினானே காலனவன்
பிறப்புளதே இறப்புமுண்டு தெரிந்தே யாம்
கண்ணீர் விட்டுக் கதறி அழுதோம் யாம்
ஆண்டு ஒன்றுதான் சென்றாலும்
ஆறவில்லை ஆறவில்லை எம் நெஞ்சம்தான்
ஆறவில்லை.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

தகவல்:-
சு. நந்தகுமார், (நாதன்)
மானிப்பாய்.

(சி/[illegible])

## பொங்கல் விழா

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம் நடத்தும் பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குழந்தை ம. சண்முகலிங்கம் தலைமையில் கலாமன்ற அரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து வழங்கும் ''சத்தியவான் சாவித்திரி'' இசைநாடகம் சிறப்புநிகழ்ச்சியாக இடம்பெறும். (ஐ-4)

## புனருத்தாரணம்

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தானத்தில் பல இலட்சம் ரூபா செலவில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களினால் இவ்வாலயத்தின் பலபகுதிகள் சேதமடைந்ததைத் தொடர்ந்தே பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-7)

## புலிகளின்...

(மூன்றாம் பக்கத்தொடர்)

வாய்ப்புக் கிட்டும்.

கனகராயன் குளத்தை படையினர் கைப்பற்றிய சமயம் அங்கு புலிகளின் பலத்த எதிர்ப்புக் கிட்டவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் குறிப்பிட்டன.

புலிகளின் கேந்திர நிலையங்களில் ஒன்றான மாங்குளத்திலிருந்து ஆக 11 கிலோ மீற்றர் தொலைவிலேயே கனகராயன் குளம் உள்ளது. அந்தப் பிரதேசத்தை திடீரென எதிர்ப்பின்றி படைகளுக்கு புலிகள் விட்டுக் கொடுத்தது ஏன் என்பது படை வட்டாரங்களையும் இராணுவ ஆய்வாளர்களையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியிருக்கின்றது.

கனகராயன்குளத்தை அடைவதற்கு கடந்த ஒக்ரோபரில் ஒரு முயற்சியை படையினர் எடுத்தனர். அதற்காக கரப்புக்குத்தி, கற்இடங்கு பகுதிகள் ஊடாகப் படையினர் முன்னேற முயன்றனர். ஆனால் அந்த இரு பிரதேசங்களுக்கும் எதிர்ப்பின்றி படைகள் முன்னேற அனுமதித்த புலிகள், படையினரை அப்பிரதேசத்தில் நிலைகொள்ள விட்டு அவர்களை முற்றுகையிட்டு தாக்கி, படைகளுக்கு பேரழிவை ஏற்படுத்தியதோடு, அவர்களின் விநியோக மையத்தையும் கைப்பற்றி பெருந்தொகை இராணுவத் தளபாடங்களையும் எடுத்துச் சென்றனர்.

அத்தகைய ஒரு திட்டத்துடன்தான் இப்போதும் கனகராயன் குளத்துக்கும் எதிர்ப்பின்றி படைகள் முன்னேறுவதற்கு புலிகள் அனுமதித்தனரா என்ற ஒரு கேள்வி இயல்பாகவே எழுகின்றது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்— அடுத்த 18 நாள்களுக்குள்— தரைவழி விநியோகப்பாதை திறக்கப்பட வேண்டும். என்று கட்டளையிட்டிருக்கின்றார்.

அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில்—

அந்தப் பாதையில் ஒரு முக்கிய இடத்துக்கு எதிர்ப்பின்றி படையினர் முன்னேற புலிகள் அனுமதித்திருப்பது பல்வேறு ஊகங்களையும் கிளப்பியுள்ளது.

★


## விற்பனைக்கு

ஜெனரேற்றர் Kubota (1800 W), வீடியோ கமெரா பற்றரிகள், வீடியோ பல்ப் (1000 W) Cutfilm (P. C. Size)

## யோகா

78, காங்கேசன்துறை வீதி,
[illegible]

([illegible])


## திரை அரங்கு

யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு வாசலுக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியின் மையத்தில் உள்ள வேப்ப மரத்தின் கிளைகள் மழைக்காலத்தை முன்னிட்டு தறிக்கப்பட்டுள்ளன. அந்த வேப்பமரத்தில் புளொட் அமைப்பின் தேர்தல் பிரசார பதாகை ('பனர்') பெரிய 'சைஸில்' கட்டப்பட்டுள்ளது.

அதில் ஒரு புதுமை ஒரு சமுத்திரத்தின் பின்னணியில் மலைகள் சமுத்திரத்தின் மேல் தெளிவாகத் தெரியக் கூடியதாக. 'புளொட்' அமைப்பின் தேர்தல் சின்னமான நங்கூரம். அதில் என்ன புதுமை என்றா கேட்கின்றீர்கள்? அந்த மலைகளுக்கு நடுவே இருந்து 'உதய சூரிய' எழுந்து வருவதுபோல காட்டப்படுவதுதான் புதுமை. 'உதய சூரியன்' — தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னம். அந்த பனரில் நங்கூரத்துக்குக் கொடுத்தளவு முக்கியத்துவம் உதய சூரியனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

யாழ். மாநகர சபைக்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கும் போட்டியிடுவதற்கு கூட்டணி சமர்ப்பித்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் ஆட்சேபனை வழக்குகளின் மீது தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் இந்த பனர்கள் கட்டப்பட்டன.

அப்போது 'புளொட்' சொல்ல வந்த செய்தி என்னவென்பது மக்களுக்குப் புரிந்தது. ஆனால் கூட்டணியின் வேட்புமனு ஏற்கப்படுவதை நீதிமன்றத்தில் எதிர்த்துக் கொண்டு உதய சூரியன் சின்னத்தையும் தங்கள் தேர்தல் பிரசார பனரில் சேர்த்ததுதான் மக்களுக்குப் புரிந்திருக்கவில்லை.

இப்போது தீர்ப்பு வெளியாகிவிட்டது. கூட்டணியையும் தேர்தல் களத்தில் சேர்க்கும்படி உத்தரவாகிவிட்டது. இனி அந்த பனரை என்ன செய்யப் போகின்றார்கள்?

பிந்திய தகவல்: நேற்று மாலை அந்த உதயசூரியன் மறைந்துவிட்டது

★ ★ ★

ஆசிரியர் சேவைக்கு ஆள்களைத் திரட்டும் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்காக அண்மையில் நடந்த நேர்முகப் பரீட்சைகளை வேலையற்ற பட்டதாரிகள் தடுத்து போராட்டம் நடத்தியதும் —

ஈ. பி. டி. பியின் எம். பிக்கள் தலையிட்டு சமரசமாக தீர்த்து வைத்ததும் குடாநாட்டு மக்கள் அறிந்ததே. வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினையை சமூகம் அனுதாபத்துடன் நோக்குகின்ற போதிலும், தமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அவர்கள் நாடிய போராட்ட வழிமுறை சமூகத்தின் பல மட்டங்களிலும் அவர்களுக்கு எதிரான அதிருப்தி அலைகளைத் தோற்றுவித்ததை அவதானிக்க முடிகிறது.

பரீட்சை எழுதி சித்தியடைந்து, பட்டதாரிப் பட்டத்தை அவர்கள் பெற்றது போல, ஆசிரியர் நியமனம் பெறுபவர்களும் ஆசிரிய தெரிவுப் போட்டிப் பரீட்சை எழுதி சித்தியடைந்தவர்களே.

ஏதோ அவர்களின் போராட்டம் காரணமாகவோ அல்லது எம். பிக்களின் முயற்சி காரணமாகவோ, அல்லது அரசாங்கத்தின் 'அனுதாபப் பார்வை' காரணமாகவோ அவர்கள் இப்போது வேலை பெறப்போகின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் இயன்ற வரையில் வேலைகளை வழங்க ஏற்பாடுகள் நடப்பதாகத் தகவல். நல்லது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் வேலை வங்கியில் பெயர்களைப் பதிவு செய்து விட்டு வேலைக்காக காத்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 22 ஆயிரத்து 928. இவர்களில் ஆக அறுநூறு பேர்தான் பட்டதாரிகள்.

தங்களில் 22 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பெயர்களைப் பதிவு செய்து விட்டு வேலைக்கு நீண்டகாலம் காத்திருக்கையில் பட்டதாரிகளுக்கு மட்டும் வேலை வழங்குவதா என்று கேட்டு ஏனையோர் போய், பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் நேர்முகப் பரீட்சையைத் தடுத்தால் எப்படியிருக்கும்? அது நீதியற்ற— பொறுப்பற்ற—செயலாகவே இருக்கும்.

அது போல ஆசிரியர் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதை தடுக்க முயன்ற செயல் — என்ன காரணத்துக்காகவும் தடுத்த நடவடிக்கை — பொறுப்பற்ற போக்காகவே கருதப்படமுடியும்.

- மின்னல்

### சுரேஷ் மாணிக்கவாசகத்தை

# இலங்கைக்கு நாடுகடத்துவதற்கு புளொட் அமைப்பு ஆட்சேபம்

கனடாவில் சிறை வைக்கப்பட்டுள்ள உலகத் தமிழர் இயக்க கனடா பொறுப்பாளரை இலங்கைக்கு நாடு கடத்த கனடா அரசு எடுத்த முடிவைகண்டித்து ஆட்சேபம் தெரிவித்து புளொட்அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;—

யாழ். நகரில் காணாமற் போன 600 பேரின் நிலை என்னவென்று ஒரு முடிவு சொல்ல முடியாமல் இலங்கை அரசு இருக்கின்றது என்பதையும், தென்பகுதியில் தமிழர் என்ற காரணத்தினால் முறையற்ற முறையிலும், கண்மூடித்தனமான முறையிலும் வகை தொகையின்றி கைது செய்யப்படுவதையும் நன்கு தெரிந்து வைத்துள்ள கனடா அரசு புலிகளின் வெகுசனப் பிரிவில் பணியாற்றுகின்ற சுரேஷ் மாணிக்கவாசகத்தை நாடு கடத்துவது அறிவுபூர்வமான விடயமல்ல.

சுரேஷ் மாணிக்கவாசகத்தை கனடாவில் இருந்து வெளியேற்ற முடியுமே தவிர இலங்கைக்கு நாடுகடத்த வேண்டுமென்று முடிவுசெய்யுமளவுக்கு அவர் இலங்கைக்கு தேவையான குற்றவாளி அல்ல. இதனடிப்படையில் கனடா அரசு சுரேஷ்மாணிக்கவாசகத்தை கனடாவில் இருந்து குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர் விரும்பும் இடத்துக்கு சுயமாகவே செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு ஒன்றுபட்டு ஒத்துழைப்போம்

## டக்ளஸ் தேவானந்தா அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன 17

விளையாட்டுத் துறையில் பெருமை பேசுவதை விட ஆரோக்கியமானதும், அறிவு பூர்வமானதுமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே அதன் நோக்கமாக அமைய வேண்டும். அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் விளையாட்டுத்துறைக்கு அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்குவது மிகப் பொருத்தமானது.

ஈ. பி. டி. பி அமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு செல்லும் யாழ் மாவட்டக் கிரிக்கெட் அணியினருக்கு திரு தேவானந்தா நேற்று முன்தினம் தேநீர் விருந்துபசாரம் வழங்கினார். அந்த வைபவத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையைப் புனரமைக்கவும் அபிவிருத்தி செய்யவும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நாம் ஏற்கனவே விளையாட்டுத் துறை அமைச்சுடன் பேசிய தன் பேரில் 50 லட்சம்ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும் பெற்றுள்ளோம்,

யாழ். குடாநாட்டில்விளையாட்டுத் துறையை வளர்ப்பதற்கும், நெறிப்படுத்துவதற்கும் விளையாட்டுத்துறை சார்ந்த சகல தரப்பினரையும் ஒருங்கிணைத்து குழு ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் குழு சுதந்திரமாக இயங்கும். இந்தக் குழுவுக்கு எம்மாலான உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம் — என்றார்.

யாழ் கிரிக்கெட் அணிக்கு 15 ஆயிரம் ரூபா ரொக்க அன்பளிப்பையும் அவர் வழங்கினார்.

இதற்கிடையில் —

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 600 பட்டதாரிகள் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துத் தங்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

மிக விரைவில் அவர்களது வேலைவாய்ப்புப் பிரச்சினைகளுக்கு ஒரு சுமுகமான முடிவு காண்பதாக அவர்களிடம் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

(ஐ)

# சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான ஒப்பந்தம் கைச்சாத்து

## முதலில் ஒப்பமிட்ட நாடு இலங்கை

நியூயோர்க், ஜன. 17

பயங்கரவாத குண்டுத்தாக்குதல்களில் குற்றவாளிகளாகக் கருதப்படும் அல்லது சந்தேகிக்கப்படும் நபர்களை ஒரு நாட்டில் இருந்து இன்னுமொரு நாட்டுக்கு நாடு கடத்துவதற்கும் கைது செய்து சம்பந்தப்பட்ட நாடுகளிடம் கையளிக்கவும் உறுதியளிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது தொடர்பான தீர்மானம் கடந்த வருடம் டிசம்பர் 15 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இந்த இணக்கத் தீர்மானத்தில் முதன் முதலாக இலங்கை அரசின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதி டி சில்வா கைச்சாத்திட்டார். அதே தினத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, கனடா ஆகிய நாடுகளும் கைச்சாத்திட்டன.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கையின் நிலைப்பாட்டை இது உணர்த்துகின்றது என்று வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இணக்கம் தெரிவித்து கைச்சாத்திட்ட நாடுகள் 30 தினங்களுக்குள் தமது இணக்கத்தை உறுதி செய்யவேண்டும். இணக்கம் உறுதி செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட நாடுகள் ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு செயற்படவேண்டும்.

[ஐ]

# 200 ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜன 17

குறிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள அரச பாடசாலைகளில் தமிழ் மொழி மூல ஆசிரியர் நியமனங்களை வழங்கும் திட்டத்தின்கீழ் யாழ் மாவட்டத்தில்இருந்து தெரிவு செய்யப்பட்டோருக்கு தற்காலிக நியமனக் கடிதங்கள் தபால் மூலம் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள்எதிர்வரும் 26 ஆம் திகதி கல்வித் பிரிவு கல்விப்பணிப்பாளரைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்- இவர்களுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் மூன்று வார காலத்துக்கு சேவைக்கால முன் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அப்பயிற்சியின் முடிவில் அவர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூலமான ஆயிரம் ஆசிரிய நியமனங்களை வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 500 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. அவர்களில் இந்த 200 பேரும் அடங்குவர்.

(ஐ)

# தி. மு. க. கூட்டணிக்கு ரஜனி ஆதரவு!

சென்னை, ஜன. 17

இந்தியப் பொதுத்தேர்தலில் தமிழகத்தில் தி.மு.க. — த.மா.கா. கூட்டணிக்கு தாம் ஆதரவளிப்பதாக பிரபல நடிகர் ரஜனிகாந்த் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் லட்சக்கணக்கான ரசிகர்களைக் கொண்டுள்ள நடிகர் ரஜனிகாந்த் கடந்த 1996இல் நடந்த தேர்தலிலும் தி.மு.க. — த.மா.க. கூட்டணிக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க., த.மா.க. கூட்டணி உருவாக தாமும் ஒரு விதத்தில் காரணம் என்பதால் தாம் இந்த முடிவை எடுத்ததாக ரஜனிகாந்த் தமது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். எனினும் கூட்டணியை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபடுவாரா என்பது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

(ஐ)

## நாளை

**தை 5**

ஞாயிற்றுக்கிழமை

திதி: ஷஷ்டி

முழுநாளும்

நட்சத்திரம்: உத்தரம்

மாலை 6.35 வரை.

சுபநேரம்: 9 35 11.05

ராகுகாலம்: 5 05 6 35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# பாடசாலை பஸ்ஸில் வீழ்ந்த கிரனேட்

மட்டக்களப்பு, ஜன.17

மட்டக்களப்பு மாவட்டம் பாலமீன்மடுப் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பாடசாலை மாண

(10ஆம் பக்கம் பார்க்க)


நாமும் சுற்றாடலும்
ஆண்டு 2
புதிய பாடத்திட்டம்

பாடத்திட்டத்துக்கு அமைய ஒழுங்குமுறையில் உப அலகுகட்கும் விரிவான விளக்கங்களையும், அதிக பயிற்சிகளையும் உள்ளடக்கியது.

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
[52678]



நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி
01. 02. 1998 - 31. 07. 1998 வரை
சந்தைகள், இறைச்சிக் கடைக்கான பகிரங்க குத்தகை ஏல விற்பனை
அறிவித்தல்

இதன் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற குத்தகைகளை 1 - 2 - 1998 தொடக்கம் 31 - 7 - 1998 வரையிலான காலப்பகுதிக்கு குத்தகையாக வழங்குவதற்கான பகிரங்க ஏல விற்பனை நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப-அலுவலக காரியாலயத்தில் 22 - 1 - 1998 காலை 10.30 மணிக்கு நடைபெறும். அத்தருணம் குத்தகை எடுக்க விரும்புவோர் நேரில் சமூகம் தந்து ஏலத்தில் பங்குபற்றலாம்.

ஏலத்தில் தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் குத்தகைத் தொகையின் ½ பங்கினை உடனடியாக அவ்விடத்தில் வைத்துச் செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 3 சம பங்குகளாகப் பிரித்து 1998 பங்குனி மாதத்திலிருந்து 3 மாதங்களுக்குள் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் சபையுடன் குத்தகை ஒப்பந்தம் ஒன்றினையும் செய்து கொள்ளுதல் வேண்டும்.

சி. வேன்முருகோன்பிள்ளை
நல்லூர்பிரதேச சபை விசேடஆணையாளர்.
15-1-1998.

குத்தகையின் பெயர்

1) கோண்டாவில் ஸ்ரேசன் சந்தை
2) ஆட்டிறைச்சிக்கடை
கொக்குவில் உப - அலுவலகம்,
ஆட்டிறைச்சிக்கடை.
3) மாட்டிறைச்சிக்கடை
1. சாளியப்பிட்டி அரியாலை,
மாட்டிறைச்சிக்கடை.
2. கோயில் தோட்டம்,
மாட்டிறைச்சிக்கடை.
(சி/2664)



Courses Commence on 24th January 1998

MICROSOFT APPLICATIONS

Advanced Diploma in MS Windows 95 Applications

MS WINDOWS 95
MS EXCEL
MS PROJECT
MS POWER POINT
MS DOS
MS WORD 97
MS ACCESS
MS PUBLISHER
MS SCHEDULE +

Duration: 8 Months
Basic Qualification: Degree/ Good Passes at A/L

Diploma in MS Windows 95 Applications

MS WINDOWS 95
MS EXCEL
MS DOS
MS WORD 97
MS ACCESS
MS POWER POINT

Duration: 6 Months

Certificate Course in

MS WINDOWS 95
MS POWER POINT
MS WORD 97
MS EXCEL
MS ACCESS
MS DOS
Lotus
Dbase iii +
Pascal
Basic

DCS
BRITISH ACP RECOGNIZED
Computer Training Centre
124/2, Palaly Road, Thirunelvely, Jaffna.

COLOMBO
[illegible] Galle Road,
Colombo - 4

BATTICALOA
[illegible] Bar Road,
Batticaloa.

VAVUNIYA
18A, 2nd Cross Street,
Vavuniya.

TRINCOMALEE
156, Green Road,
Trincomalee

(52688)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திக்கம் ஆலைக்கு ரூ. 2½ கோடி மிச்சம்!

திக்கம் சாராய வடி சாலைக்கு ஜனாதிபதியால் அளிக்கப்பட்டுள்ள வரிச் சலுகை மூலம் இவ்வாண்டு இறுதிக்குள் இரண்டரைக் கோடி ரூபா மிச்சப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

ஈ. பி. டி. பி. நாடாளு மன்ற உறுப்பினர்கள் கடந்த 29 ஆம் திகதி ஜனாதிபதியு டன் நடத்திய பேச்சுக்களின் போது விடுக்கப்பட்ட கோரிக் கையையடுத்தே ஜனாதிபதி வரிச்சலுகை வழங்கும் உத் தரவை விடுத்தார்.

இந்த வரிச்சலுகையின் கீழ் கடந்த வருடம் இறுதிக் காலாண்டுக்கான வரிவிலக் கப்பட்டதால் 45 லட்சம் ரூபா மிச்சமாகியது.

இவ்வாண்டுக்கான வரிச் சலுகையால் இரண்டு கோடி ரூபா மிச்சப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின் றது. (உ-3)

# கப்பலில் ஏறும் சமயம் கடலில் வீழ்ந்த மூதாட்டி

யாழ்ப்பாணம், ஜன. 17

எவரது உதவியும் இன்றி கப்பலில் திருமலைக்கு செல் வதற்காக காங்கேசன்துறை சென்ற 83 வயது மூதாட்டி ஒருவர் கப்பலில் ஏறும் சமயம் கடலுக்குள் வீழ்ந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக் குத் தெருவைச் சேர்ந்த அந் தோனிமுத்து பொன்னம்மா என்ற மூதாட்டியே இவ்வாறு கடலுக்குள் வீழ்ந்தார்.

கடந்த 11ஆம் திகதி கப் பலில் திருமலைக்கு செல்வ தற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ். சிவில் நிர்வாக அலுவலக பஸ்ஸில் தனியாக இவர் காங்கேசன்துறைக்குச் சென்றார்.

அங்கு கப்பலில் ஏறும் போது அவர் தவறிக் கடலுக் குள் வீழ்ந்தார்.

உடனடியாக கடற்படை யினர் அவரை மயக்கநிலை யில் மீட்டு காங்கேசன்துறை கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

மயக்கம் தெளிந்த அவரை யாழ். செயலக அதிகாரிகள் அழைத்து வந்து யாழ்ப்பா ணத்தில் அவரது உறவினர் களிடம் மீள ஒப்படைத்தனர். (உ-3)

## நூல் நிலைய திறப்பு விழா

# பாதுகாப்புப் படை சார்பில் நன்றி தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 17

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் பொது நூலகத்தை திறப்பதற்காக உதவி புரிந்த அரசாங்க அதி காரிகள், பொதுமக்கள், பாட சாலை மாணவ, மாணவிகள் மற்றும் நூல் நிலைய திறப்பு விழாவில் கலந்து கொண்ட சமயத் தலைவர்கள் ஆகி யோருக்கு பாதுகாப்புப் படை யினரின் சார்பில் நன்றி தெரி விக்கும் அறிக்கை ஒன்றை பலாலி இராணுவத் தலை மையகம் நேற்று வெளியிட் டது. (உ-3)

### ஆயுதங்...

(முதலாம் பக்கத் தொடர்)

இச்சந்திப்பில் தெரிவிக்கப் பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

★ வன்முறைகள் அற்ற — ஜனநாயக — முறையில் தேர் தல்கள் நடைபெற அனைத் துத் தரப்பும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

★ தேர்தல்களில் இராணு வம் வழமையாக தலையிடு வதில்லை என்றாலும், இங் குள்ள சூழ் நிலையைக் கருத் தில் கொண்டு இராணுவம் பொலிஸாருடன் இணைந்து பணியாற்றும்.

★ நெடுந்தீவில் நாளை (சனிக்கிழமை) இராணுவம், கடற்படை, பொலிஸார் ஆகி யோர் கூட்டாக இணைந்து முகாம் ஒன்றை அமைப்பார் கள் அந்த முகாம் தேர்தல் முடியும் வரை இயங்கும்.

★ தீவுப்பகுதியில் நயினா தீவு தவிர்ந்த ஏனைய இடங்க ளில் அரசியல்கட்சிப் பிரமுகர் கள் தங்கியிருந்து பிரசாரம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

— என்று தீர்மானிக்கப் பட்டது.

நயினாதீவிலும் தங்கி யிருந்து பிரசாரம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று சகல கட்சிகளும் கோரின.

ஆனால் அங்கு போதிய பாதுகாப்பு இல்லையாதலால் அனுமதிக்க முடியாதுள்ள தாகத் தெரிவித்த பாதுகாப்பு அதிகாரிகள், இது விடயமாக கடற்படைத் தளபதியுடன் கலந்தாலோசித்து பதில் தரு வதாக உறுதி கூறினர். (உ-3)

### பாடசாலை..

(9 ஆம் பக்கத் தொடர்)

வர்களின் பஸ்ஸில் மாணவ ருடன் பயணம் செய்த மூன்று பொலிஸாரில் ஒருவரின் கிர னேட் தவறி பஸ்ஸுக்குள் வீழ்ந்ததால் பஸ்ஸில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஆனால் அந்த கிரனேட் வெடிக்காததால் சேதம் தவிர்க்கப்பட்டது. (உ-3)

இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்.
முன்னாள் தலைவர்
ஆத்மஜோதி நா. முத்தையா
அவர்கள் ஞாபகார்த்த மலர்
★ வெளியீட்டு விழா ★
இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கு
காலம்: 18 – 01 – 1998 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அருட்கவி சீ. விநாசித்தம்பி — தலைவர்
சி. சக்திகிரீவன் — கௌரவ செயலாளர்
இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாணம்.
375, கோயில் வீதி, நல்லூர்.
(52685)

# கிட்டுவின் நினைவு தினம்

மட்டக்களப்பு, ஜன 17

வங்கக்கடலில் களப்பலி யான விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளுள் ஒருவ ரான கிட்டுவின் 5 ஆவது நினைவு தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில், நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கொக்கட்டிச் சோலையில் விசேட நிகழ்ச்சிகளுடன் நேற்று முழுநாளும் நினைவு தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதாக அங் கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

# சாவகச்சேரியில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஜன 17

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று மாலை 5-45 மணி அளவில் பிரசார நடவடிக் கையை முடித்துக்கொண்டு ஓரிடத்தில் தங்கியிருந்த அர சியல் கட்சி ஒன்றின் உறுப் பினர்கள் மீது கிரனேட் வீசப்பட்டதாகத் தெரிய வந்தது.

இச்சம்பவத்தில் காய மடைந்த பொதுமகன் ஒரு வர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பி னார். (உ-3)

# கண்காட்சி

வடமராட்சி, ஜன. 17

கரவெட்டி பிரதேச செய லகப் பகுதியில் கரணவாய் மத்தியில் கிராம அபிவிருத் தித் திணைக்களத்தால் நடத்தப்பட்டு வந்த தையல், மனையியல் பயிற்சி வகுப்பின் தையல், மனையியல் கண் காட்சியும் சான்றிதழ் வழங் கும் விழாவும் இன்று கர வெட்டி பிரதேச செயலர் எஸ் ஸ்ரீனிவாசன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ். அர சாங்க அதிபர் திரு. கே சண் முகநாதன், வடக்கு —கிழக்கு மாகாண கிராம அபிவிருத் தித் திணைக்களப் பணிப் பாளர் திருமதி ஜே. முரளி தரன், யாழ். மேலதிக அர சாங்க அதிபர் து. வைத்தி லிங்கம், வடக்கு — கிழக்கு மாகாண யாழ். செயலக இணைப்பதிகாரி வி. வீரபத் திரபிள்ளை ஆகியோர் விரு தினர்களாக கலந்து கொள் வர். கரவெட்டி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பஞ்ச லிங்கம் வரவேற்புரையையும் தையல் பயிற்சி போதனா சிரியை செல்வி ஏ. பவானி நன்றியுரையையும் வழங்கு வார்கள். (உ-173)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

யாட்டுப் பயிற்சி முகாமிலும் இந்த அணியினர் பங்கு பற்று வார்கள்.

கொழும்பு செல்லும் இந்த அணியில் 19 வீரர்களும், 5 அதிகாரிகளும் அடங்குகின் றனர்.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவரும், யாழ்.வர்த் தக வங்கி முகாமையாளரு மான எஸ். வி ரஜீவன் யாழ். கிரிக்கெட் அணிக்கு முகாமையாளராகச் செயற் படுவார்.

எம். எஸ். தயாளன் யாழ். கிரிக்கெட் அணிக்கு தலைமை வகிக்கின்றார்.

இந்த அணியை கொழும் புக்கு அனுப்புவது மற்றும் ஏற்பாடுகளை யாழ். நகர இராணுவத்தளபதி பிரிகேடி யர் சுஸந்த மெண்டிஸ் செய் துள்ளார். (உ-5)

### 7 பிரதித்...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைக்கப்பட்டுள்ள விசேட தேர்தல் அலுவலகத்தில் ''பக்ஸ்'' சேவை உட்பட சகல வசதிகளும் செய்யப்பட் டுள்ளன.

அத்துடன் அந்த அலுவல [illegible] டுள்ளது. (உ-3)

# திருச்சபையில் மீண்டும் திஸ்ஸ பாலசூரியா!

அருட்தந்தை திஸ்ஸ பால சூரியாவைக் கத்தோலிக்க திருச்சபையில் இருந்து வெளி யேற்றுவது என முன்னர் விடுக்கப்பட்ட ஆணை மீளப் பெறப்பட்டுள்ளது.

கொழும்பில் நான்கு நாள் களாக இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளை அடுத்து கடந்த வெள்ளியன்று இந்த முடிவு எடுக்கப்பட்டது. கத் தோலிக்க திருச்சபைக்கும் அருட்தந்தை திஸ்ஸ பால சூரியாவுக்கும் இடையே எட்டப்பட்ட இணக்கத்திற்கு அமைய இந்த ஆணை மீளப் பெறப்பட்டதாகக் கத்தோ லிக்க திருச்சபைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அருட்தந்தை திஸ்ஸ பால சூரியா எழுதிய 'மேரியும் மனித விடுதலையும்' என்ற நூலில் கத்தோலிக்க அடிப் படை வாதங்கள் குறித்து சந்தேகங்களை எழுப்பிய காரணத்தினால் 1997 ஜன வரி மாதத்தில் அவர் கத் தோலிக்க திருச்சபையில் இருந்து வெளியேற்றப்பட் டார். [உ]

# சில அரச பாடசாலைகள் தனியார் மயமாக்கப்படும்?

ஒரு சில பாடசாலைகளை அரசின் நிர்வாகத்தில் இருந்து தனியாரிடம் கையளிப்பது என அரசு முடிவெடுத் துள்ளதாக ''லக்பிம'' சிங்கள வார இதழ் செய்தி வெளி யிட்டுள்ளது.

ஜாஎலவிலுள்ள தெஹியாகான றோமன் கத்தோலிக்க-சிங்கள ஆண்கள் பாடசாலையின் சொத்துக்களை அரச நிர் வாகத்தில் இருந்து விடுவிப்பது தொடர்பாகக் கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு விடுவிக்கப்படும் பாடசாலை கட்டடங்கள் தனியார் பாடசாலைகளை நடத்துவதற்காக விகாரைகளி டம் அல்லது பள்ளிவாசல்களிடம் அல்லது தேவாலயங்களிடம் கையளிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார் என அப் பத்திரிகை தெரிவிக்கிறது.

பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறையு மாயின் அப் பாடசாலைகளை மூட நேரிடுகிறது. அதன் பின் னர் அந்தப் பாடசாலைக் கட்டடங்களை வீணாக வைத்தி ருப்பதிலும் பார்க்க தனிப்பட்ட வகுப்புகளை நடத்திவரும் விஹாரைகளுக்கோ அல்லது பள்ளிவாசல்களுக்கோ அல்லது தேவாலயங்களுக்கோ வழங்குவதில் தவறு ஏதுமில்லை என அமைச்சர் தெரிவித்தார்.

சில பாடசாலைகளில் கடமையாற்ற ஆசிரியர்கள் விரும் புவதில்லை. அதே போல் சில பாடசாலைகளில் கல்வி கற்க மாணவர்கள் விரும்புவதில்லை. பாடசாலைகளில் மாணவர் கள் போதாத நிலையில் அப்பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்துவது அப்பாடசாலைகளுக்கு அரச நிதியைச் செலவு செய்வது வீணாகும். எனவேதான் இத்தகைய பாடசாலை களை விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார். (ஜ-10)

# படையினரின் ஒழுக்கம் பேணும் ஆண்டாக 1998 பிரகடனம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

1998 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் ஒழுக் கக் கட்டுப்பாடும் நிர்வாகமும் நிறைந்த ஆண்டாகப் பிர கடனம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் கடும் ஒழுக் கக்கட்டுப்பாட்டை பேணப்போவதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தலுவத்த உறுதியளித் துள்ளார்.

''வெற்றி உறுதி'' நடவடிக்கையின் இறுதி நோக்க மாக உள்ள வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையி லான தரைப்பாதையைத் திறக்கும் நடவடிக்கை விரைவில் பூர்த்தியாகும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

திருகோணமலையில் 22 ஆவது படைப்பிரிவுக்கான நலன்புரி நிலையம் ஒன்றைத்திறந்து வைத்து உரையாற்றுகை யிலேயே தளபதி இதனைத் தெரிவித்தார். (ஐ-9)

## அமைச்சர் பதவியை ஏற்க முன்

# ஜனாதிபதியைச் சந்திக்க சமசமாஜிகள் விருப்பம்

சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் பேர்னாட் சொயி சாவின் மறைவினால் உருவா கியுள்ள அமைச்சர் பதவியை மீளப் பொறுப்பேற்பதற்கு முன்னர் ஜனாதிபதியைச் சந் திக்கச் சந்தர்ப்பம் வழங்கு மாறு சமசமாஜக் கட்சியினர் கேட்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்க பற்றி வீரக் கோனை சமசமாஜக்கட்சியின் அரசியல்குழு தெரிவு செய் துள்ளது என்ற விவரத்தையும் அவர்கள் ஜனாதிபதிக்குத் தெரிவிப்பர்.

# கச்சாய் வாலிபர் துபாயில் பலி

தென்மராட்சி, ஜன. 17

கச்சாய் இளைஞர் ஒருவர் துபாய் நாட்டுக் கடலில் வீழ்ந்து பலியான சம்பவம் கடந்த கிறிஸ்மஸ் தினத் தன்று இடம்பெற்றது.

துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பலில் பொருள் களை இறக்கிக் கொண்டிருக் கையில் தவறிவீழ்ந்து இவர் பலியானார். இவரது சடலம் கடந்த வாரம் அவரது வீட் டுக்குக் கொண்டுவரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

கச்சாயைச் சேர்ந்த அந் தோனிப்பிள்ளை ஜெயக் குமார் (வயது 21) என்னும் இளைஞரே மரணமானவர் ஆவார். இவர் கடந்த ஆண்டு தொழில் வாய்ப்புப் பெற்று துபாய் சென்றதாகத் தெரி விக்கப்பட்டது. (உ-117)

### யாழ்ப்பாண..

(முதலாம் பக்கத் தொடர்)

களின் உணர்வலைகள் ஆகி யவை தொடர்பாக கேட்டு அறிந்து வருகிறார்.

யாழ். மாவட்டத்தில் அவுஸ் திரேலிய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங் கள் குறித்தும் அவர் யாழ். அதிகாரிகளுடன் ஆராய்ந்து வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் செயற் படும் ஏனைய சர்வதேச அமைப்புக்களும் தேர்தல் குறித்து மக்களின் உணர் வலைகளை அறிவதில் நாட் டம் காட்டியுள்ளன.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ... வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 17-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

# சஞ்சிகை

17 – 01 – 1998 சனிக்கிழமை

நகைப்பிரியர்களுக்கு!

**கஜீபன் ஜுவல்லறி**

சிறந்த முறையில் ஓடர்நகைகள் குறித்த காலத்தில் செய்து பெற்றுக்கொள்ள தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

**கஜீபன் ஜுவல்லறி**

தங்க வைர நகை வியாபாரம்
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

(52597)

## கருத்துக் கலசம்

மயூரா

### பழையன கழிதல்

தை மாதம் பிறந்து விட்டது. பொங்கலும் வந்து போய் விட்டது. தமிழர் வருடத்தின் ஆரம்பம் தை முதல் நாள் என்ற கருத்தும் உண்டு. அதுவே தமிழர்களின் தேசியத் திருநாள் எனவும் சொல்லப் படுகிறது.

எனினும் நடைமுறையில் அது பண்டைய நிலைக்கு உயர்த்தப்படவில்லை. வருடத்தின் முதல் நாள் ஜனவரி முதலாம் திகதி என்ற அடிப்படையிலேயே அனேகமாக எல்லாக் காரியங்களும் நடைபெறுகின்றன. உலக நடப்பு அதுவானதால் தவிர்க்க முடியாதது என்பது வாதம்.

உலகம் ஒரே கிராமம் ஆக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடு முனைப்படைந்துள்ள காலம் இது. அதற்கான தொழில் நுட்ப வர்த்தக, அரசியல் மாற்றங்கள் பரவலாக இடம் பெற்று வருகின்றன.

அவை மட்டுமா? உலகப் பொது மொழி ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது.

இவை ஒரு புறமிருக்க உலகத்துக்குப் பொதுவான வாழ்க்கை முறை ஒன்று தேவை என்ற கொள்கை முன் வைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

வாழ்க்கைமுறைகள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், கலாசாரங்கள் பிரதேசத்துக்குப் பிரதேசம், இனத்துக்கு இனம் வேறுபடுவதுண்டு. தத்தமக்குரிய வாழ்க்கை முறைகள், பழக்கங்கள், ஒழுக்கங்கள், பண்பாடுகள், மொழிகளைப் பேணுவதன் மூலமும், வளர்ப்பதன் மூலமுமே இனங்கள் தமது தனித்துவங்களைப் பாதுகாத்து வருகின்றன.

நவீன சிந்தனைப் போக்கில் சிக்குண்டு சிதறுண்டு தமது பாரம்பரியங்களையும், பழக்க ஒழுக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும் ஒதுக்கிவிட முனைதல் ஆபத்தானது; தனித்துவத்தை அழித்துவிட வல்லது.

இத்தகைய பின் புலத்தில், ஆபத்து ஒன்று தூரத்தே தெரிந்து கொண்டிருக்கும் வேளையில் —

தமிழ் இனத்தவர்கள், குறிப்பாக ஈழத்தமிழர்கள், விசேடமாக யாழ்ப்பாணத்து மக்களின் போக்கு கவலைக்குரியதே.

ஆம். எமக்குரிய பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள், வாழ்க்கை இயல்புகள், பாரம்பரியங்களை நாம் மறந்து வருகின்றோம்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினாலே'' என்பது ஏற்கப்பட்ட ஒன்றே. எனினும் எங்கள் தனித்துவத்தையும் இனச் சிறப்பையும் இழக்கக் கூடியதாக பழையனவற்றை ஒரேயடியாக ஒதுக்கி விடலாகாது.

எங்கள் முன்னோரின் பழைய வாழ்க்கை முறைகளை, ஒழுக்கங்களை, நெறிகளை மறந்து போனதால் சமூகச் சீர்கேடுகள் மலிந்து வருவதை இப்போது கண்ணாரக் காண்கிறோம். ஏனையவற்றையும் ஒதுக்கிவிட்டால், நாம் எங்கே நிற்போம்...?!

# தடுமாறும் தலைமுறைகள்

குடும்பம் என்ற அமைப்பு கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து பல தாக்குதல்களுக்கு உள்ளாகி வந்திருக்கிறது. கடந்த சில வருடங்களில் இந்தத் தாக்குதல் பலமாகவே நடந்து வருகின்றது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், பொருளாதார 'வளர்ச்சி' யும் குடும்ப அளவிலும், சமுதாய அளவிலும் பல விரும்பத் தகாத மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கின்றன,

பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக மனிதன் ஆடை இல்லாமல் வாழ்ந்தான். தாய், தந்தை, மகன், பாட்டி, பாட்டனார் முதலிய உறவு முறைகள் என்னவென்று ஆதி மனிதன் அறிந்தது இல்லை.

தாய் மகனை உயிரோடு கொன்றுதின்றாள் என்பதும், மகன் தந்தையைக் கொடூரமாக அழித்தான் என்பதும் ஆதி மனிதன் வரலாற்றின் சில சங்கதிகள்.

நாகரிகம் என்றால் என்ன என்றே அறியாத அந்த நிலையை நோக்கி அமெரிக்கா போன்ற மேலை நாடுகள், நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகவே வேகமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரே ஒரு வேதனையான உதாரணத்தைகவனியுங்கள்!

ஆண்–ஆணுடனும், பெண்–பெண்ணுடனும் தகாத உடல் உறவு கொள்ளலாம் என்பதைப் பிரசாரம் செய்ய பல சங்கங்களே மேலை நாடுகளில் ஏற்பட்டு இயங்கி வருகின்றன!!

மேலை நாடுகளில் சிந்திக்கத் தெரிந்த அனைவரும் இந்த நிலைவரம் குறித்துப் பயப்படுகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக இந்தச் சீர்கேடுகள் மிக வேகமாகவே கீழைத்தேச நாடுகளிலும் பரவி வருகின்றன.

1991 ஆம் ஆண்டு இறுதியில் சோவியத் யூனியன் என்ற மிகப் பெரும் வல்லரசு நாடு பல சிறிய நாடுகளாக உடைந்தது.

13 வயதுப் பெண்ணும், 12 வயது ஆணும் செக்ஸ் உறவு வைத்துக்கொள்ளுவது சாதாரணமான ஒரு விஷயம் என்ற அமெரிக்க 'நாகரிகம்', கீழை நாடுகளில் வேகமாக நுழைவதற்கு சோவியத் யூனியன் அழிவு வழி தந்து விட்டது.

'குடும்ப' அமைப்பு அவசியமற்ற சங்கதி என்றபோதனைகளும், நிர்வாணச் சினிமாப் படங்களும், வாழ்க்கையில் பணம் ஒன்றுதான் முக்கியம் என்ற தவறான கருத்தும், தடைபோடுவோர் இல்லாமல், கீழை நாடுகளில் பிரவேசித்து விட்டன.

வெளிநாட்டு மூலதனமும் கம்பெனிகளும் நாட்டில் நுழைகின்றபோது, அவற்றின் போட்டியைச் சமாளிக்க நமது கலாசாரத்தை அழிக்கும் வெளிநாட்டுத் தொழில், வர்த்தக நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது.

## சிதறுகின்றது குடும்ப அமைப்பு

சோப், ஆடைகள், வாசனைப் பொருள்கள், டெலிவிஷன் முதலியவற்றின் விற்பனைக்காகச் செய்யப்படும் விளம்பரங்களில், பெண்களைப் போகப் பொருளாக உபயோகப்படுத்தும் வெளிநாட்டு விளம்பரஉத்தி இங்கும் ஆழமாகப் பரவியிருப்பதை இதற்கு ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

பணம் அவசியம் தேவையானது. ஆனால் பணம் ஒன்று மட்டுமே வாழ்க்கையை நிர்ணயிப்பது என்ற கருத்துப் பிழையானது என்பதை வேத காலத்திலிருந்து கீழைத்தேசம் உலகுக்கு எடுத்துச் சொல்லி வந்திருக்கிறது.

வாழ்க்கையில் இன்பத்திற்குப் பணம் பிரதானமானது இல்லை என்பதுதான் கீழைத்தேசக் கலாசாரத்தின் அடிப்படை.

வேதங்கள், மகாபாரதம், தமிழகத்தின் திருக்குறள், நாலடியார், ஆசாரக் கோவை, தேவாரம், திருவாசகம், நாலாயிரந்திவ்வியப் பிரபந்தம் அனைத்தும் ''பணம் ஒன்று மட்டும் முக்கியமானது இல்லை'' என்றுதான் வலியுறுத்துகின்றன.

ஆனால். இன்றைய நமது மக்கள் இந்த அடிப்படை நிலையிலிருந்து வெகு தூரம் விலகிச் சென்று விட்டார்கள்.

'குடும்பம்' என்ற அமைப்பு அநேகமாக அழிந்து விடும் என்ற மிக அபாயகரமான நிலைவரத்தைப் 'பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே' என்ற தவறான அணுகுமுறை உண்டாக்கி விட்டது.

வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வது இப்போது சர்வசாதாரணம்.

மனைவியைத் தனியாக விட்டுவிட்டுக் கணவன் வெளிநாடு செல்வதும், கணவன் இல்லாமல் மனைவி மட்டும் பிற நாடுகளுக்குப் போவதும் மிக இயல்பாகவே நடக்கின்றன.

வெளிநாடுகளில் கணவன், மனைவி ஆகிய இருவரும் வேலை செய்யும் நிலை பல 'குடும்பங்களில்' உள்ளது. இது இங்கும் மிகுதியாகவே காணப்படுகிறது.

கணவன், மனைவி இருவரும் வேலைக்குப் போகும் நிலையில் அவர்களது குழந்தைகளின் முறையான வளர்ச்சி பெரிதும் பாதிக்கப் படுகிறது.

தாயின் அன்பும், தந்தையின் அரவணைப்பும் பல கீழை நாடுகளில் பல குழந்தைகளுக்குக் கிடைப்பது இல்லை.

சமுதாயத்தில் பல தீங்குகள் பல அபாயங்கள் இதனால் ஏற்படுகின்றன என்று சமூகவியல் நிபுணர்கள் திரும்பத் திரும்ப எச்சரித்து வந்திருக்கிறார்கள்.

மக்கள் இந்த எச்சரிக்கையை அலட்சியப்படுத்தி வந்துள்ளார்கள்.

கீழை நாடுகளில் இன்றைய நிலைவரம் என்ன என்பதைச் சில ஆய்வுகள் சமீபத்தில் விரிவாக எடுத்துக் காட்டி உள்ளன. அவை நமக்கு அதிர்ச்சி தருகின்றன.

தாயார், தந்தை ஆகியோரின் முழுமையான கவனிப்பு இல்லாத சிறுவர், சிறுமியரின் வருங்காலம் அழிகிறது.

அதுமட்டும் இல்லை, அவர்கள் சமுதாய விரோதிகளாக வளருகிறார்கள்; அவர்கள் சமுதாயத்தை அரசியல் வாதிகளுக்கு அடுத்தபடியாக அழிக்கிறார்கள். அவர்களில் பலர் அரசியல்வாதிகளாகவும் ஆகி விடுகிறார்கள்!!

'குடும்பம்' என்ற அமைப்பு சமீப காலமாக கீழை நாடுகளில் எவ்வாறு சிதைந்து போயிநக்கிறது என்பதை அறிந்தால் பெரும் அதிர்ச்சி உண்டாகும்.

தாய்லாந்து, மலேசியா, இந்தோனேஷியா, தென் கொரியா, சிங்கப்பூர், ஜப்பான், சீனா, பிலிப்பீன்ஸ் முதலிய கீழை நாடுகளில் நிலைவரம் என்ன தெரியுமா?

இந்தநாடுகளில் குழந்தைகளைப் பல பெற்றோர் போதிய அளவில் கவனிப்பதில்லை. இதன் விளைவாக இளம் சிறுவரும், சிறுமியரும் மது அருந்துகிறார்கள்; போதைப் பொருளைச் சாப்பிடுகிறார்கள். திருடுவது, பிறரைத் தாக்குவது, மக்களை மிரட்டிப் பணம் வசூலிப்பது முதலிய குற்றங்களில் இளைஞர்கள் அதிகமாக ஈடுபடுகிறார்கள்.

அண்மைக்காலமாக 'எய்ட்ஸ்' நோய் எல்லா நாடுகளிலும் வேகமாகப் பரவ ஆரம்பித்திருக்கிறது.

இளம் ஆண்களும், பெண்களும் ஒரு பொழுதுபோக்காக செக்ஸ் உறவு சங்கதியில் ஈடுபடுகிறார்கள்.

குடும்பங்களில் பூசல்கள் நடக்கின்றன; நம்பமுடியாத விகிதத்தில் விவாகரத்து எண்ணிக்கைஅதிகரித்துவருகிறது.

பல தாய்மார்கள் வீட்டரசிகளாகவே இருக்க விரும்புகிறார்கள். ஆய்வுகளில் இருந்து இந்த உண்மை தெரிகிறது. ஆனால் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற ஆசையால் பெண்கள் வேலைக்குப்போகிறார்கள்.

வயதுமுதிர்ந்தவர்கள் ஆதரிப்பவர்கள் யாரும் இல்லாமல் தனியாக வாழும் நிலையும் காணப்படுகிறது.

ஆடம்பரமாகச் செலவு செய்து பல பொருள்களை வாங்கும் மனப்பான்மை சிங்கப்பூர் போன்ற நாடுகளில் காணப்படுகிறது என்று பலரும் வேதனையுடன் குறிப்பிடுகிறார்கள்.

'குடும்பம்' என்ற அமைப்பும், 'திருமணம்' என்ற நிறுவனமும் உடைந்து விடுமோ என்று இந்தக் கீழை நாடுகளில் பலரும் பயப்படுகிறார்கள்.

சமுதாயத்தில் கட்டுக்கோப்பு உடைந்து விட்டால், மீண்டும் ஆதிமனிதன் வாழ்ந்த நிலைக்கு மக்கள் போய்விட நேரிடும்.

மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகளில் அரசாங்கங்கள் இந்த நிலைவரம் குறித்துக் கவலை அடைந்திருக்கின்றன.

குடும்பஉறவுகள், தார்மீக நெறிகள் பற்றிப் பெற்றோருக்கும், சிறுவர்களுக்கும் போதனை தர சிங்கப்பூர் அரசு முடிவுசெய்திருக்கிறது. இதற்காக ஒரு குழுவை அரசு அமைத்திருக்கிறது.

இதர கீழை நாடுகளில் பரவி வருகின்ற சீர்கேடுகளில் பெரும்பாலானவை இந்தியாவிலும் காணப்படுகின்றன.

சென்ற பத்தாண்டுகளில் போதைப் பொருள் சாப்பிடும் பழக்கம் இந்தியாவில் பயங்கரமாக அதிகரித்திருக்கிறது.

இந்தியாவில் 'குடும்பம்' என்ற அமைப்பையும், 'திருமணம்' என்ற நிறுவனத்தையும் அழிக்கும் சக்திகளில் திரைப்படங்களும் அடங்கும்.

வன்முறையும், பாலியல் உணர்வும், ஆபாசமான பாடல்களும், இரட்டை அர்த்த வசனங்களும், நடனம் என்ற பெயரில் உடல் உறுப்புக்களை விரசமாக ஆட்டிக்காட்டும் போக்கும் இன்றைய சினிமாக்களில் ஆதிக்கம் வகிக்கின்றன.

பெண்ணினத்தை இழிவுபடுத்தாத ஒரு தமிழ்த்திரைப்படம் கூடவெளி வரவில்லை என்று கூறலாம். அந்த அளவுக்குப் பெண்மையை இழிவாக — ஆபாசமாக — சித்திரிக்கும் நிலை வளர்ந்து கொண்டே போகிறது.

'எய்ட்ஸ்' நோய் காணப்படாத இந்திய மாநிலமே இல்லைஎன்றஅளவுக்குசீரழிவு

'குடும்பம்' என்ற அமைப்பு போய்விட்டால், மக்கள் மீண்டும் காட்டுமிராண்டிகளாகி விடுவார்கள்.

குடும்ப அமைப்பு உடைந்து அழிந்து விடாமல் தடுக்கும் சக்தி, பெண்களிடமும், சமயத் தலைவர்களிடமும் மட்டுமே உண்டு.

மனித நாகரிகமும், பண்பாடும் நாசமாகிப் போகாமல் காப்பாற்றும் ஆற்றலும் அவர்களுக்குமட்டுமே உண்டு.

**-கே. சி. லட்சுமி நாராயணன்-**

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்காலபொதுசன நூல்நிலைய திறப்புவிழாவில் ஒரு கரும்புள்ளி!

தைப்பொங்கல் தமிழர்களின் சிறப்பான பண்டிகைகளில் ஒன்று. அன்றையதினம் மங்களகரமான வைபவங்களை நடத்துவது வழக்கம். உழவர் விழாக்கள், கலைவிழாக்கள், திறப்புவிழாக்கள், தொழில் ஆரம்பித்தல், விளையாட்டுப் போட்டிகள் என்பன பொங்கல் நன்னாளில் நடத்தப்படுவது.

அதனை மனதில் வைத்து அரசாங்கமும் தைப்பொங்கலன்று மங்களகரமான வைபவம் ஒன்றை நடத்த விரும்பியது. அன்றைய தினம், யாழ்ப்பாணம் வீடமைப்புச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இடைக்கால யாழ். பொதுசன நூலகத்தைத் திறந்து வைத்தது.

யாழ்ப்பாண பொதுசன நூலகம், 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி தீவைத்து நாசமாக்கப்பட்டது. இந்தக் கொடுமையைச் செய்தவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய இலங்கைப் பொலிஸாரே ஆவார். இது இப்போது உலகறிந்த உண்மை. உலகளாவிய ரீதியில் கொழும்பு அரசுக்கு அவமானத்தையும் அபகீர்த்தியையும் தேடித் தந்த சம்பவம் இது.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் முழுக்க முழுக்க யாழ்ப்பாண மக்களால் ஆரம்பிக்கப்பட்ட அறிவுக் கூடம். யாழ்ப்பாணம் இருந்த உள்ளூராட்சி சபை 1949 ஆம் ஆண்டு மாநகரசபையாக மாற்றப்பட்டது. அதன் முதல் மேயராக இருந்தவர் சாம் சபாபதி ஆவார்.

அப்போது பொதுமக்கள் குழு ஒன்று தாம் நடத்தி வந்த நூலகத்தை யாழ்ப்பாண மாநகரசபையிடம் கையளித்தது. அதனைத் தொடர்ந்து வண. பிதா லோங் அடிகளாரைத் தலைவராகக் கொண்ட பொது நூலகக் குழு ஒன்று நிறுவப்பட்டு அதுவே பொதுசன நூலகத்தை பெரிய அளவுக்கு வளர்த்தது.

1981 இல் நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட பின்னர், அதனைப் புனரமைக்க மேயர் ராஜா விசுவநாதனும் பொதுமக்கள் குழு ஒன்றை அமைத்தார். அக்குழுவின் தலைவராக பேராசிரியர். நேசையா பணி புரிந்தார். 1984 இல் பொதுசன நூலகத்தில் ஒரு பகுதி புனரமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு போர் தொடங்கிய பின்னர் பொது நூலகம் மீண்டும் நாசமாகியது.

யாழ். மாநகர சபையின் பொன்விழா அடுத்த வருடமாகும். அப்போதாவது பொதுசன நூலகம் தனது முந்திய இடத்தில் பொலிவுடனும் அறிவுப் பொருளுடனும் பூரணமாக நிமிர்ந்து நிற்காதா என்பது யாழ்ப்பாண வாசகர்களின்—பொது மக்களின்—ஏக்கமாகும்.

1981 ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் பொலீஸாரும் படையினரும் நடத்திய அழிவுகளால் சேதமடைந்த நிறுவனங்கள், கடைகளுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று அப்போதைய அரசு நியமித்த லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு சிபார்சு செய்திருந்தது.

அனேகமாக எல்லா நிறுவனங்களுக்கும், விசாரணைக்குழு சிபார்சு செய்த நஷ்டஈட்டுத்தொகை வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு மட்டும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

சேதமடைந்த கட்டடங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் உத்தரவுக்கடிதம் அப்போதைய (1984) அரச அதிபர் தேவநேசன் நேசையாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பட்டியலில் யாழ். பொதுசன நூலகத்துக்கான நஷ்டஈடு குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. பதினேழு வருடங்கள் கழிந்தும் அது இன்னமும் வழங்கப்படவில்லை. கடந்த வருடம் ஜனாதிபதி நிதியிலிருந்து நிவாரணமாக (அதனை நஷ்டஈடாகக் கொள்ள முடியாது) 30 இலட்சம் மட்டும் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது.

பொதுசன நூலகம் அரசாங்கத்தின் அதிகாரிகளால் — படையினரால் — எரிக்கப்பட்டதால், அதற்கு அரசாங்க கஜானாவிலிருந்து நஷ்டஈடாகப் பணம்வழங்கினால்—குற்றத்தை ஒப்புக் கொண்டதாகிவிடும் என்று அப்போதைய ஜே.ஆர். அரசு கருதியது. அதனாலேயே அது நஷ்டஈட்டுப்பணத்தை வழங்குவதற்கு பின்னடித்துக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் பொதுநூல் நிலையம் எரிக்கப்பட்ட பின்னர், யாழ். மாநகரசபை மண்டபத்தையே படையினர் தாக்கினர் என்று ஜே. ஆர். வெளிநாட்டுச்செய்தி ஏஜன்சிகளுக்கு சம்பவத்தைத் திரித்துக் கூறியதும் நினைவில் இருத்தத்தக்கது.

யாழ். பொதுசன நூலகத்தை அரசாங்கப் படையினரே எரித்தார்கள்; நாசமாக்கினார்கள் என்று எதிரணித் தரப்பில் இருந்த வேளை பகிரங்கமாகத் தெரிவித்தவர் இப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

அப்படியிருக்க நூலகத்துக்குச் சிபார்சு செய்யப்பட்ட நஷ்டஈட்டுத் தொகையை வழங்குவது குறித்து அக்கறை காட்டாதது ஏன் என்ற கேள்வி யாழ்ப்பாண மக்களிடம் எழுந்துள்ளது.

அதே போல, தைப்பொங்கல் தினத்தன்று வீடமைப்புச் செயலகத்தில் ''இடைக்கால யாழ். பொதுசன நூலகம்'' திறந்து வைக்கப்பட்டது குறித்தும் இங்குள்ள மூத்தவர்கள் ஒரு கேள்வியை முன் வைக்கிறார்கள்.

இடைக்கால யாழ். பொதுசன நூலகத்தை திறந்து வைப்பதற்குத் தடல்புடல்களும், விழாவும் வைத்த அரசு —

யாழ். பொதுசன நூலகம் அமைந்துள்ள அதே இடத்தில் புதிதாக ஒரு கட்டடத்தை எழுப்பி இடைக்கால நூலகத்தை இயங்கச் செய்து கொண்டே—

சேதமடைந்த கட்டடத்தைத் திருத்தி அதனை மீள்வித்திருக்கலாமே —

அல்லது சேதமடைந்த கட்டடத்தின் ஒரு பகுதியைத் திருத்தி இடைக்கால நூலகத்தை நடத்திக் கொண்டு—

அழிக்கப்பட்ட கட்டடத்தைப் புதிதாக அமைத்திருக்கலாமே — என்பதே அவர்களின் அந்தக் கேள்வி.

யாழ். மக்களின் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்த பொது நூலகத்தை அரச படைகள் அழித்ததால் யாழ். மகன் ஒவ்வொருவரினதும் மனதில் வடு ஏற்பட்டுள்ளது.

செங்கல்லைச் சேகரித்துக் கட்டடத்தைக் கட்டி, நூல்களைச் சேகரித்து அந்தக் கட்டடத்தில் அடுக்கி விடுவதால் யாழ். மகனின் மன வடுவை அழித்துவிட முடியாது.

முந்திய அரசின் காலத்தில் தெற்கில் நடந்த அடாவடித்தனங்களை விசாரித்துக் குற்றம் செய்தோரை தண்டிக்க முற்பட்டுள்ளது அரசு. ஆனால் யாழ். மக்களின் மனதில் ஆத்மார்த்த வடுவை உண்டாக்கிவிட்ட யாழ். பொதுசன நூல் நிலைய அழிப்புக் குறித்து ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்து குற்றவாளிகளைத் தண்டிக்க நினைக்கவில்லை.

ஆகையால் யாழ். பொதுசன நூல் நிலையத்தை முந்திய நிலைக்கு மீளமைக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறுவது வெளி உலகத்தின் நற்பெயரை வாங்குமுனையும் ஓர் ஏற்பாடே என்று மக்கள் கருதுகிறார்கள்.

சுதந்திரப் பொன் விழாவில் யாழ். பொதுசன நூல் நிலையம் இயங்குகிறது என்று புளுகித் தாழிப்பதற்காகவே வீடமைப்புத் திணைக்களத்தில் ''இடைக்கால நூலகம்'' அவசர அவசரமாகத் திறந்து வைக்கப்பட்டது என்ற கருத்தும் இங்கு மக்களிடையே நிலவுகிறது.

நூல்நிலையத்துக்கு தமது கணவரின் நூல்களை அன்பளிப்புச் செய்த திருமதி பீற்றர் கெனமன், அதே போலத் தமது நூல்களை அன்பளிப்பு செய்த பிரபல வழக்கறிஞர் த. துரைசிங்கம், கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் ஹர்த்தும், பிரிட்டிஷ் கவுன்ஸில் அதிகாரி ஆகியோரும் தலைநகரில் இருந்து வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

வெண் தாமரை இயக்கப் பிரமுகர்களில் ஒருவரான பதுளை எம். பி. டிலான் பெரேராவும் வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள் ஆகியோரும் வந்திருந்தனர்.

இந்தளவு ஆயத்தங்கள் எல்லாம் கொழும்பில் செய்யப்பட்டு பிரமுகர்கள் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர்.

இவர்களுடன் இரண்டு டசின்களுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்களும் அழைத்து வரப்பட்டனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து விழாவுக்கு அழைக்கப்பட்டவர்களில் மிகப் பலருக்கு விழாவுக்கு முதல் நாளே விழா குறித்து உத்தியோக ரீதியாகத் தெரிய வந்தது.

சுடச்சுட அழைப்பு கிடைத்துச் சென்றவர்களில் பலரும் திறப்பு விழாவில் கலந்து கொள்ளாமல் திரும்பநேர்ந்த சம்பவம் அரசுநடத்திய விழாவுக்குப் பெரும் கறுப்புப்புள்ளி வைத்தது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவ்வாறு திரும்பிவர நிர்ப்பந்திக்கப்பட்டது சைவ சமய மக்கள் யாழ்ப்பாணத்திலேயே அவமதிக்கப்பட்டதற்கு ஒப்பாகும்.

விழாவுக்கு அழைக்கப்பட்ட சகலரும் தாம் சென்ற வழி நெடுகிலும் கடுமையான சோதனைக்குஆளானார்கள். இறுதியில் வைபவம் நடந்த இடத்துக்குச் சற்றுத்தொலைவில்— கண்டி வீதியில் —வை. எம். சி. ஏ. மண்டபத்துக்கு அருகில் — விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவ்வாறிருந்தும் —

வீடமைப்புச் செயலகத்துக்குச் செல்லும் கண்டி வீதி முகப்பிலும் மீண்டும் சோதனை செய்யப்பட்டே விழாவுக்கு அழைக்கப்பட்டவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதனை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் யாழ். மேயர் பதவிக்கும் போட்டியிடும் வேட்பாளரான என். மாணிக்கதாசன் ஆட்சேபித்தார்; விழாவில் கலந்து கொள்ளாமலே திரும்பிச் சென்று விட்டார்.

வீடமைப்புத் திணைக்கள முகப்பிலும் சோதனை — தடவுதல், தட்டுதல் — நடைபெறுகிறது. என்பதனை அறிந்து அரச உயர் அதிகாரிகள் பலரும் அங்கு செல்லாது யாழ். செயலகத்துக்குள் சென்றனர்.

அதே போன்று நல்லை ஆதீன முதல்வரும் யாழ். செயலகத்திற்குள் சென்றார்.

ஆனால் இவர்களை விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்வதற்கு, சோதனையை தளர்த்துவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

சில நிமிட நேரம் காத்திருந்த இவர்கள் தம்மீது காறி உமிழப்பட்ட உணர்வோடு வீடு திரும்பினார்கள். இவர்களில் சுமார் இருபது அரச உயர் அதிகாரிகளும் அடங்குவர்.

விழாவில் நயினாதீவு நாகவிகாரை பிரதமகுரு, நல்லை ஆதீன முதல்வர், யாழ். ஆயர் ஆகியோர் ஆசியுரை வழங்க ஏற்பாடாகி இருந்தது. அப்படியிருந்தும் ஆதீன முதல்வரை விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்வதில் கவனம் செலுத்தப்படவில்லை. இது சைவமக்களின் முகத்தில் கரி பூசிய செயலன்றி வேறென்ன?

அமைச்சர்கள் மூவர் விழாவில் கலந்து கொண்டதால் பாதுகாப்பில் கவனமாக இருந்தது சரியானதே. ஆனால் சைவமக்களின் மதிப்புக்குரிய பிரதிநிதி ஒருவர் அவமதிக்கப்பட்டது மக்களின் மனதைப் பெரிதும் புண்படுத்தியுள்ளது.

மேலும் அரசாங்க உயர் அதிகாரிகளையே சந்தேகித்து விழாவில் கலந்து திரும்பச் செய்தால் தாம் எம் மாத்திரம் என்ற கேள்வியும் மக்களிடம் எழுந்துள்ளது.

★ ★ ★

## உள்ளும் புறமும்

குறுமுனி

பலத்த பாதுகாப்பின் மத்தியில் புதன்கிழமை – பொங்கலன்று — காலை மூன்று அமைச்சர்களின் பிரசன்னத்தில் இடைக்கால யாழ். பொதுசன நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் மங்கள சமரவீர மட்டுமே திறப்பு விழாவுக்கு வருவார் என்று முதலில் தெரியவந்தது. அது கூட மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. பாதுகாப்புக் காரணம் கருதி அவ்வளவு இரகசியம். கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரானா, சமூக சேவைகள் அமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திசநாயக்க ஆகியோரே மங்கள சமரவீரவுடன் கூட வந்த மற்ற இருவர்கள்.

அமைச்சர் மங்கள சமரவீர யாழ். நூலக மீளமைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவர். அடுத்த இணைத் தலைவர் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். அவர் விழாவுக்கு வரவில்லை. அவரது உரை வீடியோ மூலம் ஒளிபரப்பப்பட்டது.

யாழ். நூலக மீளமைப்புக் குழுவின் உறுப்பினர்களில் [illegible] —

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், யாழ்ப்பாணத்தில் அரசு ஆட்சியை நிலைநாட்டிய பின்னர், மூன்று அமைச்சர்கள் ஒரே முறையில் வந்து சென்றுள்ளார்கள். கடைசியாக 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் திகதி அமைச்சர் சிறிபால டி சில்வா இங்கு வந்திருந்த போது தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதல் நடைபெற்றது. அதன் பின்னர் அமைச்சர்கள் மூவர் ஒன்றாக வந்து சென்றிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு திருப்திகரமாக இருக்கிறது — நன்றாக உள்ளது— என்று அரசு கூறுவதற்கு அமைச்சர்களின் விஜயம் வகை செய்துள்ளது. இதற்காக வடக்கில் உள்ள இராணுவ உயர் அதிகாரிகளுக்கு அரச உயர்பீடத்தின் பாராட்டுக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சுதந்திர பொன் விழாவுக்கு முன்னரும், யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னரும் மூன்று அமைச்சர்கள் இங்கு வந்து சென்றிருப்பது அரசின் வெளிநாட்டுப் பிரசாரத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சூழலியல் அனர்தங்களை உருவாக்கும் 'எல் - நைனோ'!

பூமத்திய ரேகையின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதியிலுள்ள பசுபிக் சமுத்திரப் பிராந்தியங்களில் கடல் நீரின் மேற்பரப்பில் இடையிடையே ஏற்படுகின்ற உஷ்ண நிலையும் அதன் விளைவும் ''எல்—நைனோ'' என அழைக்கப் படுகின்றது.

பசுபிக் சமுத்திரத்தின் கடல் மேற்பரப்பிலுள்ள காற்று, பூமத்திய ரேகையை நோக்கிக் கிழக்கிலிருந்து மேற்காக வீசிக்கொண்டிருக்கும்போது, மேற்கு அயன மண்டல பசுபிக் சமுத்திரத்திலுள்ள நாடுகளான இந்தோனேசியா மற்றும் ஆஸ்திரேலிய உபகண்டத்தினை அண்கரையோரங்களுக்கு அப்பாலான கடற்பிராந்தியங்களில் கடல் நீரின் மேற்பரப்பு கிறிஸ்மஸ் காலங்களில் உச்ச உஷ்ண நிலையை அடைகின்றது.

''எல் — நைனோ'' அனர்த்தமானது முதன் முதலாக இந்நாடுகளினைச் சேர்ந்த மீனவர்களினால் அவதானிக்கப்பட்டது. கிறிஸ்மஸ் காலத்தில் அவதானிக்கப்பட்டமையினால் ''கிறிஸ்துவின் பிள்ளை'' (CHRIST CHILD) எனப் பொருள்—படும் வகையில் ''எல்—நைனோ'' எனப் பெயரிட்டனர். மேலும் ,,லா—நைனோ''(LA–NINA)

## எல் - நைனோ செயற்படும் விதம்

| சாதாரண காலத்தில் | எல் - நைனோ உருவாகும் காலத்தில் |
|---|---|
| 1. தனது பின்புறமாக வெப்பமடைந்த நீரையும் இழுத்துக்கொண்டு காற்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசுகிறது. | மர்மம் நிறைந்த காரணங்களால் காற்று மெலிந்து தீவிரம் குறைகிறது. |
| 2. குளிரும், சத்துள்ள தண்ணீரும் கீழிருந்து மேலே பொங்கிப் பெருகி, பசுபிக் உணவுச் சங்கிலிக்கு உந்துதல் கொடுக்கின்றன. | அசைவற்ற வெப்ப நீர், பொங்கி எழுதலைத் தடுத்து விடுவதால் மீனினங்கள் அழிகின்றன. |
| 3 இந்தோனேசியாவுக்கு அப்பால் வெப்ப நீர் நிரந்தரமாகத் தங்கி நிற்பதால், அந்தப் பிராந்தியத்தில் மழை பெய்கிறது. | வெப்பநீர் கிழக்கு நோக்கி நகர்வதால் மழை முகில்களும் அதனோடு ஈர்த்துச் செல்லப்படுகின்றன. |
| 4. தென் மெக்ஸிக்கோவுக்கும் தென்மேற்குப் பசுபிக்குக்கும் உந்துவேகநீரோட்டம் மழையைக் கொடுக்கும். | விசை கொண்ட நீரோட்டம் வடக்கே திரும்பி அத்திசையிலும் மழையைப் பொழிவிக்கிறது. |

டிய பகுதிகளில் உள்ள நிலைக்குத்தான மேற்தொகுதி கடல்நீர் உஷ்ணமாகின்றது. உஷ்ணமான நீர்த் தொகுதி உருவாவதன் காரணமாக அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலுள்ள வளிமண்டல வாயுக்கள் உஷ்ணமடைகின்றன. அத்துடன் இப்பிரதேசங்களில் மழைமுகில்கள் உருவாவதற்குரிய சாதகமான நிலைமைகளும் உருவாகின்றன.

என்பவரினால் ''குளிர்'' (COLD) என்பதனைக்குறிக்க இந்த 'எல்—நைனோ' என்ற சொல் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது.

### உலகின் கவனத்தை ஈர்த்துள்ள 'எல் – நைனோ'

இன்று பத்திரிகைகளினால் பலரினதும் கவனத்தை ஈர்த்துள்ள — தனித்துவமான — இத்தகைய கடல்நீர் மேற்

பசுபிக் சமுத்திரப் பிராந்தியங்களில் திடீரென பெரும் உஷ்ண அதிகரிப்பை ஏற்படுத்தி, சூழலியலாளர்களைக் குழப்பத்துள் ஆழ்த்தியிருக்கும் 'எல் — நைனோ' என்ற காலநிலை மாற்றம் குறித்து சர்வதேச சஞ்சிகைகள் பரபரப்பான செய்திகள், தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

இந்த 'எல் — நைனோ' அனர்த்தம் விவசாயம், மீன்பிடியியல், வனத்துறை ஆகியவற்றில் ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகள் பற்றிய கட்டுரைத் தொடர் இது.

இந்தநிலைமை அதிக மழைவீழ்ச்சி, வெள்ளப் பெருக்கு என்பனவும் கடும் வரட்சி, காட்டுத்தீ, புயல் போன்றனவும் உலகநாடுகள் சிலவற்றில் சம்பவிக்க ஏதுவாகின்றது. வளிமண்டல அமுக்கத்தில் ஏற்படுகின்ற பலவீனமான நிலையே, ''எல் — நைனோ'' ஏற்படுவதற்கான முதல் அறிகுறி என உலக சூழலியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இந்த அசாதாரண நிலையால் ஈக்குவடோர் (ECUADOR), பேரு (PERU) நாடுகளின் மேற்பரப்பின் வெப்பமடைகையானது, சென்ற வருடம் மார்ச் மாத முற்பகுதியில் பசுபிக் கடற்பிராந்தியத்தில் அவதானிக்கப்பட்டு, ''எல் – நைனோ'' அனர்த்தம் ஆரம்பமாகின்றது என அடையாளம் காணப்பட்டது.

''எல்–நைனோ'' அனர்த்தம் பொதுவாக ஒவ்வொரு 2 தொடக்கம் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படுகின்றது. அத்துடன் இதனால் அனர்த்தத்தின் அளவும் நீடிக்கும் காலமும் வேறுபட்டுக் கொண்டிருக்கின்றது. வழமையாக இந்தஅனர்த்தம் டிசம்பர் மாதப் பிற்பகுதியில் உச்சநிலை அடைகின்றது எனத்தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில், இறுதியாக இரண்டு அனர்த்தங்கள் இடம்பெற்றிருக்கின்றன. 1982/1983 ஆண்டில் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இது மிக மோசமான வெள்ளப் பெருக்கினையும், விரிவான காலநிலை தொடர்பான பாதிப்புக்களையும் ஏற்படுத்தி இருக்கின்றது. அத்துடன் ஆசிய நாடுகளின் சில பகுதிகளில் நிலவிய கடும் வரட்சிக்கும் காரணமாக இது அமைந்தது.


தென் அமெரிக்காவில் 1991/1992 ஆண்டில் ஏற்பட்ட இந்த அனர்த்தமானது மிக மோசமான வரட்சியினை அங்கு ஏற்படுத்தி இருந்தது. சென்ற வருடம் பசுபிக் கடற்பிராந்தியத்தில் பதிவு செய்யப்பட்ட வெப்பநிலையை மதிப்பீடு செய்த பல்வேறு வல்லுநர்கள், இந்த அனர்த்தமானது இந்த நூற்றாண்டில் மற்றுமொரு மோசமானதாக அமையு

**பி. அரவிந்தன்**

மென கருத்துத்தெரிவித்துள்ளனர். மேலும் உலகம் எங்கும் உள்ள பல்வேறு காலநிலை அவதானிப்பு மையங்களினால் ''எல்–நைனோ'' அனர்த்தம் இம்முறை 1998 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் வரை தொடரவாய்ப்புக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாண்டில் இது மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### பிரச்சினையை ஆராய பிராந்திய மாநாடு

இந்த இயற்கை அனர்த்தத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிய பிராந்திய மாநாடு ஒன்று அடுத்த மாதம் தாய்லாந்தில் ஆசிய அனர்த்த ஏற்பாட்டு நிலையத்தினால் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றது. இப்பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக இம்மாநாடு கூட்டப்படுகின்றது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சூழலியல் நிபுணர்கள் பங்கேற்கின்றனர். இந்த அனர்த்தம் காரணமாக தென்கிழக்காசிய நாடுகளே பெரிதும் பாதிக்கப்படலாம் என்று பசுபிக் பிராந்தியத்திலுள்ள NOAA என்ற கடல் சூழலியல் ஆய்வுகூடம்



எல் — நைனோவின் விளைவால் பசுபிக் சமுத்திரக் கரையோரத்தின் மேல் உருவாகும் கடும் புயல். செயற்கைக் கோள் பிடித்த படம் இது.

(Noaa — Pacific Marine Environmental, Laboratory)

முன்கூட்டியே அறிவிப்பு விடுத்திருக்கின்றது. இந்த எதிர்பார்ப்பின் பேரிலேயே தாய்லாந்தில் மகாநாடு நடத்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தாய்லாந்திலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

''எல்—நைனோ'' ஆனது சூழலில் முக்கியமாக வெப்பநிலையில் படிப்படியான மாற்றங்களையும், உலகின் பல்வேறு பகுதிகளில் திடீர் மழைவீழ்ச்சி, வரட்சி என்பனவற்றையும் ஏற்படுத்தி விவசாயத்துறை, நீர்மூல வளங்களில் சாதகமான அல்லது பாதகமான விளைவுகளை உருவாக்கும். மேலும் கடல்நீரின் மேற்பரப்பில் ஏற்படுகின்ற வெப்பநிலை மாற்றமானது கடற் சூழல் தொகுதியில் காணப்படுகின்ற—உயிரினங்களுக்குரிய — இயற்கை நிபந்தனைகள் மற்றும் சமநிலைகளில் இது பாதிப்புக்களை ஏற்படுத்திவிடுகின்றது.

### விவசாயத்துறையில் ஏற்படும் பாதிப்பு

1997 ஆம் ஆண்டுக்கான

(X ஆம் பக்கம் பார்க்க)

## குறளுரையாடல்

(தென்னிந்திய நடிகை ஒருத்திக்கும் துறவிக்கும் இடையில் குறட்பாவில் நடந்த கற்பனை உரையாடல் இது.)

துறவி:– அம்மா வணக்கம்! அடியேனோர் சாது
செம்புள் ஜலம்தருக சேர்த்து.

நடிகை:– ஐயா கிழத்துறவி; அம்மாவோ?! ஒய்என்ன?
நையாண்டி! நானோர்நங் கை.

துறவி:– நங்கைமார் எல்லாரும் நம்போல் துணி போட்டால்
எங்கேதான் போய் முடியும் இம்ம்......
(பெருமூச்சு).

நடிகை:– ஆண்டிநீர் நாளும் அவனருளைப் பாடாமல்
வீண்தானே இந்த விடுப்பு.

துறவி:– பற்றை விடுப்பு; பசிவிடுப்பு ''நான்'' ''எனதை''
விட்டேன்என் நோக்கம் விடுப்பு.
(ஏளனமாய் சிரிக்கிறார்).

நடிகை:– ஒரோர் தலமாய் உலாத்துகிற நீரிந்த
ஊர்வந்த தேனோ உரை.

துறவி:– குஷ்பாம் பிகையின் கோயில் அருகிலென்றார்
புஷ்பமுடன் வந்தேன்மெய் பூத்து.

வந்திங்கு பார்த்தால் வரலாறு காணாத
விந்தைகண்டு நின்றேன் விளித்து.

ஊனைக் கடைவிரிக்கும் ஓர்பெண்ணுக் காலயமா?
ஈனர் கிறுக்கர்! இவர்.

நடிகை:– கொங்கை எறிந்தவர்க்கு கோயில்: துணியெறிந்தோம்
எங்களுக்கும் கோயில் எடும்.

எம்மினத்துக் கோர்கோயில் ஏன்தவறு? கூறுங்கள்
நம்கலையே தெய்வ நலம்.

துறவி:– கலை!? தூய்மை; பெண்ணே கலையல்ல ஊரை
வலைவீசும் பொன்முட்டை வாத்து.

நடிகை:– வாத்தென்றா சொன்னீர்?? கால் வாழை மடலன்றோ
சாத்துமும் வாயிற் சனி.

துறவி:– வாழை மடலுக்குள் வைத்து இருப்பதென்ன ??
தோலழகு வாழ்விலோர் தூசு.

நடிகை:– தூசதனைக் காணத்தான் தொண்ணூறு ஆயிரங்கள்
காசு தரும்பலரின் கண்.

துறவி:– காசாலே கண்டதென்ன காதுபடக் கூறதனின்
வாசம் அறியாதென் வாழ்வு.

நடிகை:– ''கண்டறி யாதன கண்டேன்'' துறவியரே
மண்ணுலகில் காசை மதித்து.

துறவி:– என்னே! வியப்பு! எமக்குமுன் மெய்ப்பொருளைக்
கண்டாயா!?? எங்கேயக் காசு?

— ச. முகுந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான வெற்றிக்கு வழிகாட்டும் மெய்ஞ்ஞானம்

வருங்காலத்தை ஞான திருஷ்டியால் கண்டறிந்து சொன்னவர்களைப் பற்றி நமது புராண வரலாறுகள் நிறையக் கூறுகின்றன. இன்றைய பகுத்தறிவு வாதிகளின் அளவுகோலால் மதிப்பிடும்போது, அவர்களைப் பற்றிய வரலாறுகள் நம்ப முடியாதனவாகவே தோன்றும். ஆனால், அப்படிப்பட்ட ஒருவர் இந்த நூற்றாண்டிலேயே நம்மிடையே வாழ்ந்திருக்கிறார்!

பள்ளிக்கூடத்தில் ஆறாவது வகுப்புக்குமேல் படிக்க முடியாமல் விட்டு விட்ட எட்கார் கெயிஸ், இதைப் போலக்கண்டறிந்து சொன்ன உண்மைகள் இன்று மருத்துவ உலகத்தையே அதிசயிக்க வைத்துள்ளன! இரத்தக் குழாய் அடைப்பு, இருதய நோய், புற்றுநோய்க்கும்கூட—சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் இப்படி மருத்துவக் குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார் அவர். இன்று மருத்துவ நிபுணர்கள் கூடும் மாநாட்டில், அவை மிகச் சிறந்த அனுபவ குறிப்புக்களாக விவாதிக்கப்படுகின்றன. இன்றைய விஞ்ஞானத்துக்குப் பின்னணியாக நேற்றைய மெஞ்ஞானம்!

இந்தஅதிசய உண்மைகளை அவர் எப்படிக் கூறினார்? அதுவே ஓர் ஆச்சரியகரமான அனுபவம்...

எட்கார் கெயிஸ் அதிகம் படித்தவரல்ல. எந்த விதத்திலும் பயிற்சிகளில் ஈடுபட்டவரும் அல்ல. ஆனால் இந்த அபூர்வச்சக்தி அவருக்கு இருந்தது. அதற்கு அவரே சொல்லும் காரணம்—

''ஆண்டவனின் அருள் மீது எனக்கு அசைக்க முடியாத பற்று இருந்தது. அந்த பக்தியே எனக்கு மிகப் பெரிய பலமாக அமைந்தது. இந்த உடல் ஒரு சாதாரணமான, உலகரீதியான, போக அனுபவங்களுக்குரிய பொருளாக இருக்கலாம். ஆனால், நல்ல பண்புகளுடன் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்போது, அதன் உள்மனதுக்கு அபாரமான சக்தி வந்து விடுகிறது. ஆண்டவன் வழி காட்டுகிறார். எதையும் சாதிக்கக்கூடிய வலிமையும்—திறமையும் வந்து சேர்ந்து விடுகிறது. சாதாரண உடலில் அபூர்வ சக்தி கொண்ட உள்ளம் அமைய வேண்டுமானால், அதற்கு மற்ற எல்லாவற்றையும் விட முக்கியமானதாகத் தேவைப்படுவது ஆண்டவனின் அருள் தான்...!'

எட்கார் கெயிஸ் எப்படி இந்த சாதனையைச் செய்தார்? ஒரு நீளமான மேஜை மீது படுத்துக்கொள்வார். கோட், கழுத்தில் உள்ள 'டை', பெல்ட், எல்லாவற்றையும் நீக்கிவிடுவார். இரு கைகளையும் நெற்றிமீது வைத்துக் கொண்டு கண்களை மூடிக்கொள்வார். சில வினாடிகளில் தூங்குவது போல மெய்மறந்து போய்விடுவார்.

அவர் அருகே உள்ளவர்கள் தமது கேள்விகளைக் கேட்பார்கள்; அவர் பார்த்தே இராத இடங்களைப் பற்றிக் கேட்பார்கள்! ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால்உள்ள அவருக்கு அறிமுகமில்லாத மனிதர்களைப் பற்றிக் கேட்பார்கள்; பல ஆண்டுகளுக்குப் பின்னர் நடக்கப்போகும் நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விகளை எழுப்புவார்கள்.

எட்கார் கெயிஸ் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லுவார். விவரமாகக் கண் முன்னால் பார்ப்பதுபோல விரித்துக் கூறுவார். அவர் கூறுவதற்கும்—உண்மையான நிலைக்கும்; யூகிப்பதற்கும்—நடப்பதற்கும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பங்கு ஒற்றுமை இருக்கும்! அதற்குப் பிறகு, தூக்கம் கலைந்து போய் எழுந்திருப்பதுபோல அவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொள்வார். அவர் கூறியனவற்றை எழுதி வைத்திருப்பார்கள். அவரிடமே அவற்றைப் படித்துக் காட்டுவார்கள். ''அவற்றை நான்தான் சொன்னேனா? எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லையே...'' என்பார் கெயிஸ். இது ஆண்டவன் அருளிய வரப்பிரசாதமான சக்தியைத் தவிர வேறு என்ன?

அவருடைய அபூர்வ சக்தியைக் காட்டும் சில அனுபவங்கள் இவை...

★ ★ ★

தனது குழந்தைக்குத் தீராத வியாதியுடன் வந்து சேர்ந்தாள் அந்த அன்னை. டாக்டர்கள் பலர் சோதனைகள் செய்து பார்த்தும் சரியான வைத்தியமுறையைக் கூறமுடியவில்லை. அந்தக் குழந்தையைப் பற்றிக் கூறியதும், எட்கார் கெயிஸ் கூறிய வருணனையில் இரண்டு சொற்கள் கிடைத்தன. ஒன்று, 'டாபின்ஸைக் கண்டுபிடியுங்கள்!' என்பது: இன்னொன்று, 'கிளேரிவாட்டர் கொடுங்கள்' என்பது; அதைத் தயாரிக்கும் முறையையும் சொன்னார் கெயிஸ்.

நியூயோர்க்கிற்குப் புதிதாக வந்து சேர்ந்தவர் டாக்டர் டாபின்ஸ். அவர் எட்கார் கெயிஸைப் பற்றிக் கேள்விப்பட்டதுகூட இல்லை. டாக்டர் டாபின்ஸ் ஒரு சிக்கலான மருத்துவர். அவர் எழுதிக் கொடுக்கும் மருந்துகள் கடையில் கிடைப்பது அபூர்வம். மருத்துவ முறையையும் விளக்கமாகக் கூறமாட்டார். அதனால் அதிகம்பேர் அவரை நாடிப் போவதும் இல்லை.

எட்கார் கெயிஸ் கூறியவற்றை அவரிடம் சொன்னபோது, அவர் ஆச்சரியப்பட்டுப் போனார். அந்தக் குழந்தையின் வியாதிக்கு ஏற்ற மருந்து கிளேரிவாட்டர்தான். அது ஒரு மிகப் பழைய மருத்துவமுறை. அதை யாரும் நவீன வைத்தியத்தில் கடைப்பிடிப்பதே இல்லை. டாக்டர் டாபின்ஸைப் போன்ற ஒரு வித்தியாசமான மருத்துவர்தான் அதைக் குறிப்பிட முடியும். ''இது தான் சரியான மருந்து. அதை நான் சோதித்துச் சொல்வதற்குமுன் கெயிஸ் எப்படி ஊகித்துச் சொன்னார் என்பது எனக்குப் புரியவே இல்லை. இந்த அபூர்வ மருந்தைத் தயாரிப்பவர் பிரான்ஸில் மட்டும் தான் இருக்கின்றார். அவருடைய விலாசம் இது!'' என்று எழுதிக் கொடுத்தார் டாக்டர்.

பிரான்ஸில் அந்த மருந்து தயாரிப்பாளரை அணுகிய போது, ''இதை என் தந்தை தயாரித்து வந்தார். இப்போது அவர் காலமாகி விட்டார். அதனால் ஐம்பது ஆண்டுகளாக நாங்கள் இதைச் செய்வதில்லை. ஆனால், இதை எப்படித் தயாரிப்பது என்று எங்களால் சொல்லமுடியும். இதற்கான விவரமான குறிப்புகளை என் தந்தை எழுதி வைத்திருக்கிறார்'' என்று கூறினார் அவர்.

அப்படி அவர் எழுதிக் கொடுத்த குறிப்பை எட்கார் கெயிஸ் கூறிய குறிப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது, அப்படியே முழுவதும் ஒன்றாக இருந்தது! அதை குழந்தைக்குக் கொடுத்ததும் அந்தச் சிக்கலான வியாதி சரியாகி விட்டது.

★ ★ ★

தீராத வயிற்றுவலியினால் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார் கெட்சம் என்ற அந்த இளைஞர். ஒவ்வொரு டாக்டராக ஒன்பது மருத்துவ நிபுணர்களிடம் அவர் உடம்பைக் காட்டிச் சோதனை செய்துகொண்டார். ''இதற்குக் காரணம் 'அப்பெண்டிசிடிஸ்' (குடல் வளரி) தான். அறுவை சிகிச்சையில் அதை நீக்கிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்'' என்று ஒரு முகமாக அந்த ஒன்பது நிபுணர்களும் கருத்துத் தெரிவித்து விட்டார்கள்.

> ஆறாம் வகுப்புக்கு மேல் படிக்காத ஒரு மனிதர், அரிய மருத்துவ உண்மைகளை வெளியிட்டு அதிசயம் படைத்தார். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த ஒரு மெய்ஞ்ஞானி பற்றிய சுவையான தகவல்கள் இவை.

ஆனால், கெட்சம் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளத் தயாராக இல்லை. அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முடியாதபடி வேறு உடற்கோளாறுகள் இருந்தன. அதனால் ஒரு நண்பரின் ஆலோசனையின்படி, எட்கார் கெயிஸிடம் வந்தார் அவர். தனது தியான நிலையில் கெயிஸ் கண்டறிந்து கூறினார்! ''உங்கள் வயிற்றுக் கோளாறுக்குக் காரணம் 'அப்பெண்டிசிடிஸ்' அல்ல. உங்கள் முதுகெலும்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. அது சில நரம்புகளை அழுத்துகிறது. அதன் விளைவாகத்தான் உங்களுக்கு இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. முதுகெலும்புக்கு வைத்தியம் செய்து கொள்ளுங்கள். நீங்கள் குணமடைந்து விடுவீர்கள்.'' அப்படிச் செய்தார் கெட்சம். உடம்பு குணமாகி விட்டது!

★ ★ ★

**- லட்சுமி -**

அது 1931ஆம் ஆண்டு. மனித உடலின் சிக்கலான வியாதிகள் பலவற்றைப்பற்றி மருத்துவ நிபுணர்கள் கூடி விவாதித்துக் கொண்டிருந்த சமயம். முடக்குவாதத்துக்கு அப்போது ஆங்கிலமுறை மருத்துவத்தில் போதுமான குறிப்புகள் இல்லை. எட்கார் கெயிஸ் கண்டறிந்து சொன்னார்; ''கோல்ட் (தங்கம்) குளோரைடைப் பயன்படுத்தினால் இதற்குச் சாதகமான நிலை கிடைக்கும். உடல் புதுப்பொலிவுடன் விளங்கும். உறுப்புகள் புத்துயிர் பெறும்! பல்வேறு வியாதிகளுக்குத் தங்கம் மருந்தாகும்!'' — என்று.

அன்று அதைப்பற்றி யாரும் தீவிரமாகச் சிந்திக்கவில்லை. குறிப்புகள் பதிவு செய்து வைக்கப்பட்டன.

1965ஆம் ஆண்டு, செப்ரெடம்பர் மாதம் ஐந்தாம் தேதி, 'ஸ்டார்' பத்திரிகையின் அன்றைய இதழில் புதிய மருத்துவமுறைகள் பற்றிய சுவையான கட்டுரை ஒன்று வெளியாகி இருந்தது. அது டாக்டர் ஜான், டாக்டர் சார்லஸ் ஆகிய இரு நிபுணர்களின் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டது. முடக்குவாதத்துடன் சேர்ந்த உபாதைகளுக்கு, 'கோல்டுகுளோரைடை' உபயோகிப்பது பற்றிய புதிய கண்டுபிடிப்புகள் அதில் வெளியாகி இருந்தன! வாஷிங்டனில் 'ஹிப்ரு ஹோம்' என்ற மருத்துவ மனையில், அப்போது ஆறாத புண்களுக்கு ஒரு நவீன மருத்துவ முறை மூலம் குணப்படுத்தும் விதத்தைப் பயன்படுத்தத் தொடங்கி இருந்தார்கள். அதற்கு முக்கியமாகப் பயன்பட்டது என்ன தெரியுமா? இலேசான தங்கத் தகடுகள்! நீரிழிவு நோயினால் ஏற்படும் கட்டிகள், அல்சர் புண்கள், பிளவைப் புண்கள் இவற்றுக்கு அபூர்வ மருந்து முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டது இது!

அறுபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்பே, ''புற்றுநோய்க்கு மருந்தாக ஒவ்வொரு நாளும் மூன்று வாதுமைப் பருப்பு சாப்பிட்டுவர வேண்டும்'' என்று கூறி இருக்கிறார் கெயிஸ். அது புற்றுநோயைப்பற்றி மருத்துவ உலகம் அதிகமாக ஆராய்ச்சிகளைத் தொடங்காதகாலம். இப்போது புற்றுநோய் மருத்துவம் பற்றிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார், கலிபோர்னியாவில் உள்ள கிளென் இட்லர் என்ற நிபுணர். லெட்ரைல் (Laetrile)என்ற பொருள் புற்றுநோய்ச்சிகிச்சைக்கு முக்கியமாகப் பயன்படும் என்று அதில் அவர் விவரித்துள்ளார். வாதுமைப் பருப்பில் லெட்ரைல் சத்து நிறைய இருக்கிறது.

கெய்ஸ் ஆராய்ச்சிக் கூடங்களில் செய்யப்படும் மருத்துவ சோதனைகளைப் பற்றி சிறுகுறிப்புகள் பலவற்றைக் கூறி இருக்கிறார். உடல் வியாதிகளுக்கு இரத்தத்தைச் சோதிப்பது பற்றிக் குறிப்பிடும்போது, 'ஒரே ஒரு துளி இரத்தத்தைக் கொண்டு சோதனை செய்து உடம்பின் சிக்கலான நோய்களுக்கு மருத்துவம் செய்யும் முறை ஒருநாள் கண்டுபிடிக்கப்படும்' என்று எழுதி வைத்திருக்கிறார் கெயிஸ்.

அந்தக் குறிப்பு எழுதப்பட்டு அரை நூற்றாண்டுக்குப் பிறகு, 1960ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தப் புதிய மருத்துவசோதனை முறை குறித்து முதலில் பத்திரிகைகளில் வெளிவந்தது. ''அமெரிக்கப் புற்றுநோய் ஆராய்ச்சிக் கழக''த்தின் உதவியுடன் இன்றுஆராய்ச்சிகள் பல நடந்து வருகின்றன. கருவில் உள்ள குழந்தை முதல் எண்பது வயதுக் கிழவர்வரை, மனிதனின் உடல் வளர்ச்சியில் ஏற்படும் மாறுதல்களை, சிக்கலான வியாதிகளை இன்று சோதனை மூலம் கண்டறிய முடியும். அதற்கு ஒரே ஒரு துளி இரத்தம் போதும்''! என்று 'வாஷிங்டன் டெய்லி நியூஸ்' இதழில் டாக்டர் ஹண்டர், டாக்டர் மார்க்கெஸ்ட் ஆகிய இருவரும் எழுதி இருந்தார்கள்!

மருத்துவம் பற்றிப் பல உண்மைகளைக் கூறிய கெயிஸ், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் குறிப்பிட்டிருக்கிறார். 1933ஆம் ஆண்டு அவர் எழுதி வைத்த குறிப்பு இது —

''அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் மனிதனை அழிக்கக்கூடிய கதிர் ஒன்று (Death — Ray) கண்டுபிடிக்கப்படும். இதை 'காஸ்மிக் — ரே' என்றும் கூறலாம். அது பல்லாயிரக் கணக்கான உயிர்களை மிக எளிதில் அழிக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கும்.''

1961 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், எந்தப் பொருளையும் அழித்து ஆவியாக மாற்றிவிடக்கூடிய அழிவு கதிர் (Death — Ray) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அணு ஆயுதப் போரில் அது பயன்படுத்தப்படும். நினைத்துப் பார்க்க முடியாத அளவு உஷ்ணம் கொண்டதாக அந்தக் கதிர் இருக்கும்.

கெயிஸ் கண்டுபிடித்துக் கூறிய உண்மைகளை, இன்று டாக்டர்கள் மிகுந்த சிரத்தையுடன் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்கள் இன்று உலகெங்கும் இருக்கிறார்கள். இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்குப் பின்னணியாக அன்று எட்கார் கெயிஸின் மெய்ஞ்ஞானம் அமைந்திருந்ததை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்!

★

ஆதாரம்: 'EDGAR CAYCE' —The Sleeping Prophet

## தாய்மையின் தூய அன்பு

இளம் பெண் ஒருத்தி வீதியில் தனியாக இருக்கிறாள். முரட்டுக் காளை ஒன்று அவளைநோக்கி பாய்ந்தோடி வருகிறது. தன் உயிருக்குப் பயந்து, மானைப் போல அவள் துள்ளி ஓடிவிடுகிறாள்.

அதே பெண், தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் அவள் குழந்தையை நோக்கி அந்த முரட்டுக் காளை ஓடி வருமானால் என்ன செய்வாள்? அந்தப் பெண்ணுக்கு



தன் உயிரைப்பற்றிச் சிறிதளவும் பயமிருக்காது; குழந்தையின் உயிர் காப்பது ஒன்றிலேயேஅவள்மனம் முழுவதும் இருக்கும். தாய்மை உணர்வுமேலோங்க முரட்டுக் காளையைத்துணிவுடன் வழி மறித்து எதிர்ப்பாள். இதுவே தூய அன்பு. எங்கே உண்மையான அன்பு இருக்கிறதோ அங்கு தன்னலமற்ற பெருந்தன்மை இருக்கிறது; பிரதிபலனை எதிர்பார்ப்பதில்லை. பயம் என்ற பேச்சும் அங்கு இல்லை.

★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொங்கலோ பொங்கல்

திவாகரன் தன் தோட்டத்திலிருந்து கொண்டு வந்த வாழைக்குலைகளைப் பழுக்க வைப்பதற்காக கிடங்கில் வைத்து மூடிவிட்டு புகை ஊதிக்கொண்டிருப்பதை அவனுடைய பிள்ளைகள் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஐந்து வாழைக்குலைகள் பழுக்கப் போட்டிருக்கிறான். ஒரு குலையை அவர்கள் வீட்டுத் தைப்பொங்கலுக்காக எடுத்துக் கொண்டு மிகுதி நான்கு குலைகளையும் சந்தைக்கு விற்கக் கொண்டு போவான்.

''பொங்கல்நேரம் வாழைக்குலை நல்ல விலைக்கு விக்கலாம். என்ன...'' என்று கேட்டுக்கொண்டு திவாகரனின் மனைவி துளசி வருகிறாள். அவன் புகை ஊதுவதை நிறுத்திவிட்டு, ...''ம்'' என்று உற்சாகமில்லாமல் தலையாட்டுகிறான். பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்தபோதும் அவனது மனதில் சந்தோஷமேயில்லை.

இவ்வளவு காலமாக பொங்கலின் போது அவனுடைய தாய் அவனுடனே இருந்தாள். இம்முறைதான் அவன்வீட்டில் தாய் இல்லை, பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பார்கள். ஆனால், திவாகரன் விஷயத்திலோ பிள்ளை மனம் தான் தாயை நினைத்து பித்தாகித் தவித்துக்கொண்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் ஆசைதான் காரணம். அவனுடைய தாய் செல்லம்மாவும் இன்னும் கொஞ்சம் சுகபோகங்களை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையில் தான் அவனை விட்டு வேறிடம் போனாள்.

செல்லம்மாவுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் ஆனந்தன். திவாகரன் இளையவன். சிறுவயதில் தந்தையை இழந்த பிள்ளைகள் இருவரையும் வளர்த்து ஆளாக்குவதற்கு அவள் நிறையக் கஷ்டப்பட்டிருக்கிறாள். கூலி வேலைக்குக் கூடப் போயிருக்கிறாள். அவளுடைய அண்ணன் செல்லத்துரை இடையிடையே ஆனந்தனுக்கும், திவாகரனுக்கும் கொப்பி, பென்சில், பேனா என்று வாங்கிக் கொடுத்ததுண்டு. ஆயினும் இரண்டு பிள்ளைகளையும் நல்ல வழியில் வளர்த்து நல்ல பிள்ளைகளாய் உருவாக்கியது அவளுடைய நிலையைப் பொறுத்தவரை ஒரு கெட்டித்தனம் என்றே சொல்ல வேண்டும்.

மூத்தவன் ஆனந்தன் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து தானாகவே அரசாங்க எழுதுவினைஞர் பரீட்சை எடுத்து உத்தியோகத்தன் ஆனபோது தன் கஷ்டமெல்லாம் தீர்ந்தது, இனித்தான் சௌபாக்கியவதியாய் வாழலாம் என்று மகிழ்ந்தாள் செல்லம்மா. காத்திருந்தவர் போல் கல்யாணப் பேச்சோடு வந்தார் செல்லத்துரை.

''தங்கச்சி, என்ரை மூத்த மகளுக்கும், ஆனந்தனுக்கும் கலியாணம் செய்து வைப்பமே''

அவர் இடைக்கிடை கொப்பி, பென்சில் வாங்கிக் கொடுத்த உரிமையில் சுலபமாகக் கேட்டுவிட்டார். செல்லம்மாவுக்கு உண்மையில் ஆத்திரம்தான் வந்தது. அதைக்காட்டாமல் அமைதியாய்ச் சொன்னாள்.

''...அண்ணை நான் என்ன சுகத்தைக்கண்டனான்? நான் பட்ட கஷ்ரம் உனக்குத் தெரியாதே. ஆனந்தனுக்கு நல்ல சீதனம் வாங்கி இனியென்டாலும் அனுபவிக்கலாம் எண்டு ஆசைப்படுகிறன். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட மாதிரி இப்பிடி வந்து கேட்கிறியே. இது நியாயமே அண்ணை...?''

செல்லத்துரைக்கு ஏமாற்றமாயிருந்தாலும்செல்லம்மா சொன்னது நியாயமாகப் பட்டது. அவரே முன்னின்று ஆனந்தனுக்கு பெரிய இடத்தில் நல்ல சீதனத்தோடு கல்யாணம் பேசிச் செய்து வைத்தார். சீதனத்தை விட ஒரு இலட்சம்ரூபா இனாமாக செல்லம்மாவின் கைக்கு வந்தது. தன் பழைய வீட்டையும் திருத்தி புதிதாக்கி, நகை நட்டுகளும் வாங்கிப் போட்டு அவ்வளவும் செலவழித்து முடித்தாள்.

ஆனந்தனைப் போலவே திவாகரனும்'' இனாம்'' வாங்கித் தருவான் என்று எதிர் பார்த்தாள். ஆனால் அதில் அவளுக்குக்கிடைத்ததுஏமாற்றம்தான். தமையனைப் போல் திவாகரனால் படிப்பில்பிரகாசிக்கமுடியவில்லை. சாதாரணதர வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டான். அந்தப்படிப்போடு எந்த வேலையைத் தேடமுடியும்? தகப்பனுடைய தோட்டக் காணி இருந்ததால் அவன் கமம் செய்யத் தொடங்கினான்.

செல்லத்துரையின் மகளுக்கும் இன்னும் கலியாணம் பொருந்திவரவில்லை. திவாகரனைச் செய்து வைக்கலாமென்று தங்கையிடம் கேட்டுப் பார்த்தார். செல்லம்மாவும் சம்மதித்தாள். ஒரு காணித்துண்டை சீதனமாய்க்கொடுத்து துளசியை திவாகரனுக்கு கலியாணம் செய்துவைத்தார். தாயின் வீடு இருந்தால் திவாகரன் தனக்கென்று வேறு வீடு கட்டிக்கொள்ளாமல் தாயின்வீட்டிலேயே இருந்தான். ஆனந்தன் ஏற்கெனவே ரவுண் பக்கத்தில் மாளிகை மாதிரி வீடு கட்டிக் குடியிருந்தான். அதனால் அவன் தாயின் வீட்டில் பங்குகேட்க வரவில்லை. ஆனால் தம்பி திவாகரனிடம் ஒரு விஷயத்தை நறுக்காய்ச் சொல்லியிருந்தான் அவன்.

**-எம். இந்திராணி-**

''...தம்பி, நான் அம்மாவுக்கு ஒரு லட்சம் ரூபா இனாம் வாங்கிக் குடுத்தனான். அம்மாவின்ரை வீடும் உனக்குத்தானே. ஆனபடியால் அம்மாவை வைச்சுப் பார்க்கிற பொறுப்பு உன்னுடையது. அம்மாவை நீ கவனமாய்ப் பாதுகாக்க வேணும்...''

அண்ணன் இப்பிடிச் சொன்னது திவாகரனுக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. எப்போதுமே அவன் தாயைப் போற்றி, மதித்துப் பாதுகாத்து வருபவன். தாயைப் பார்க்கிற பொறுப்பு தனக்குக் கிடைத்ததை பெரிய பேறாய், பாக்கியமாய் அவன் கருதினான்.

''...அம்மா எங்களைக் கஷ்டப்பட்டு வளர்த்தவ. இனி நாங்கள் அம்மாவை ராசாத்தி மாதிரி வைச்சுப் பார்க்க வேணும்'' என்று துளசியிடம் சொன்னவன், சொன்னது போலவே செய்தான். தன்னால் இயன்றளவு தாய்க்கு வேண்டியதெல்லாம் செய்தான். தாய்க்கு என்ன உணவு பிடிக்குமோ அதுதான் சமைக்கச் சொல்வான். ஒரு பண்டிகை என்றால் தாய்க்கு முதலில் புத்தாடை வாங்கி வந்து கொடுத்த பிறகுதான் தனக்கோ, மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ வாங்குவான்.

துளசியோ ''மாமி இண்டைக்குஇடியப்பமோபுட்டோ அவிக்கிறது? இடியப்பத்துக்குச் சொதி வைக்கவோ, சம்பல் இடிக்கவோ? உங்களுக்கு எது பிடிக்கும்?'' என்று செல்லம்மாவைக் கேட்டுவிட்டுத்தான் சமையல் தொடங்குவாள். மாமியார் ''தலையிடிக்குது'' என்றால் போதும் உடனே ''வாங்கோ மாமி தைலம் பூசி விடுகிறன்'' என்று ஓடி வருவாள். திவாகரனும், மனைவியும். ஏன் அவர்களுடைய பிள்ளைகளும்கூட செல்லம்மாவுக்குத் தொண்டு செய்வதுதான் தம் முதற்கடமை என்று கருதுபவர்கள் போல தம்மால் இயன்றதெல்லாம் செய்தார்கள். அப்படி அவர்கள் செய்தும் செல்லம்மாவின் மனம்திருப்தி கொள்ளவில்லை. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்ற நிலையில் அவள் மனம் இருந்தது. மனித மனமானது ஆசைக்கு அடிமையாகி விட்டால் ஒருநாளும் திருப்தி கொள்ளாது.

(X ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சீவி சிறுகதைகள்

# விரிசல்

இந்த மழை என்ன ஜோராய் பெய்யுது. ஓட்டில இருந்து தண்ணி விடாம ஒழுகிக் கொண்டு இருக்குது. கையை நீட்டிப் பாருங்கோ ஆசையாய் இருக்கும். ஆனா அம்மாதான் பேசுவா ''கண்ணா... ஈரத்துக்கை போகாதை... சளி பிடிச்சிடும்'' எண்டு.

சளி பிடிக்க நான் என்ன தங்கச்சிப் பாப்பாவா? நான் தான் வளர்ந்திட்டனே! ஆண்டு இரண்டு படிக்கிறன். அம்மாதானே அண்டைக்கு சொன்னவ ''கண்ணா நீ வளர்ந்த பெடியன் தங்கச்சிப் பாப்பாவை விட பெரிய ஆள்... தங்க்ச்சியையெல்லாம் கவனமாகப் பார்க்கோணும்'' எண்டு. அப்ப எனக்கு சரியான ''லெவலாக'' இருந்தது.

என் தங்கச்சிப் பாப்பாவைப் பார்த்திருக்கிறீங்களா? இந்த உலகத்திலே என் தங்கச்சிதான் ரொம்ப அழகு. அதோட கன்னத்தைத் தொட்டா மெத்துமெத்தெண்டு இருக்கும். இத்தூண்டு விரல்கள் அதுக்கு. வாயைத்திறந்து கொட்டாவி விடேக்க வாய் சிவப்பா தெரியும். நான் என்ர விரலை நீட்டினா இறுகப்பிடிச்சுக் கொண்டு இருக்கும்; விடாது. ஆனால் அது அழுதிச்செண்டால் எனக்கும் அழுகை வரும். நான் அழுதா அம்மா சிரிப்பா. ''இந்தா பார்றா இந்தக் குட்டிப்பயல் தங்கச்சிக்காக அழுகிறான்'' எண்டு. அப்பிடித்தான் அழுவேன் என் தங்கச்சி பாப்பா தங்கப் பாப்பா. நான் பெ... ரீ... சா... வளந்து அதுக்கு நிறையக் கலரிலை சட்டையெல்லாம் வேண்டிக்குடுப்பன். அதுக்கு கழுத்துக்கு சங்கிலி, காதுக்குச் சிமிக்கி, அப்புறம் கால் சங்கிலி எல்லாம் வாங்குவன். என்ர தங்கச்சிதான் உலகத்திலேயே உசத்தி.

இப்பிடித்தான் நான் பள்ளிக் கூடத்திலை சொல்லி பிறேமோட சண்டை போட்டனான். பிறேம் ஆரெண்டு கேட்கிறீங்களா? அவன் தான் என்ர பெஸ்ற்பிறண்ட். நாங்க ரெண்டு பேரும் தான் ஒண்டா விளையாடுவோம். அம்புலிமாமா எல்லாம் ஒளிச்சு மாத்திறனாங்கள். என்னோட யாரும் சண்டைக்கு வந்தா அவன் எனக்கு சப்போர்ட்டுக்கு வந்திடுவான். எங்கட வகுப்பிலேயே அவன் தான் உயரம். அதால அவனோடையும் என்னோடையும் ஒருத்தரும் 'தனக' வரமாட்டினம்.

அவன்தான் அண்டைக்கு தன்ரை தங்கைச்சிதான் உசத்தி எண்டான். போடா என் தங்கைச்சிதான் உசத்தி எண்டன் நான். அவள் இல்லை தன்ரதங்கைச்சிதான் எண்டான். ரெண்டு பேரும் அப்பிடியே கத்திக் கத்தி கடைசில எனக்குச் சரியான கோவம் வந்து அவன்ரை மூஞ்சியில ஓங்கி ஒரு குத்து விட்டன். அவனும் விடேல்லை. திருப்பி அடிச்சான். ரெண்டு பேரும் சட்டையெல்லாம் இழுத்து விழுத்தினத்திலை 'யூனிபோம்' எல்லாம் ஊத்தையா போயிட்டுது. யாரோ போய் மேகலா ரீச்சரைக் கூட்டிக் கொண்டு வந்தாங்க.

ரீச்சர் ஓடிவந்து ''டேடே வாலுகளா...ஏண்டா சண்டை போடுறீங்க'' எண்டு எங்க ரெண்டு பேரையும் பிரிச்சு விட்டா [illegible] யான அழுகை [illegible] பிறேமுக்கும்தான். நான் அழுது அழுது விசயத்தைச் சொன்னன். அதைக் கேட்டிட்டு அவங்க சிரிச்சாங்க. சிரிச்சிட்டு ரீச்சர் சொன்னா ''சரி சரி அடிபடாதீங்க. பிறென்ஸ் இப்பிடியெல்லாம் சண்டை பிடிக்கலாமா? அவனுக்கு அவன் தங்கச்சி உசத்தி. உங்களுக்கு உங்கட தங்கச்சி உசத்தி. இதுக்காக ரெண்டு பேரும் சண்டை பிடிக்கக்கூடாது. இப்ப நேசம் போடோணும். சரியா?'' எண்டா. நாங்க ரெண்டு பேரும் சரி எண்டம். அவ சிரிச்சிட்டு ''சரி இப்ப ரெண்டு பேரும் ஓடுங்கோ'' எண்டா. நான் ஓடீட்டு ஒருக்கா திரும்பிப் பார்த்தன். அவ எங்க ரெண்டு பேரையும் பார்த்து சிரிச்சபடி நிண்டா.

எங்க மேகலா ரீச்சர் என்ன வடிவு தெரியுமா? எங்க அம்மா மாதிரி. பூ போல இருப்பாங்க. பிறெண்ட் போல கதைப்பாங்க. எப்பவாவது இருந்திட்டுதான் கோவம் வரும். கதையெல்லாம் சொல்லித் தருவா. எல்லாரும் ஒருத்தரை ஒருத்தர் மதிக்க வேணுமாம். நாங்க எல்லாம் கேள்ஸிற்கு மரியாதை குடுக்கணுமாம். அப்பவெல்லாம் எனக்கு தங்கசிப்பாப்பாவின் நினைவு வரும். அம்மா நினைவுக்கு வருவாங்க. ரீச்சர் சொல்லுறது [illegible] அது சரி. எங்கட ரீச்சருக்கு எங்கட அம்மாக்கு தங்கச்சி இருக்கிறமாதிரி யாரும் இல்லையா? எனக்கு ஒரே யோசனையாய் வரும். யாரிடமாவது கேட்கோணும் போல இருக்கும். யாரைக் கேட்க?

ஒரு நாள் அம்மா தங்கச்சி பாப்பாட துணியை மாற்றிக் கொண்டிருக்கேக்க கேட்டன். ,'அம்மா ' எங்கட மேகலா டீச்சர் உங்களோட படிச்சவ எண்டனீங்களெல்லா. ஏன் அவவிற்கு தங்கச்சிப்பாப்பா ஒண்டும் இல்லையா?''

''...ஏன் கேட்கிறாய்?'' அம்மா கேட்டா.

எனக்கும் ஏன் கேட்டனான் எண்டு விளங்கேல்லை. தங்கச்சிப் பாப்பா சிரிக்கேக்க தெரிஞ்ச ரெண்டு பல்லையும் பார்த்தபடி நிண்டன். பிறகு அவவே சொன்னா ''இல்லடா அவவிற்கு இன்னும் கல்யாணம் ஆகேல்லை'' எண்டு.

ஏன்?...

கொஞ்ச நேரத்தில அம்மா சொன்னா ''அவங்களிட்ட காசில்லையடா'' எண்டு. அப்படிச் சொல்லேக்க அம்மான்ர குரல் கவலையாய் இருந்தது. எனக்கு ஒண்டும்

**-''தற்பரி''-**

விளங்கேல்லை. 'எதுக்கு காசு வேணும்?'' எனக்கு கவலையாய் போயிட்டுது. ''சரி பரவாயில்லை நான் வேணுமெண்டா என்ர உண்டியலில சேர்த்து வைச்சிருக்கிற காசைக் குடுக்கட்டாம் மா? அதுக்குள்ளை நிறைய இருக்கு''

இப்ப அம்மாக்கு உண்மையாகவே கண் கலங்கியிட்டுது. ''அடேய் பெரியமனுசன் கனக்க கதைக்காமை ஓடிப் போய் விளையாடு'' எண்டு கலைச்சா.

நானும் தோட்டத்தில குளிரக் குளிர கால் வைச்சு ஓடினன். பெரிய வேப்பமரத்துக்கு கீழ நிலத்தில புழு பொறுக்கிக்கொண்டு இருந்த புலினிகளெல்லாம் சுத்திக் கொண்டு பறந்தது. எனக்கு விளையாட மனம் வரேல்லை. சும்மா சுத்தித் திரிஞ்சன். அப்பதான் எங்கட வீட்டிலை மாவிடிக்க வாற பொன்னம்மா, அவவோட இடிச்சுக் கொண்டு நிண்டவவுக்கு சொல்லுரா... ''எடி லட்சுமி இந்தப்பொடி ஒரு கைபிடியளவு இருந்து கொண்டு தாயோடை கதைக்கிறதைக் கேட்டியே. தன்ர பள்ளிக்கூட ரீச்சருக்கு ஏன் கலியாணம் ஆகேல்லை எண்டு கேட்கிறான்.... இந்தக் காலத்தில குமருகள் கரை சேர காசு தேவை எண்டது இந்தப் பயலுக்குப் புரியுமா? ஏன் இவன்ர அம்மாவே எவ்வளவு காசைக் குடுக்க வேண்டியிருந்தது இவனோட அப்பாவை... அதுதான் 'டொக்டர்' ஐயாவைக் கலியாணம் செய்யிறதுக்கு. அவள் அந்தக் காலத்திலை சம உரிமை, சீதனக் கொடுமை எண்டெல்லாம் கதைச்சவதான். என்ன செய்யிறது காலத்தோட ஒத்து கலியாணத்தைச் செய்தா... ஆனாலும் அந்தப் பெட்டையில முந்தி இருந்த துடிப்பு இப்ப இல்லைத்தான் ...ம்ம்...'' மூச்சு விடாம கதைக்கிறா. எனக்கு எரிச்சலாய் வந்தது.

''...அய் அதோ அப்பாவோடகார் வருகுதே...எங்க அப்பா ரொம்ப ஸ்மாட். எதுக்கும் பயப்பிடவே மாட்டார். அவருக்குப் பக்கத்தில் இருந்தா எனக்கு ஒண்டுக்குமே பயமில்லை. பெரிய டொக்டர் ஊசியெல்லாம் போடுவார். ஆனால்ஒருக்கா எனக்குக் காச்சல் வந்திருக்கேக்கஅப்பாவுக்குக் கண்ணே கலங்கியிட்டுது. என் கூடவே இரவெல்லாம் முழிச்சிருந்தார். என்னை ஒரு கையிலும் தங்கைச்சிப்பாப்பாவை

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவருட வாழ்த்து!

போன வரியத்தில் பொழிந்தடித்த மாரிமழை
ஈன அழுக்கையெல்லாம்
இறைத்துக் கழுவியதோ...... ?
எனக்குத் தெரியாது; என்றாலும்.....
'தைபிறந்தால்'
எரிமலைகள் ஆறி இளஞ்செழிப்புத் துளிர்த்து எழும்,
வருமினிய நாளில் வசந்தநிலம் புதுசாகப்
புனிதங்கள் பூசிப்
பொலிவேறிப் புன்னகைக்கும்,
வாரடித்து வெள்ளம் வயலைக் குளிர்த்தியதால்
ஏரிறங்கும் விரைவில்......,
இரவுப் பனிக்கு அஞ்சி
கொடுகிக் கிடந்தசனம் குன்றுகளாய் விம்மிஎழும்,
மயங்கிநின்ற மாரி;
மருளவைத்த குளிர்; அகல
சூரியனின் சூடினியெம் முண்ணாணில் துணிவூட்டும்,
என்றறிவேன்!
அத்தோடின் நிலமின்று நீறுபூத்த
நெருப்பாய்க் கிடப்பதையும் நிச்சயமாய் நன்கறிவேன்!
நெருப்பை வயிற்றிலிட்டு நிற்கையிலே
முழுச்சுகமும்
வந்திடுமா ஜெகத்திரே??
வாராது! என்றாலும்......
'நம்பிக்கை நமைநகர்த்தும் அச்சாணி' எனநிமிர்ந்து
''தைபிறந்தால் வழிபிறக்கும்''
என்றவொரு தைரியத்தில்......
தீக்கரங்கள் எங்கும் திரிவதனைத் தெரியாமல்
பூக்கும் நிலத்துக்குப்
புதுவருட வாழ்த்துரைத்தேன்.

— த. ஜெயசீலன்

## எரிதழல் எடுக்க வாரீர்!

தாதவிழ் பூவிலேறித் தேனினை மாந்திவண்டு
மாதவள் பாகங்கொண்ட மதியுளான் உரைத்தநல்ல
வேதமும் பொருளுங்கூறி வினைப்பயன் திரக்கண்ட
மாதவம் உடைய எங்கள் மாண்புடைப் பதியுமின்று

ஆறணி யண்ணல்தந்த அருமருந் தன்னவெண்மை
நீறணி நெற்றிகண்டால் நெறிபிறழ் நெஞ்சங்கொண்டு
விறென நின்று அஃதை வெடுக்கென நீக்குகின்ற
மாறுளார் வாழ்வதாலே மாசதா யாகிப்போச்சே!

அன்னமே காணாரில்லம் எளிதினில் நாடிச்சென்று
வன்னமாய்க் கதைகள்பேசி வளைத்துடன் வாரிவாரிப்
பொன்னுடன் பொருளும்போட்டுப் புன்னெறி சேரச்செய்யும்
தன்னலம் மிக்கார்தம்மைத் தாவுதல் தகுமோ ஐயா!

வேதனை திரவெற்றி வேண்டிடும் போதுதந்து
காதணை பாடல்கேட்டுக் களிப்புறுங் கோவில்கொண்ட
நாதனை நாமும்நண்ணி நலம்பெறல் அன்றியந்தப்
போதனை மொழியைக்கேட்டுப் பாய்வதும் முறையோ ஐயா!

வையகம் மீதுதெய்வ வண்மையும் வாழ்வுஞ்சேர
மெய்யகங்கொண்டநல்லீர் மேன்மையா மிந்துதர்மம்
பொய்யகம் பெற்றோராலே புழுதியாய் ஆகிப்போக
ஐயகோ நீவிரிங்கே அமைதியா யிருப்பதேனோ!

இத்தரை மீதுதங்கள் இதயமே யேறிநின்ற
சித்தரை சடையின்மீது சீறிடும் நதியைக்கொண்ட
பித்தரைப் போற்றுகின்ற பேறுடைப் பெருமைபெற்றீர்
எத்தரைக் கொளுத்தவிங்கே எரிதழல் எடுக்கவாரீர்!

— உடுவில் அரவிந்தன்

## வதந் 'தீ'!

(ஊரடங்கு நேரம் மாற்றப்பட்டுள்ளதாக யாழ். நகரில் வதந்தி பரவிய சமயம் இக்கவிதை இயற்றப்பட்டு, ஒப்படைக்கப்பட்டது,)

ஊரடங்கு நேரத்தின் உண்மைநிலை மாற்றிவிட்ட
நாரதர்கள் பெற்றெடுத்த நாசகரே! — வீரமற்ற
கோழைகளே! வீண்வதந்தி கூறுவது நம்மினத்தின்
வாழையடி வாழை வருத்தம்.

நீருக்குள் தீயிட்டு நீறாக்கி காட்டிடுவார்
பாருக்குள் பொய்களுக்கு பஞ்சமில்லை — யாருக்கும்
காத்திருந்தால் பூத்தொடுத்து காரியத்தை மாற்றிடுவார்
வாதிடுவார் சொல்வார் வதந்தி.

என்னென்பார் காதுக்குள் எண்ணெயாய் ஊற்றெடுக்கும்
முள்ளொன்று நெஞ்சுக்குள் மூச்சுவிடும் — தெள்ளறிவே
வேலையற்று சுற்றுகின்ற வீணர் விஷமத்தால்
பாலைக்கள் ளாக்கும் பசு.

தேனுக்குள் நஞ்சென்றே தென்றலது வண்டிற்கு
வீணுக்குச் சொல்லிவிடும் வேளைவரும் — ஈனுகின்ற
காளையது பால்கறக்கும் கற்பனைகள் விற்பனைக்கு
வேளைக்கே உண்மை விதை!

காட்டுத்தீ போற்பரவும் காலனவன் வேகத்தில்
வீட்டுக்குள் வந்துவிழும் வீண்பொய்கள் — நாட்டுக்குள்
கற்றவர்கள் கொஞ்சந்தம் கண்ணயர்ந்தால் மண்ணையினி
விற்றுவிடும் இத்தீ விரைந்து!

— உச்சிற்கிழான்

## அவர் கவலை....!

மண்ணிறைந்த குப்பையெல்லாம்
வாரியள்ளிப் போட்டு
மலைக் குவியல் ஊத்தையெல்லாம்
துவைத்துலர்த்தியாச்சு
கண்ணெரிய அடுப்பெரித்துச்
சமையலிங்கு ஆச்சு
காலுழைய நான்நடந்து
வீடு துடைச்சாச்சு
சின்னவளைப் பெரியவனைக்
குளிக்கவைத்து வாதக்
கிழவனுக்குப் பணிவிடைகள்
யாவும் முடித்தாச்சு
இன்னுமவர் வீற்றிருந்து
விளாசுகிறார்; தேர்தல்
எப்படித்தான் நடக்குமென்ற
இமயம் போன்ற கவலை!

— சக்தி

## திசை அறியாத சுவடுகள்

தீராத நோயது தீர்த்தது
என் காதலி உயிரினை
மனமது வெறுத்தது
தரணியின் உறவினை
மானிடன் சேராத இடமது
என் மனதினை ஈர்த்தது
திசையெதுவுமே அறியாது
பாதங்கள் சுவடுகள் பதித்தன
அது அவளுக்குப் பிடித்த
கடற்கரை வெளி என்பதால்
பாதங்கள் நிலைகொள்ள மறுத்தன
எனக்குப் பிடித்த புல்வெளிதனில்
அசைவின்றி அவை நின்றன
காற்றின் அசைவினில்
தரைப்புற்கள் மோதின...
அவை மோதிய ஓசைகள்
எரிச்சலைக் கொடுத்தன
தலையெல்லாம் உருள்வது போல்
உணர்வுகள் இருந்தன;
பின் உணர்வுகள் இழந்தன
பறவைகளின் ஓசைகளால்
விழிகள் திறந்தன
அங்கே நிலவொளி அகன்று
கதிரவன் ஒளி பிறந்தது
அப்பொழுது பனியில் நனைந்த
புற்கள் எனக்காக அழுதன

— ச. தியானேஸ்வரசர்மா

## கூண்டிலாச் சிறை என்றினித் தொலையும்?

அந்தியிருட்டினில் நாய்கள் குரைக்கும்
தந்தியடிக்கும் - நெஞ்சம்
தவிர்த்துத் துடிக்கும்.
குந்தியிருக்கும் அன்னை மனது
வெந்த புண்ணாய் விறுவிறுக்கும்.
தந்தையைக் காப்பேனா? - என்
தம்பியைக் காப்பேனோ?
நேற்று வளர்ந்த என் பூவினைக் காப்பேனோ?
சேற்று வயல் சென்ற என் சேயினைக்
காப்பேனோ?
என்று தவித்தவள் நெஞ்சு வெடிக்கும்.
ஒன்றும் இயலாமல் வாழ்க்கை வெறுக்கும்.
இன்றைய இரவொரு யுகமாய் விடியும்.
வென்றவர் நிம்மதிப் பெருமூச்செறியும்.
மீண்டும் இரவுகள் தோன்றி மறையும்.
மாண்டு மாண்டெம் மனதுகள் உயிர்க்கும்.
கூண்டிலாச் சிறை கொன்று தொலைக்கும்
வேண்டா நிலையிங்கு என்றினித் தொலையும்?

— வேலணை ஷணா

## இப்படியும் ஒருத்தி

சுற்றி வந்து பார்ப்பாள்
துள்ளித் தான் நடைபயில்வாள்
பற்றிப் பிடிக்க வரின் — தாயை
முட்டவிடுவாள்; முறுவலிப்பாள்
எட்டி நின்று கொண்டு — வேலிப்
பொட்டுக்கால் தலை புகுவாள்!

வால் கிளப்பி ஓடிடுவாள் — பல
வளவெல்லாம் வலம்வருவாள்
பால் குடித்த வாய்துடைக்கப்
பாவிப்பாள் என்சாரத்தை!

'ஏய்! கழுதை, என்ன இது?' — என
ஏசினால் முகந்திருப்பி
'அன்பே' எனக் கத்தி என்
ஆத்திரத்தைத் தீர்த்துவைப்பாள்!

'கொஞ்சடி' என்று சொல்லி — மடி
கொடுத்து நான் ஏற்றிவைக்க
எஞ்சிய உடுப்பை எல்லாம்
ஈரத்தில் தோய வைப்பாள்!

குழப்படிக்கோர் அளவு இல்லை
கூத்துக்குமோர் குறைவுமில்லை - அவள்
உழக்கிய பூச்செடிகள் யாவும்
உணர்வொடு சிலிர்த்து நிற்கும்!

கழுத்து மணி யொலிக்கப்பசுக்
கன்றொன்று வீட்டினிலே
இருப்பதுபோல் இணையில்லா(து)
[illegible] எங்கே ஏனோ?

— கி. வாயுபுத்திரன்

## அறிவுரை:
## உனக்கு மட்டுமல்ல... எனக்கும்!

காலக்கடலில் கலங்கித் துரும்பாய் அலைகையிலும்
நாளை உனக்கென்றோர் நாமம் இருக்கும் அதையெடுக்க
சூழும் துயருள்ளே தோய்நீ! துவண்டு தொலையாமல்
மேலெழுவாய் நீந்தி; மிதந்தால் தொடுவானம் ஓர்முழமே

வீசுகின்ற காற்றின் வலத்துக் கசைந்து விறல்குனிந்து
பேசுவதற் கெல்லாம் பிணம்போல் கிடந்து மனம், முதுகு
கூசாமல் மானம் குலைந்தழிய வாழ்வே பெரிதென்போர்
வேசங்களைத் தூற்று! விழுதிறக்கு; ஆடாதவேருடனே!

இரும்பாய் இருந்தால் எரித்திடுமோ எந்த இனநெருப்பும்?
உறுதிப் பனையைப் புயல்கள்தான் தொட்டு அசைத்திடுமோ?
அறிக; உயிர்த்துளிரைச் சுட்டு வதைக்கும் துயரங்கள்
உருக உளநெருப்பை மூட்டியெதிர்! வெற்றி அணைத்திடுமே

வெள்ளைத் துகில்போன்ற உன்னகத்தை நித்தம் வெளி ஊத்தை
நல்லாய் அழுக்காக்கும்; நம்பு இதனைத் தவிர்க்கேலா (து)
பிள்ளாய்... அழுக்கு உடைதேய்த்தல் போலுந்தன் தீமைதொடும்
உள்ளத்தைத் தோய்ப்பாய் 'இறைநினைவாம் சோப்பால்'
அடிக்கடியே!

பச்சோந்தி யாகிப் பகட்டணிந்து தேகப் பசிதணித்து
மூச்சையினை ஆரோ இழுக்க அசைந்தாடும் பட்டமென
இச்சகத்தில் வாழ்தல் இழிவு; இறப்புள் கருத்தரித்தால்
உச்சரிக்கும் காலம் உனதுயர்வை... வையம் உனைத்தொழுமே

— தேரடிச் சித்தர்

## நம்பிக்கை எனும் நதிமூலம்

திசையெங்கும் எரிகின்ற அனலெழும்பும் — துயர்!
தினந்தோறும் வளர்கின்ற நிலைவிளங்கும்
பசியாலெம் உயிர்வேரின் நுனிபொசுங்கும் — இதைப்
படியாத படித்தோர்க்கென் மனமிரங்கும்.

வெடியெண்ணி விளையாடும் நிலையெமக்கு — இன்றும்
விலகாத இரவுக்குள் குடியிருப்பு.
சடலங்கள் விழும்போதும் கனவுகண்டு — வாழும்
சடலங்கள் உயிர்க்கோனும் கவிசெதுக்கு!

பசியென்ற வயிறுக்குப் பொரியுமில்லை — ரணம்
பல; மாற மருந்திங்கு துளியுமில்லை.
ருசியான பரிசுள்ள பொதியுமில்லை — தூண்டிற்
புழுவாக்கி எமை விற்கும் 'தேர்தற் சந்தை'!

புயலுக்குச் சில பூக்கள் பறிபோனது — இளம்
புதிரெங்கு?? எனுங்கேள்வி புதிரானது.
புயலின் கண் சமநீதி எவர்கேட்பது?— என்று
புரியேல்லை! மனசுக்குள் கனல் பூக்குது.

விழிநீரில் உலைவைத்து விடியுமென்றோம் — தூங்கும்
விதையாவும் எழுமென்று கருதி உள்ளோம்.
''பிடிலூதும் நீரோக்காள் அறிக;'' வெல்வோம் — அன்று
புவி போற்றும்... உமைத்தூற்றி விடிவையுண்போம்.

— அருணன்

## இராஜ வீதிச் சவுக்கு மரம்

இராஜவீதிச் சவுக்குமரம் இன்று நான் பேசுகின்றேன்
எத்தனை காலம் இப்படி? என் துன்பம் தொலைவது எப்படி?
வற்றிய மரப் பொதும்பில் வறள் நாக்கை நீட்டு பாம்பாய்
பற்றியெரியும் என் மேனித்துயர் போக்க எழுந்துவாரீர்!

கார்த்திகை மாத இறுதியில் கோலம் கண்சிமிட்டும் மின்னொளிகள்
பார்த்து அஞ்சலிக்கும் சனக்கூட்டம் பெருந்திரளாய் வந்த காலம்
ஆர்த்தெழுந்து அலைந்ததனால் உள்ளெழுந்து மகிழ்ந்திருந்தேன்
சேர்த்த சிறப்பெல்லாம் சிதைந்ததனால் கதறுகின்றேன்.

நட்டு வைத்த நம்பியர்கள் நாளெல்லா மெனைத்தடவி
விட்டு வந்த நீரதனால் வேர்விட்டு நானெழுந்தேன்
சுட்டு விட்ட நெருப்பதுபோல் சூரியன் வந்தெனையணைக்க
பட்ட துயர் மூச்சதனால் பாதையில் நான் துடிக்கின்றேன்.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்து
அந்திபகல் வந்தித்து இறையருளால் ஈன்றெடுத்த
அன்னையை இழந்தலறும் இளம்பிள்ளை நானானேன்
அன்னையே எனைக்காக்க ஓடோடி வாராயோ?

குந்தி பேழையிலே தள்ளிவிட்ட கர்ணனுக்கும்
வந்து துரியோதனன் வழிகாட்டி யரவணைத்தான்
எந்தனையிருக்கும் இராஜவீதி கூட எழிலிழந்து
அந்தரமாய் நிற்பதனால் எனக்காரு துரியோதனன்?

அழகுரு பொலிவிழக்க என்மேனி மண்மூடி
தழல்படு தளிர்போலத் தினம் கருகிப் போனாலும்
அணைப்பாரின்றி அல்லல் கொண்டாலும் எனையீன்ற
அன்னையை அரவணைப்பேன் அதுவரை உயிர் வாழ்வேன்.

— புதுவை திருநாவன்

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது கடமைகள்

காலையில் நாமே எழுந்திடனும்
காலைக் கடன்களை முடித்திடனும்
கடவுளை நாமும் வணங்கிடனும்
கடமைகளைச் செய்யத்தொடங்கிடனும்

உணவும் பானமும் அருந்திடனும்
உற்சாகத்துடன் திகழ்ந்திடனும்
பாடசாலைக்குச் சென்றிடனும்
பாடங்கள் பல கற்றிடனும்.

குருவின் வார்த்தை கேட்டிடனும்
குணமாய் நாமும் நடந்திடனும்
வீடு வந்து சேர்ந்திடனும்
விளையாட்டில் நாம் சேர்ந்திடனும்.

மாலை முழுவதும் விளையாடிடனும்
மகிழ்வாய் நாமும் இருந்திடனும்
தாய் தந்தையரை மதித்திடனும்
தரணி போற்றிட வாழ்ந்திடனும்.

-க. பூர்ணிமா-
(ஆண்டு 4, யாழ். சன்மார்க்க ம. வி)

## நேரம் ஒதுக்குங்கள்

★ சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்.
அது இதயத்தின் இராகம்.
★ சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்.
அது சக்தியின் பிறப்பிடம்.
★ விளையாட நேரம் ஒதுக்குங்கள்.
அது இளமையின் இரகசியம்.
★ படிக்க நேரம் ஒதுக்குங்கள்.
அது அறிவின் ஊற்று.
★ நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்.
அது மகிழ்ச்சிக்கு வழி.
★ உழைக்க நேரம் ஒதுக்குங்கள்.
அது வெற்றியின் படிக்கட்டு.

—து. ரதிவதனா.
(ஆண்டு 6,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

## சூரியன் வருவது யாராலே?

சூரியன் வருவது யாராலே?
தூமதி தவழ்வது யாராலே?
விண்மீன் மிளிர்வது யாராலே?
வெயிலெறிப்பது யாராலே?

கண்கள் பார்ப்பது யாராலே?
காற்றுமடிப்பது யாராலே?
தண்ணீர் பெருகுதல் யாராலே?
தக்கோர் புகழ்வது யாராலே?

பூமி சூழல்வது யாராலே?
பூக்கள் மலர்வது யாராலே
கால்கள் நடப்பது யாராலே?
கை கொடுப்பது யாராலே?

எண்ணிப்பார் நீ அறிவாயே
எல்லாம் சிவன் செயல் புரிவாயே
சொல் சுதந்திரம் பெறுவாயே
சுவாமி வாக்கிது தெரிவாயே!

ச. பாலநந்தினி
(ஆண்டு –7, வேம்படி மகளிர் கல்லூரி)

## வழிகாட்டுங்கள்



சிக்கித் தவிக்கும் மான்குட்டிக்கு வெளியேவர வழி காட்டுங்கள். பார்க்கத் தலைசுற்றுகின்றதா? வழி கண்டு பிடிக்க வேண்டியது உங்கள் பொறுப்புத்தான். வழிக்கான விடை நாம் தரப்போவதில்லை.




## கண்ணைக் கவரும் செருப்பு

கல்லும் முள்ளும் தைக்காமல்
காலில் சேறு ஒட்டாமல்
பொல்லா வெய்யில் தகிக்காமல்
போட்டுக் கொள்ளும் செருப்பு.

வெள்ளை கறுப்பு நீலத்தில்
வண்ண வண்ணச் செருப்பு
கொள்ளும் விலைக்கு ஏற்றபடி
கண்ணைக் கவரும் செருப்பு.

ஆலயத்துக்கு செல்லும் போது
அணிய மாட்டோம் செருப்பு
காலைவிட்டு தொலைந்தால் அப்பா
கண்ணில் தோன்றும் நெருப்பு.


ஏழாலை ம. பிருந்தா

## பகுத்தறிவுள்ள மக்களுக்கு!

எறும்பின் சுறுசுறுப்பும், எருதின் உழைப்பும்
நரியின் தந்திரமும், நாயின் விசுவாசமும்
கழுதையின் பொறுமையும், காகத்தின் கூட்டுறவும்
புலியின் வீரமும், புறாவின் ஒழுக்கமும்,
சிங்கத்தின் நடையும், யானையின் அறிவும்
மானின் வாழ்வும் மக்களுக்குத் தேவை.

- துவாரகன் சிவராஜா -
(ஆண்டு 5, நெல்லியடி மெதடிஸ்த மிஷன் த. க. பா.)


## கண்டுபிடியுங்கள்!




மேலேயுள்ள கட்டத்தில் ஒன்று முதல் ஒன்பது வரையிலுள்ள எண்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு பக்கமும் மூலைக்கு மூலையும் கூட்டினால் இங்கு குறிக்கப்பட்டுள்ளபடி கூட்டுத் தொகை வர வேண்டும். 3 எண்களை அதன் இடத்தில் பொருத்தியாகி விட்டது. நீங்கள் 6 எண்களை மட்டும் பொருத்தினால் போதும். எங்கே முயன்று பாருங்கள்.

(விவிட XI ஆம் பக்கம் பார்க்க)


## அம்புக்குறிகள் எத்தனை?



மேலே உள்ள படத்தில் எத்தனை அம்புக் குறிகள் உள்ளன. எண்ணிப் பாருங்கள்!

(விடை XI ஆம் பக்கம் பார்க்க)


## உங்களுக்குத் தெரிகிறதா?



இந்தப் படத்துக்குள் ஒளிந்திருக்கும் பொருள்களை உங்களால் அடையாளம் காண முடிகின்றதா?

(விடை XI ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுக் கிளி



பிராணிகள் உலகம்

பச்சை நிறத்திலுள்ள வெட்டுக்கிளிகளை புல் வெளிகளிலும், வயல் வெளிகளிலும் பார்த்திருப்பீர்கள். இது பூச்சி இனத்தைச் சேர்ந்தது. உலகம் முழுவதும் இந்த வெட்டுக்கிளிகள் காணப்படுகின்றன. இந்தப் பூச்சி இனம் துள்ளித்துள்ளிச் செல்லும். இவைகள் தன்உடல் நீளத்தைப் போல் இருபது மடங்கு தூரத்துக்கு ஒரே தாவலில் தாவ முடியும்.

வெட்டுக்கிளிகள் இலைகளில் வசிக்கும்போது பச்சை நிறத்தில் இருக்கும். தரையில் வசிக்கும் வெட்டுக் கிளிகள் சாம்பல் கலந்த மண்ணிறத்திலும், கடற்கரை அருகே வசிக்கின்றன மண்ணிறத்திலும் இருக்கும். சுற்றுப்புறசூழலுக்கு ஏற்ப இதன் நிறமும் வடிவமும் இருப்பதால் இவைகள் இருப்பதை யாராலும் பார்க்க முடியாது. இவைகள் அசையும்போது தான் வெட்டுக்கிளிகள் இருப்பது தெரியவரும்.

இரண்டுவகை வெட்டுக்கிளிகள் உள்ளன. இதன் தலையில் முடிபோன்று இரண்டுகொம்புகள் இருப்பதைக் காணலாம். அதன் மூலம்தான் இவை வாசனையை அறிகின்றன. ஒருவகைப் பூச்சிகளுக்கு சிறிய கொம்புகளும், இன்னொருவகை பூச்சிகளுக்கு பெரிய கொம்புகளும் இருக்கும். இரண்டுவகைப் பூச்சிகளுக்கும் ஐந்து கண்கள் உள்ளன. அவை பூச்சிகளின் தலையில் இரண்டு பக்கமும் இருக்கும். அந்தக் கண்களில் ஆயிரக்கணக்கான ஒற்றை வில்லைகள் உள்ளன. இதன் மூலம் இந்தப் பூச்சிகளால் ஒரே நேரத்தில் முன்பக்கம் பின்பக்கம் மட்டு




(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 33



சொற்சிலம்பம் இல. 33
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 16 — 01 — 1998

### இடமிருந்து வலம்

1. வால் நட்சத்திரம். 5. பேய், 7. வெட்டுதல். 9. கசிப்புக்கு இங்கு இப்படியும் ஒரு பெயர். 10. நூல். 12. ஸ்தாபனம் செய்தல். 13. தரப்பட்டது. 15. அவசரச் செய்திகளைத் தாங்கி வருவது. 16. மோதிரம். 18. பாய். 19. பூமிக்கு அப்பால் உள்ளது. 20. படி. 21. ஓர் உள்ளூர் இயந்திரம். 22. காந்தி கூறிய கடைசி வார்த்தை.

### மேலிருந்து கீழ்

1. செய்தி தாங்கிச் செல்பவன். 2. அடியில் கிடைப்பது. 3. குற்றம் புரிந்தவன். 4. சுத்தம் 6. கழிவிடம். 8. இது உள்ளவன் பலவான். 11. காணிக்கை. 12. நகல். 13. தந்திரம் மிக்கவன். 14. அழகு. 15. தகைமை. 16. விழி. 17. ஆகுதி. 19. முற்கால ஆயுதம்.

### சொற்சிலம்பம் 31 — விடைகள்

**இடமிருந்து வலம்**

1. உகிர் 3. பாதபூசை. 6. தரு. 7. மாதவி. 8. விஷ்ணு. 9. கப்பம். 11. அம்புலி. 12. கர்வம். 14. பீதி. 16. சமை. 17. குடம். 18. கசம். 20. களிம்பு. 21. திரிபு. 22. திசை.

**மேலிருந்து கீழ்**

1. உதவி. 2. கிருஷ்ணர், 3. பாதகம். 4. தவிப்பு. 5. சைவம். 10. பலிபீடம். 11. அம்மை. 12. கடுகதி. 13, வசம்பு. 15. திம்பு. 17. குளிசை. 19. சரி. 20. கதி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: நந்திகா கந்தையா,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

★ இரண்டாம் பரிசு: திருமதி வீ. பீ. இராசநாயகம்,
733, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: ப. தெய்வேந்திரன்,
7, பேக்கரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50 00 |

★ புதிர்போட்டி இலக்கம். 32 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

— இல்லறவியல் —

இல்லறமல்லது நல்லறமன்று

இல்லிலே —வீட்டிலே இல்லாளுடன்— மனைவியுடன் இனிது இருந்து — இணைந்து ஆற்றும் பெருமைமிக்க அறமே இல்லறம் எனப்படுகிறது.

தனித்திருந்தால் தவம்தான் செய்யத் தூண்டும். விரக்தி மனதினை ஆளும். இனிது வாழ வேண்டின் இல்லாள் அருகினில் வேண்டும். வீட்டிலே விருந்தினர் — நண்பர்கள் வருகின்ற வேளை இல்லாள் இல்லாதிருந்தால் படுகிறபாடு புரியும். வெண்கலக் கடைக்குள் யானை புகுவதுபோலக் குசினிக்குள் புகுந்தால் புரியும்.

தனித்து சமாளிக்கக்கூடிய காரியம் அல்ல வாழ்க்கை. உயிர்த்துணை ஒன்று அருகினிலே வேண்டும், இன்பத்தையும், துன்பத்தையும் சேர்ந்தே சுமக்க வேண்டும்.

எனவே இல்லாளோடு வாழ்; நெறி தவறாது வாழ்; அனுபவித்து வாழ்; அடுத்தவரை அனுசரித்தும் வாழ்; உபசரித்தும் வாழ்; இயலாதவரைத் தாங்கி வாழ்; — என்றெல்லாம் வள்ளுவர்தான் சொல்லித் தரல் வேண்டும் என்றில்லை.

வீட்டிலே எப்படி வாழவேண்டும்? மனைவியும் பிள்ளைகளும் எப்படி அமைய வேண்டும்? சுற்றத்தை எப்படி அணுக வேண்டும்? எதைத் தவிர்க்க வேண்டும்? என்றெல்லாம் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார் அவர்.

இல்லறவியலில் இனித் தொடரும் இருநூறு குறள்மணிகள் வாழ்வு இனித்திருக்க அவர் கூறிய வேதங்கள். அவ்வழி நின்றால் விரக்தியோ, சலிப்போ இல்லாத வாழ்க்கை அமைந்து விடும்.

வள்ளுவர் பெண்ணடிமையை வலியுறுத்துவதாகக் கருத முடியாது; ஆணுக்கும் கூட பல கட்டுப்பாடுகளையும் கடமைகளையும் அவர் ஒதுக்கியே இருக்கிறார். பெண்ணுக்கு மட்டும் புத்திகூறுவது அடிமைப் படுத்தல் ஆகாது. கருத்துக்களை உற்று நோக்கினால் இது தெளிவாகும்.

இல்லறத்தில் இணைவோமா?...

— அம்பிகைபாகன் —

# இந்த வார இராசி பலன்

## [17 - 01 - 1998 முதல் 23 - 01 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| செ கே வி | இராசிச் சக்கரம் | | |
| சூ* வெ | | | சந் ரா |
| புத | | | |

மாற்றம்:

பூரம் — சிங்க இராசியில் மாறி நிற்கும்.

இலங்கையின் வடக்கிலும், இந்தியாவின் வடக்கிலும் அரசியல் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கும். இலங்கையில் மாணவர்கள் — தொழிலாளர்களின் புதிய கருத்துக்களுக்கு மக்கள் மதிப்பளிப்பார்கள். அரசாங்கத்தின் புதிய அரசியல் அணுகுமுறை எதிர்க்கட்சியைத் தடுமாறச் செய்யும். இந்தியாவில் காங்கிரஸின் புதிய அரசியல் திசைதிருப்பத்தால் மக்கள் திடீரென திசை திரும்புவர். சோனியா காந்திக்கு செல்வாக்கு அதிகரிக்கும்; ஆபத்தும் உண்டு.

உலகின் கிழக்கு நாடுகளின் இயற்கை, செயற்கை அழிவுகள் தொடரும். மேற்கு நாடுகள் மத்தியகிழக்கு நாடுகளில் ஆதிக்கக் கருத்துக்களை ஐ. நா. மூலம் பிரயோகித்து திசைதிரும்ப முடியாமல் போர் யுக்திகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கும்.

**மேடம்:** பிறரின் பாராட்டுக்களுக்கு மயங்காது, புதிய சிந்தனையுடன் திட்டங்களை விடாது செயற்படுத்தி வாருங்கள். பல திட்டங்கள் கருவாகி செயலுருவாகும். துன்பங்கள், எதிர்ப்புகள், மறைமுக அழுத்தங்கங்கள் எது இருந்தாலும் இறுதியில் உங்களுக்கே வெற்றிவரும். காணி, பூமியிலும், தொழில் ஸ்தானத்திலும் பலவித சோதனைகள், வேதனைகளைத் தரும். எதையும் எதிர்கொண்டு போராடுங்கள். பணக்காரர் போல் [illegible] யில் நீங்கள் [illegible] நிலைகளை அடிக்கடி அடைவீர்கள். இருப்பினும் பணமும் அவ்வப்பொழுது வந்தபடி இருக்கச் செய்யும். ஏழரைச் சனி இருந்தாலும், பதினொன்றில் வரும் வியாழ பகவான் உங்களுக்குப் பொருள் வளம், தொழிற் சிறப்பை இலாபகரமாக்கித் தருவான்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

**இடபம்:** குறை குற்றங்கள் நிறைந்த உலகில் பிழை பிடிக்கும் பலரின் மத்தியில் வாழும் நீங்கள் அவசரப்பட்டு சடுபுடு என்ற எதிர்பாராத தவறுகளைச் செய்துவிடச் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். கொஞ்சம் நிதானமாகச் செயற்படவும். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், நன்மைகளே அதிகம் நடக்க வாய்ப்புக்கள் ஏற்படும். குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் கருத்து பொருளால் வேதனை ஏற்படும் நிலைமை சிலருக்கு ஏற்படலாம். திருமணம், வெளிநாடு, மாற்றங்கள் எனப் பலவகை எண்ண அலைகளைக் குடும்பத்தவர் கிளப்பி விடுவதனால் சஞ்சலங்கள், மன அமைதியின்மை ஏற்படலாம். எதையும் நிதானித்துச் செயற்படவும். எதிர்ப்பாலாருக்கு அதிக பொருள் செலவுகள் ஏற்பட இடம் உண்டு. விஷ பீடைகள், வயிற்றுநோ, கால் உளைவு ஏற்பட இடம் உண்டு. இரவு நேரங்களில் விஷப்பூச்சிகளால், எதிரிகளால் கஷ்டங்கள் வரலாம். கவனமாக இருக்கவும். குலதெய்வ வழிபாடு முக்கியம்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**சிங்கம்:** சமுதாயத்திலே உங்களுக்கென ஒரு தனி

## ஜோதிட சஞ்சீவி

வேற்றுமைப்படாமல் இருக்கவும். கை கால் விறைப்பு, தடுமாற்றம், அடிக்கடி கோவிப்பது, சலம், மலம் சம்பந்தமான பாதிப்புக்கள் ஏற்படலாம். வைத்திய உதவிகள் நன்மை தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**மிதுனம்:** நீங்கள் குடும்பத்தில் எதிர்ப்பாலாரை அனுசரித்துப் போகாவிட்டால் அடிக்கடி போராட்டம் இருக்கும். தொழில் ஸ்தானத்தில் பெரிதாக ஒன்றையும் சாதிக்க முடியாவிட்டாலும் ஓரளவு பணவசதியுடன் இக்காலத்தில் இருக்க இடம் உண்டு. வாக்குச் சாதுரியத்தால் காரிய அனுகூலங்கள் ஏற்படும். அயலவர்கள் பொருமியபடி இருப்பார்கள். கொஞ்சம் நிதானமாக நடந்து கொள்ளுங்கள். இடமாற்றம் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அடிக்கடி கலகலப்பான பேச்சுக்கள் இருந்தாலும் உடம்பில் களைப்பு இருக்கும். வாய்வுத்தொல்லை, கைகால் பிடிப்பு அதிக யோசனைகளைக் கொடுக்கலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**கடகம்:** வாழ்க்கையே மேடு பள்ளம் நிறைந்ததுதான். குடும்பத்தில் அடிக்கடி சலசலப்புக்கள் இருந்தபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் எதிர்பார்த்தபடி நடக்கும் எனச் சொல்லமுடியாது. இடம் இருக்கும். உங்கள் தொழிலிலே அவதானமாக இருக்கவும். உங்கள் அலுவல்களை எவரிடமும் பொறுப்புக் கொடுக்கவேண்டாம். அதனால் வேண்டாத தொல்லைகள் வரும். அட்டமத்துச்சனி நடப்பதனால், அரசியல் பற்றி அதிக வியாக்கியானம் செய்யாதீர்கள். உங்கள் நல்லமனத்தை அறியாத உலகத்தவர்கள் பெட்டிசன்கள் எழுதிச் சஞ்சலப் படுத்துவர். எதிர்ப்பாலாருடனும் நண்பர்களுடனும் அவதானமாக நடக்கவும்.

## மகாதேவா ஜோதிடம்

நல்லூர்

பொருளால் அதிக செலவும், யோசனையும் ஏற்பட்டபடி இருக்கும். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி.

**கன்னி:** நீங்கள் கைராசிக் காரர்தான், காரியதாரர் தான். ஆனால் அடிக்கடி விசனப்படுகிறீர்களே? காத்திருந்து காரியமாற்றும் கொக்குப்போன்று சந்தர்ப்பங்கள் வரும்போது செயற்படுத்தி வெற்றிபெற முயலுங்கள். புகழும் வரும், பொருளும் வரும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். அடிக்கடி களைப்பு, மறதி வரும். பண

(X ஆம் பக்கம் பார்க்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மத்திற்கு கண் இல்லையா?

காந்தார தேசத்து அரசனிடம் அன்று எதிர்பாராத விருந்தாளியாக ஒருவர் வந்திருந்தார். அவர்தான் பிதாமகர் பீஷ்மர். உலகம் புகழும் உத்தமரான பீஷ்மர் தன்னை நாடி வந்த அதிசயத்தை உணர்ந்து, வியப்புடன் அவரை எதிர்கொண்டழைத்து வந்து, அரண்மனைக்குள் கொண்டு சென்றான் காந்தார தேசத்து அரசன்.

பிதாமகர் பீஷ்மரைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் அரசனின் மனைவிக்கும் மகள் காந்தாரிக்கும் கூட இருந்தது. அதனால் அவர்களும் வந்து பக்கத்திலேயே அமர்ந்தனர். அப்போது பீஷ்மர் அரசனிடம், ''அரசே! தங்களிடம் ஒரு வேண்டுகோளுடன் வந்திருக்கிறேன்!'' என்று சொன்னார்.

''சுவாமி! தாங்கள் கேட்பது எதுவானாலும் கொடுப்பேன். அந்தவாய்ப்பை நான் பெரும் பாக்கியமாகக் கருதுவேன்!'' என்றான் மன்னன்.

''அரசே! அவசரப்பட்டு எதையும் வாக்களித்து விட வேண்டாம். நான் கேட்பது கொடுக்கச் சற்றுச் சிரமமானது. அது தாங்களே முழுவதும் முடிவு செய்து விடக்கூடியதும் அல்ல! திருதிராஷ்டிரனுக்காகப் பெண் கேட்கவே நான் தங்களிடம் வந்திருக்கிறேன். தங்களுடைய மகள் காந்தாரி, அழகிற் சிறந்தவளாகவும், புத்திசாலியாகவும் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். திருதிராஷ்டிரனுக்கு மனைவியாக வரப்போகும் பெண்ணுக்கு அவை மட்டும் இருந்தால் போதாது.'' என்று நிறுத்தினார் பீஷ்மர்.

தனது திருமணத்தைப் பற்றிய பேச்சை எடுத்ததும், காந்தாரி வெட்கப்பட்டுக் கொண்டு, உள்ளே எழுந்து சென்று விட்டாள். அரசன் பீஷ்மரிடம், ''தாங்கள் குறிப்பிட விரும்புவது என்ன?'' என்று பணிவுடன் கேட்டான்.

''அவள் பண்பிற் சிறந்தவளாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால், திருதராஷ்டிரன் பிறவியிலேயே கண் பார்வையை இழந்தவன். அப்படிப்பட்டவனைக் கணவனாகப் பெற்று வாழும் மனைவி, அவனுடைய மனம் நோகாமல் நடந்து கொண்டு, அவனை அனுசரித்துப் போகும் பண்பு கொண்டவளாகவும் இருக்க வேண்டும். தங்கள் புதல்வி பண்பிலும் சிறந்தவள் என்று கேள்விப்பட்டேன். அதனாலேயே இங்கு வந்தேன். தங்களுடைய மகள் காந்தாரியை, திருதராஷ்டிரனுக்கு மணம் செய்து கொடுக்கச் சம்மதமா?'' என்று கேட்டார் பீஷ்மர்

அரசன் சற்று அதிர்ச்சி அடைந்தான். அவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவன் தயக்கத்தை அறிந்த பீஷ்மர், ''தங்களுக்கு விருப்பம் இல்லையானால் அதையும் தாராளமாகச் சொல்லிவிடலாம்!'' என்றார்.

''சுவாமி அப்படி எண்ண வேண்டாம். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் கண் பார்வை இல்லாத ஓர் அரசனை மனைவியாக ஏற்று வாழ எனது புதல்வி காந்தாரி சம்மதிக்கிறாளா என்று கேட்டுத் தங்களுக்குப் பதில் கூற விரும்புகிறேன். இது நான் தங்களிடம் கொண்டுள்ள மரியாதையையும், எனது விருப்பத்தையும் மட்டும் பொறுத்த விடயம் அல்ல!'' என்றான் அரசன். உள்ளே சென்று காந்தாரியை பிதாமகர் பீஷ்மருக்கு நமஸ்காரம் செய்து ஆசி பெறுமாறு சொல்லி விட்டு வந்தான். அப்படி வரும்போது அவளிடம் நேரிலேயே கேட்டு விடலாம் என்பது அரசனின் திட்டம்.

காந்தாரி நேரே வெளியே வந்து பீஷ்மரை நமஸ்கரித்தாள். அவளைக்கண்ட இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள். ஏனென்றால், காந்தாரி தனது இரு கண்களையும் ஒரு துணியால் இறுகக் கட்டி மூடிக் கொண்டிருந்தாள்.



''என்னம்மா இது?'' என்று சிறிது கலக்கத்துடன் கேட்டான் அரசன். பணிவுடன் பதில் சொன்னாள் காந்தாரி.

''தந்தையே! தாங்களும் பெரியவரும் பேசிக்கொண்டிருந்ததை நான் உள்ளே அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். எனக்குக் கணவனாக வரப்போகிறவர் பிறவியிலிருந்தே கண்பார்வைதெரியாமல் இருந்தவர் என்பதையும் தெரிந்து கொண்டேன். அப்படிப்பட்ட ஒருவருக்கு வாழ்க்கையில் துணைவியாக இருப்பதை விடச் சிறந்த பதிசேவை எது? அதனால் நான் அவரை மணம் செய்து கொள்ள நிச்சயம் செய்து விட்டேன். திருமணம் செய்து கொள்வது என்று நிச்சயித்த அந்தக்கணமே, அவருக்குக் கிடைக்காதது எதுவும் எனக்கும் கிடைக்க இயலாது என்பதையும் முடிவு செய்து கொண்டு விட்டேன். அதனால் இந்தக் கணத்திலிருந்து, நானும் கண் பார்வையை மறைத்துக் கொண்டு வாழ்வது என்று தீர்மானித்து விட்டேன். எனக்கு ஆசி கூறுங்கள்!'' என்று சொல்லி நமஸ்கரித்தாள் காந்தாரி.

வாழ்க்கையில் உன்னதமான தியாகத்தைச் செய்து, பிரமச்சாரியாக வாழும் பீஷ்மருக்கும் இதைக் கேட்டதும் கண்ணில் நீர் ததும்பிற்று. காந்தாரியின் மகத்தான தியாகத்தை மெச்சி, தன்னை வணங்கிய அவளுக்கு, ''நூறும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டும்!'' என்று ஆசி கூறினார் பிதாமகர் பீஷ்மர்.

வாழ்க்கையை இவ்வாறு தொடங்கிய காந்தாரி, உத்தம பத்தினியாகத் தனது வாழ்க்கை முழுவதும் கண் பார்வையற்றவளாகவே வாழ்ந்தாள். இப்படித் தர்மம் தவறாது வாழ்ந்த காந்தாரியும், தனது மைந்தர்களிடம் கொண்ட அன்பினால் ஒருமுறை தர்மம் தவறி நடக்கவேண்டியதாயிற்று......

சூதாட்டத்தில் தோற்றுப் போன பாண்டவர்கள் தம்மையும் தமது பத்தினி திரௌபதியையும் கௌரவர்களுக்கு அடிமையாக்கி உரிமை இழந்து விட்டார்கள். அடிமைப் பெண்ணான திரௌபதியை மானபங்கப் படுத்த விரும்பினான் துரியோதனன். அவளை அரச சபைக்கு அழைத்து வந்து அனைவருக்கும் முன்னால் துகில் உரியும்படி துச்சாதனனை அனுப்பினான்.

துச்சாதனன் போனபோது திரௌபதி மாதவிலக்கிற்கு உள்ளாகித் தனியே அமர்ந்திருந்தாள். அந்த நிலையிலும் அவளுக்கு இரக்கம் காட்டாமல் அவளைப்பற்றி இழுத்துவர முற்பட்டான் துச்சாதனன். அழுது புலம்பிக் கொண்டே வந்த திரௌபதி வழியில் காந்தாரியைக் கண்டாள். காந்தாரி அன்பும் தயையும் கொண்டவள். அதிலும் தர்மம் பிசகாமல் வாழ்பவள். அதனால் அவளிடம் முறையிட்டால் நியா

**எஸ். லட்சுமி சுப்பிரமணியம்**

(XI ஆம் பக்கம் பார்க்க)

# புற்றெடுக்கும் கலங்களும் செல்லரித்துப் போகும் உடலும்

அந்த ரோஜாச் செடி வீட்டின் போர்ட்டிக்கோ மூலையின் ஓரத்தில் நின்றது. அது அழகான சிவப்பு ரோஜாக்களை பூக்கும். பூலோகம் ஒரு நாள் காலையில் அந்தக் செடியில் மாற்றத்தை அவதானித்தார். அது திடீரென முள் முருக்க மரம் அளவு பருத்து வளர்ந்து கூரையைத் தொட்டிருந்தது. அவர் ஆச்சரியப்பட்டார். ஆனால் அவருக்கு அன்று நேரமிருக்கவில்லை. அடுத்த நாள் ரோஜாச்செடி இன்னும் பருத்திருந்தது; வளர்ந்திருந்தது. ஊர் ஆச்சரியப்பட்டது.

போர்ட்டிக்கோ சிமெந்து நிலம் வெடித்தது. முகட்டில் வெடிப்புகள், விரிசல்கள் தோன்றின. பூலோகம் பயந்து போனார். ஊர் கூடியது. அதிசயமரத்தை அனைவரும் சேர்ந்து தறித்தார்கள். ஒரு நாள் முடிவில் மரம் நிலத்தில் சாய்ந்தது. அதன் வேர்களை கிளறி அடிக்கட்டைகளும் மண்ணெய் ஊற்றி கொளுத்தினார்கள்.

பூலோகம் பெருமூச்சு விட்டார். சில நாள்கள் கழித்து காலை தூக்கத்திலிருந்து விழித்து எழுந்து நடந்த போது கால்இடறியது. படுக்கையறை நிலம் வெடித்து அதனூடாக ஒரு ரோஜாச் செடி நீண்டிருந்தது.

இது ஒரு கற்பனைக் கதை. பூலோகத்தின் வீடு சிதிலமடைந்து அரக்கத்தனமான ரோஜாச் செடிகளினால் அழிவுற்றுப் போனதுதான் அதன் முடிவு.

## நோயற்ற வாழ்வு - 10

இப்படி மென்மையான ரோஜா மூர்க்கமாய் மாறுவது போல எங்காவது உண்மையில் நிகழ்வதுண்டா? உடலில் அப்பிடி நிகழும் மாற்றம்தான் புற்றுநோய்க் கட்டிகள்.

சாதாரணமாக உடல் உறுப்புகள், கலங்களின் பிரிகையினால் வளருகின்றன. தேய்மானங்களை சரி செய்வதற்காகவும் கலங்கள் பிரிவடைகின்றன. மனிதர்கள் ஆலமரங்களைப் போல கிளைத்து வளருவதில்லை. (அப்படி நாம் வாழ்த்தினாலும் கூட) ஆனால் உடல் தானே ஒரு கட்டத்தில் வளர்ச்சியை நிறுத்திக் கொள்ளும். உடலில் இப்படி வெவ்வெறு சந்தர்ப்பங்களில் பிரிவடைகின்ற கலங்களைக் கட்டுப்படுத்துவது ஒவ்வொரு கலத்திலும் உள்ள கருவின் பரம்பரை அலகு அல்லது ஜீன்களாகும். கலத்தில் ஜீன் வைத்தது தான் சட்டம் ''நீ இத்தனை தரம் தான் பிரிய வேண்டும்'', ''கலப்பிரிவை நிறுத்து'' என்றெல்லாம் கட்டளையிடும். சில சமயங்களில் ''செத்துப்போ'' என்ற கட்டளைக்கிணங்க கலங்கள் இறந்து போவதுமுண்டு. சில நேரங்களில் அந்த ஜீன்களில் சில மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. சில பதார்த்தங்கள் ஜீன் அமைப்பை மாற்றிவிடும்.

**வைத்திய சஞ்சீவி**

(உதாரணம் சிகரெட்புகை, கதிர்வீச்சு) அப்போது அந்த ஜீன் ''சம்திங்'' வாங்கியவர் போல கலம் எந்தளவுக்கு பிரிகிறது என்பதைக் கண்டு கொள்ளாது விட்டு விடும்.

கட்டுப்பாடில்லாத கலம் விரிந்து ஒன்று பத்தாய், பல [illegible] டில் மினிசினிமா போல. ஒழுங்கற்று உடல் உறுப்புகளில் கட்டியாக — கழலையாக — வளரும்.

வளருகின்ற கட்டிகளில் இரண்டு வகை இருக்கின்றன. ஒன்று சாந்தமானவை; தானும் தன்னுடைய பாடுமாக வளர்ந்த இடத்திலேயே சூழ இருக்கும் உறுப்புகளுக்கு பெருந்தொல்லை கொடுக்காது இருப்பவை.

மற்றையவை மூர்க்கத்தனமானவை; ஒழுங்கற்று காட்டாற்றுத் தனமாக மிக வேகமாக வளரும். அருகிலுள்ள இழையங்களின் வேலியைப் பிரித்து நசுக்கி அழித்து தன்னுடைய சீர்கெட்ட கலத் தொகுதியை எங்கும் புற்றெடுப்பது போலப் பரப்பும். சில கலங்கள் அதிலிருந்து தனியாகி இரத்தத்தில், நிணநீரில் மிதந்து உடல் எங்கும் செல்லும். பின்னர் உடலின் வேறோர் இடத்தில் தங்கி வளர்ந்து அழிவைத்தரும்.

இப்படி புற்றெடுப்பதால் தான் அதை புற்றுநோய் (Cancer) என்கின்றோம். வாய், குடல், சுவாசப்பை, சிறுநீரகம், மார்பகங்கள், தோல், எலும்பு. கர்ப்பப்பை என்று புற்றுநோய்கள் எல்லா இடங்களிலும் கடைபரப்பியுள்ளன. ஓர் இடத்தில் தோன்றும் ஒரு கலத்தின் மாற்றம் காலப்போக்கில்

**அ. கிருஷ்ணேந்திரன்**
(யாழ். மருத்துவ பீடம்)

''கான் சராகி'' பின்னர் அது வேறு இடங்களுக்கும் பரவுகிறது.

புற்றுநோய்கள் வெளியில் கட்டிகளாகவோ, கழலைகளாகவோ, மாறாத புண்களாகவோ, தோல் நிறமாற்றங்களாகவோ, வெளிக்காட்டப்பட—

உடலிலுள்ளோ தோன்றுகின்ற புற்றுநோய்க் கட்டிகள் அந்தந்தப் பகுதிகளுக்கேற்ப குணங்குறிகளாக வெளித் தோன்றும்.

அதாவது சுவாசக்குழாயாயின் இருமலாக, உணவுக் குழாயாயின் வாந்தியாக, உணவு விழுங்கமுடியாமையாக, சிறுநீரகத்தில் சிறுநீர் கோளாறுகளாக

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கலோ பொங்கல்...

(V ஆம் பக்கத் தொடர்)

''...மூத்த மகன் ஆனந்தனோடை போயிருந்தால் இன்னும் வசதியாய், கொஞ்சம் சுகபோகங்களை அனுபவிச்சுக்கொண்டிருக்கலாம்'' செல்லம்மாவின் மனம் எண்ணத் தொடங்கியது. அதனை வெளிப்படையாகச் சொல்லி செயற்படுத்த அவளுக்குத் தயக்கமாக இருந்தது. அதனால்- ஒவ்வொரு விஷயத்திலும் ஏதோ சலித்துக்கொள்கிறமாதிரி முணுமுணுக்கத் தொடங்கினாள்.

துளசி மிகவும் சுவையாகச் சமையல் செய்து, மாமியாருக்கு இருந்த இடத்தில் சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பாள்.

''ஆனந்தன் வீட்டிலை என்ன விலையெண்டாலும் உருளைக்கிழங்கு வாங்கிச் சமைப்பினம். இதென்ன கத்தரிக்காய்க் குழம்பே'' என்று சலிப்புக் காட்டி விட்டுத்தான் சாப்பிடுவாள்.

ஒருநாள், கடும் புழுக்கமும் வியர்வையாயுமிருக்கிறதென்று பனையோலை விசிறி வாங்கிவந்து தாய்க்குக் கொடுத்தான் திவாகரன்.

''இதை ஆர் விசுக்கிறது? ஆனந்தன் வீட்டிலையெண்டால் எத்தினை பான் சுத்திக் கொண்டிருக்கும்'' என்று சொல்லி விசிறியைத் தூக்கிப் போட்டாள் செல்லம்மா.

தாயைக் கோயிலுக்கு அல்லது மருந்து வாங்க தன் சைக்கிள் கரியரில் ஏற்றிக் கொண்டு போவான் திவாகரன். ''ஆனந்தனிட்டை மோட்டார் சைக்கிள் இருக்குது. அதிலையெண்டால் வசதியாய் இருந்து போகலாம். உன்ரை சைக்கிளிலை இருக்கவே பெரிய கஷ்டமாய்க் கிடக்கு''—என்பாள்.

தாய் குளிக்கப்போனால் கிணற்றில் தண்ணீர் அள்ள விடாமல் திவாகரன் தானே அள்ளி ஊற்றிவிடுவான். அப்படியிருந்தும் அவள் சொல்வாள் ''ஆனந்தன் வீட்டிலையெண்டால் பைப்பைத்திறந்து விட்டுத்தாராளமாய்க் குளிக்கலாம்.''

இப்படி எப்போதும் ஒவ்வொன்றைச் சொல்லிக் கொண்டிருந்தாள். ஒரு நாள் அவன் பொறுக்க முடியாமல் சொன்னான்.

''அம்மா, அண்ணன் வீட்டிலை கொஞ்சநாளைக்குப் போயிரன்'' அவனுக்குக் கவலையாக இருந்தது. தாயோ மிகவும் சந்தோஷப் பட்டாள். ஆனால் அதை எப்படிச் செயலாக்குவது என்பது அவளுக்குப் பிரச்சினையாக இருந்தது. வருடத்தில் ஒருமுறையோ, இருமுறையோ செல்லம்மா ஆனந்தன் வீட்டுக்குப் போவாள். அங்கே அவள் தங்க நினைத்ததுமில்லை. அவர்கள் அவளை நிற்கும்படி கேட்டதுமில்லை. போனால் அன்றே திரும்பி வருவதுதான் வழக்கமாக இருந்தது. அப்படியிருக்க, தானாக எப்படி அங்கே போய்த் தங்கியிருப்பதென்பது அவளுக்குப் பிரச்சினையாக இருந்தது.

தம்பி திவாகரன் என்னை ஆனந்தன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய், ''அம்மா உங்கடை வீட்டிலை இருக்கப் போறாவாம் என்பதையும் ஆனந்தனுக்குச் சொல்லிவிடு'' என்றாள்.

திவாகரனுக்கு மிகுந்த கவலைதான். ஆயினும் தாயின் சந்தோஷத்துக்காக அவளைக் கூட்டிக்கொண்டு போய் தமையனிடம் விஷயத்தையும் சொன்னான்.

''அண்ணை, அம்மா கொஞ்ச நாளைக்கு உங்கடை வீட்டை இருக்கப் போறாவாம்...''

''ஏனம்மா இருந்தாப் போலை...'' ஆனந்தன் விஷயத்தை அறிவதற்காகக் கேட்டான்.

''உன்ரை பிள்ளையளும் எனக்குப் பேரப் பிள்ளையள் தானே. இந்தப் பேரப் பிள்ளையளோடை கொஞ்ச நாளுக்கு இருக்க எனக்கு ஆசையாய்க்கிடக்கு தம்பி...'

((XI ஆம் பார்க்க பார்க்க)

# விரிசல்....

(V ஆம் பக்கத் தொடர்)

ஒரு கையிலும் தூக்கிக் கொண்டு சிரிப்பார். நான் அவர் மேலேயெல்லாம் ஓடிப் போய் விழுவேன். கோவிக்கவே மாட்டார். இப்பகூட ஓடோணும் போல இருக்கு. எண்டாலும் நடந்தே போறன். அப்பா என்னைக் கண்டிட்டு கேட்கிறார்.

''என்ன என் குட்டி ஹீரோ என்னடா ரொம்ப 'டல்' ஆக இருக்கிறாய் ஓடிவா...''

நான் ஓடேல்லை மெல்ல நடந்துபோய் அவர் பக்கத்தில் போய் காலைக் கட்டிப் பிடிக்கிறன். அவர் ''எண்ணடா கண்ணா'' எண்டு கொண்டு என் தலையைத் தடவுறார்.

''அப்பா எங்கட மேகலா ரீச்சருக்கு உங்களை மாதிரி அப்பா வாங்க காசில்லையாம். ஏன் அப்பா இப்பிடி?''

அப்பா ஒண்டும் சொல்லேல்லை. திகைச்சுப் போய் நிற்கிறார். ''அப்பா உங்களுக்கு கூட அம்மா காசு தந்தவவாம். பொன்னம்மா சொல்லுறா. உண்மையா அப்பா? நீங்க என்னை தங்கச்சிய எல்லாம் கடவுளிட்ட இருந்துவாங்க காசு வாங்கினீங்களா? அம்மா வெல்லாம் என்னை, உங்களை தங்கச்சிப் பாப்பாவையெல்லாம் பார்த்துக்கொள்ளுறா. அப்ப ஏன் அப்பா காசு வாங்கினீங்கள்? அப்படியெண்டா என்ர குட்டித் தங்கச்சியும் காசில்லாட்டி மேகலா ரீச்சர் மாதிரிஇருப்பாவா?'' எனக்கு அழுகைஅழுகையாகவருகுது. ''நீங்க நிறைய உண்டியல் வேண்டித்தாங்க அப்பா. என் தங்கச்சிப் பாப்பாவிற்கு காசு சேர்க்க......இல்லாட்டி என் தங்கச்சி பாவமப்பா...''

அப்பாவின் காலை உலுக்கி உலுக்கி அவர் முகத்தை அண்ணாந்து பார்க்கிறான். அவர் ஒண்டுமே சொல்லேல்லை. ஏன்?

( யாவும் கற்பனை )

# தண்ணீர் நல்ல மருந்து

ஒரு நாளைக்குக் குறைந்தது ஆறு டம்ளர் (சுமார் ஒன்றேகால் லீற்றர்) சுத்தமான தண்ணீர் — கொதித்தாறிய நீர் — குடியுங்கள். அது நல்ல மருந்து.

மருந்து, மாத்திரை, ஊசி, டாக்டர், பணச்செலவு ஆகிய எதுவுமே இல்லாமல் இறைவன் வாரி வழங்கியுள்ள சுத்தமான தண்ணீரைக் குடிப்பதால் பல விதமான உடல் உபாதைகள் குணமடைகின்றன.

தண்ணீர் குறிப்பிட்ட சில நோய்களுக்கு நிவாரணம் அளிக்கும் என்ற ஆராய்ச்சி முடிவு ஜப்பான் உடல் நலக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

சுத்தமான தண்ணீர் மனித இரத்தத்தைச் சுத்தம் செய்கிறது. அத்தோடு குடலையும் வலுவாக்குகிறது. அது புது இரத்தத்தை உற்பத்தி செய்வதன் மூலம் குடற்பகுதி முழுவதையும் வலுவடையச் செய்கிறது.

இந்த முறையின் மூலம் குடலின் பகுதியில் உள்ள திசு மடிப்புக்கள் தூண்டப்படுகின்றன என்கின்ற உண்மை சர்ச்சைக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

குடல் பகுதியில் உள்ள இந்த திசு மடிப்புக்களால் சாப்பிட்ட உணவின் சாரம் உறிஞ்சப்படும்பொழுது புது இரத்தம் உற்பத்தி செய்யப்படுகிறது.

குடல் சுத்தமாக வைக்கப்படும்பொழுது தினந்தோறும் பலதடவை சாப்பிடும் ஆகார வகைகளின் சாரமானது இந்த 'திசுமடிப்புக்களால்' உறிஞ்சப்பட்டு அது புது இரத்தமாக மாற்றப்படுகிறது.

உடலில் உள்ள கழிவுப் பொருள்களை அகற்றி, இரத்தத்தைச் சுத்தம் செய்யும் தண்ணீரை அருந்துவதை விட்டுவிட்டு டின்களில் — போத்தல்களில்— அடைக்கப்படும் பானங்களை சிலர் அருந்தி மகிழ்கின்றனர்.

இந்தப் பானங்களில் வர்ணம், இரசாயனங்கள் மற்றும் அளவுக்கதிகமான சீனி சேர்க்கப்பட்டுள்ளதால் இவை உடலுக்கு பல விதமான நோய்களைக் கொண்டுவருகின்றன அதோடு இவை அதிகமான விலைகளிலும் விற்கப்படுகின்றன.

இலவசமாகக் கிடைக்கும் தண்ணீரை விட்டுவிட்டுப் பணம் கொடுத்து இனிப்புப் பானங்களை வாங்கி உடலுக்கு நோயைச் சேர்த்துக் கொள்வது அறிவாளித்தனமல்ல.

ஆக தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொதித்து ஆறிய நீரை ஒரு நாளைக்குக் குறைந்தது ஆறு டம்ளராவது குடித்து வாருங்கள்.

★

# விட்டில் பூச்சியின் காதல் தியாகம்!

உருவகக்கதை

சுட்டிப் பூச்சியே! நீ என்னைத்தானே சுற்றிச் சுற்றிக் காதலிக்கிறாய்?''— கர்வத்துடன் கேட்டது விளக்கு.

''அறியா விளக்கே! ஏன் நினைக்கிறாய் அப்படி?'' விட்டில் கேட்டது.

''நீ என்னைத்தானே சுற்றுகிறாய். அதனால் என்னைத்தான் காதலிக்லிறாய்.'' என்றது விளக்கு.

''நான் காதலிப்பது இரவைத்தான். நம்பாவிட்டால் பகலில் நீ எரிந்து பார். நான் வருகிறேனா என்று?'' சவால் விட்டது விட்டில்.

''அப்படியாயின் அனுதினமும் எனைனச் சுற்றுவதன் அர்த்தம் என்ன?'' என்று கேட்டது விளக்கு.

''நான் காதலிக்கும் இரவுக்கு நீ தடையாக இருக்கிறாய். உன்னை அணைக்கவே நான் உன்னைச் சுற்றுகிறேன்'' என்று கூறியபடியே விளக்கின் மேல் அதிரடித் தாக்குதல் நடத்தி விழுந்து விளக்கையும் அணைத்து தன் உயிரையும் விட்டது விட்டில் பூச்சி.

ஆம்! தான் விரும்பும் இரவுப் பெண்ணுக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்தது விட்டில்.

— தயானி —

# இந்த வார இராசி....

(VIII ஆம் பக்கத் தொடர்)

செலவு அதிகரிக்கும். பொதுக் காரியங்களில் அநாவசியமாக ஈடுபட்டுக் குறைகேட்க வேண்டாம். பிரயாணங்களால் அலைச்சலும், பொருள் செலவும் ஏற்படலாம். எனவே பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**துலாம்:** உலகில் வாழத் துடிக்கும் நீங்கள் கொஞ்சம் நிதானமாகப் போங்கள். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டி இருக்கும். அயலவர்கள் தேவையற்ற வேதனை தருவர். கைகால் விறைப்பு, சல, இரத்த வருத்தங்கள் வருத்தும். குடும்பத்தவர்களின் தேவைக்காக ஓடியாடித் திரிந்தாலும் நன்மை சொல்ல மாட்டார்கள். பெரியவர்கள், தெய்வ பக்தியானவர்களின் உதவிகளால் பலவித நன்மைகள் ஏற்படும். நண்பர்கள் எதிரிகளாக மாறலாம். உங்கள் கருத்துக்களை நிதானமாகச் சொல்லவும்.

★ அதிர்ஷ்ட நாள், திங்கள்.

**விருச்சிகம்:** நீங்கள் செயல் திறன் மிக்கவர்கள். எந்த விஷயங்களையும் ஓடியாடிச் செயற்படுத்த முனைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் நெருப்புக்கு மத்தியில் நின்று செயற்படுவது போன்று செயற்பட வேண்டியிருக்கும். சுயநலம் மிக்க உலகில் உங்களைப் போன்றோர் அடிக்கடி தர்மத்திற்காகப் போராடாமல் இருக்க முடியாது. களைப்பு, கைகால் தாக்கம், சலவருத்தம், காயங்கள் வர இடம் உண்டு. தெய்வவழிபாட்டையும், வேண்டுதல்களையும் தீவிரப்படுத்தியபடி இருப்பீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**தனுசு:** மனதில் ஒன்றையும் மறைத்து வைத்துப் பேசாத நீங்கள் அயலவர்களின் சந்தேகப் பார்வைக்கு இக்காலத்தில் ஆளாகக்கூடும். தொழில் ஸ்தானத்தில் ஏமாற்றம் ஏற்படலாம். மறைமுகத்தில், வேண்டாத சிலர் பொறாமையால் தேவையற்ற கதைகளைச் சோடித்து வீண்பழி சுமத்துவர். நெஞ்சுச்சளி, வாத விறைப்பு சிலரை வருத்தலாம். விதிவசப்பட்ட பலன்கள் சிலரைத் தொடரலாம். சகோதரங்களுக்கு நல்லதல்ல. வீடு, மனை, வாகனம் இவற்றால் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினரிடையே வீண் மனஸ்தாபங்கள் உருவாகும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**மகரம்:** பொருளில் எவரையும் நம்பாதீர்கள். கடமையில் கண்ணும், காசுப்பெட்டியில் ஒருகையுமாக இருக்க வேண்டிய காலமாகும். உற்றவர்கள் உடனிருந்து சபை சந்தி வைத்தவர்கள் சந்திக்கு இழுத்து நாலுபேர் சிரிக்கச் செய்திடுவர். என்ன செய்வது? விதிவசப்பட்ட பலன் நடக்கும். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிகளும் கோட்டுக்குப் போகுமாப்போல் வேதனையும் கொடுத்துவிடும். மறதி, நடுக்கம், கைகால் பிடிப்பு, வயிற்றில் நோ, சலத்தில் கடுமித்தாக்கம் சிலரை [illegible] விடும். பக்கத்தில் இருக்கும் விநாயகப் பெருமான் ஆலயம் அல்லது அந்தோனியார் ஆலயம் சென்று வாருங்கள். ஆறுதல் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**கும்பம்:** மிகவும் நுணுக்கமாக மற்றவர்களைக் கணித்து, கதைத்துத் திருப்திப்படுத்தும் உங்களுக்கு, மனதில் எப்பொழுதும் ஒரு குறை இருந்தபடியே இருக்கச் செய்யும் காலமாகும். உங்களின் வாதத்திறமை எவரையும் பணியச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் மிகத்திறமையாகச் சமாளித்துவிடும். நீங்கள் குடும்பத்தினரின் கருத்துக்களைச் சமாளிக்க முடியாமல் கலங்குவீர்கள். மனச்சோர்வு அடையாமல் எடுத்த கருமங்களைச் செயற்படுத்த முனையுங்கள். மனிதன்போராடாமல் எதையும் சாதிக்கமுடியாது அல்லவா? கண், நரம்புநோ வர இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள்.

**மீனம்:** சனீஸ்வரனின் நேரடித்தாக்கம் உங்களுக்கு இருக்கும் இக்காலம் தேவையற்ற பொறுப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளவும். தொழில் ஸ்தானத்தில் மௌனமாக இருக்கவும். அல்லது வீண் பகைகள் வளரும். கொடுக்கல் வாங்கல்களைப் பின் போடவும். பொருள் செலவுகள், ஏமாற்றங்கள் அடிக்கடி கொடுக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். குல தெய்வ வழிபாடுகளை செய்துவரவும். எதிர்ப்பாலாரின் ஆலோசனைப்படி செயற்படவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

# சூழலியல் அனர்த்தங்களை...

(III ஆம் பக்கத் தொடர்)

உலக தானிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள சிறிதளவான வீழ்ச்சியானது ''எல்—நைனோ'' அனர்த்தத்தின் பாதிப்பினால் ஏற்பட்டது. பாதிப்படைந்த நாடுகளில் குறைவான தானிய உற்பத்திக்கு இதுவே காரணமாகக் கூறப்படுகின்றது. சென்ற ஆண்டில் இந்த அனர்த்தத்தின் கூடிய பாதிப்புக்கள் டிசம்பர் மாதத்திலேயே இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இதனால்சென்ற வருடத்தின் முற்பகுதியில் மத்திய அமெரிக்கா, கரிபியன் தீவுகளில் பயிரிடப்பட்ட பயிர்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. பாதிப்பின் அளவு 1996 ஆம்ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 15 சதவீதம் அதிகமானதாக உள்ளது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது 1998 ஆம்ஆண்டில் அறுவடை செய்ய இருக்கும் தானியங்களிலும் இது பாதிப்புக்களை விளைவிக்கும் என தெரிய வந்துள்ளது.

விவசாயத்துறையில் ''எல் — நைனோ'' ஏற்படுத்தியிருக்கும் புதிய பிரச்சினையானது எதிர்காலத்தில் நெருக்கமானதொரு தானிய கையிருப்பினை அல்லது தானிய தேவை நிலைமை ஒன்றினை உருவாக்கும் என உலக உணவு விவசாய நிறுவனம் (FAO) கவலை தெரிவித்துள்ளது. மேலும் இந்த நெருக்கடியினைச் சமாளிக்க 1998 ஆம் ஆண்டில் உலக் மக்கள் தானியங்களிளை விட பிரிதொரு பயிர் ஒன்றில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தனது அறிக்கையில் அது குறிப்பிட்டிருக்கின்றது. எனவே இந்த வகையிலும் தாய்லாந்தில் நடக்கவிருக்கும் மாநாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆசிய நாடுகளான இந்தோனேசியா, பிலிப்பீன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளில் கடந்த ஆண்டில் குறிப்பிட்ட சில மாதங்களில் நிலவிய கடும் வரட்சிக்கும் இந்த ''எல் — நைனோ'' அனர்த்தத்திற்கும் தொடர்புகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. எனினும் வடகிழக்கு சீனா மற்றும் கொரியா போன்ற இடங்களில் நிலவுகின்ற வரட்சிக்கும் இந் அனர்த்ததிற்கும் தொடர்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. கடந்த ஆண்டு பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கும் காரணம் புரியவில்லை.

எனவேதான் இந்த ஆசிய நாடுகளில் நிலவுகின்ற காலநிலை தொடர்பாக ஆராய்வதற்காக தாய்லாந்தில் மேற்படி மகாநாடு ஒழுங்கு செய்யப்படுகின்றது.

(மிகுதிஅடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மத்திற்கு கண்...

(IX ஆம் பக்கத் தொடர்)

யம் கிடைக்கும் என்று நம்பினாள் திரௌபதி. துச்சாதனனிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு காந்தாரியின் பின்புறம் மறைந்து கொண்டு தப்பிக்க முயன்றாள்.

''மாமி! எனது கணவர் தருமர் தான் தோற்று அடிமையான பிறகு என்னை அடிமையாக்க உரிமை கிடையாது. அப்படி அவர் செய்தாலும் பெரியோர்கள் அனைவரும் கூடி இருக்கும் அந்தச் சபையில் மாத விலக்கில் இருக்கும் என்னைப் பகிரங்கமாகத் துகில் உரிந்து நிர்வாணமாக்குவது அநியாயம்! இதைத் தாங்கள்தாம் துச்சாதனனுக்கும், துரியோதனனுக்கும் எடுத்துச் சொல்லி என்னைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று முறையிட்டாள்.

காந்தாரிக்கு நியாயம் புரிந்தது. ஆயினும் தமது புதல்வர்கள் மீது கொண்ட பற்று நியாய தேவதையான காந்தாரியின் கண்களையும் மெய்யாகவே மறைத்து விட்டது. ''நீ ஓர் அடிமைப்பெண். நியாயம் கேட்கும் உரிமை உனக்கு இல்லை!'' என்று கூறித் தனக்குப் பின் மறைந்து நின்ற திரௌபதியைக் கையைப் பிடித்து எடுத்து, முன்னால் நின்ற துச்சாதனனிடம் கொடுத்து விட்டாள் காந்தாரி.

நியாயத்தின் பாதையிலிருந்து நழுவிய காந்தாரி இதற்காக, கடுமையான தண்டனையை ஏற்க வேண்டியதாயிற்று. அவளுடைய நூறு புத்திரர்களில் ஒருவர் கூட மிஞ்சாமல் இறந்து போனார்கள். தர்மத்தை அனுஷ்டித்தால் மட்டும் போதாது அதர்மத்தை எதிர்த்துக் கண்டித்து விலகாமல் பேசாமல் இருந்து விட்டால் அதற்காகவும் தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும்.

அதனால்தான் இலங்கைப் போரில் விபீஷணன் தப்பினான். பாரதப் போரில் விகர்ணன் கூடத் தப்பவில்லை.

குருக்ஷேத்திரப் போர் முடிந்து, துரியோதனாதியர் வதம் செய்யப்பட்ட பிறகு, திருதிராஷ்டிரன் தன்னைப் பார்க்க விரும்புவதாகக் கேள்விப்பட்டு கண்ணன் அரண்மனைக்கு வந்தான். கூடவே பீமனையும் அழைத்து வந்தான். உடன் வந்த பீமனிடம், ''நீ என் பக்கலில்நின்று கொள். என்னிடம் சம்மதம் கேளாமல், காந்தாரியின்முன் செல்லாதே!'' என்று எச்சரித்தான் கண்ணன்.

கண்ணனுடன் வந்திருப்பது யார் என்று தெரிந்து கொள்வதற்காகத்தனது கண் மறைப்பை மிகச்சிறிதளவு விலக்கிப் பார்த்தாள் காந்தாரி. கண்ணனுக்குப் பின்னால் பீமன் மறைந்து நிற்பது தெரிந்தது. அவனுடைய கால்நகங்கள் மட்டும் அவள் பார்வையில் பட்டன. உத்தம பத்தினியாக வாழ்ந்த காந்தாரியின் கண் பார்வை கக்கிய உக்கிரமான வேகத்தில் அந்தக் கால் நகங்கள் பற்றி எரிந்து விட்டன. கண்ணன் எச்சரிக்கை செய்ததன் பொருள் பீமனுக்கு இப்போது புரிந்தது!

கண்ணனிடம் காந்தாரி கேட்டாள்:—''கண்ணா, என்னுடைய புத்திரர்கள் உனக்கு என்னகெடுதல்செய்தார்கள்? சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட சண்டையில் நீ ஏன் தலையிட்டாய்? எனது புத்திரர்கள் அனைவரும் அழிந்து போவதற்கு ஏன் வழிவகுத்தாய்? அப்படியே அவர்கள் அழிவது தான் விதி என்றாலும், ஒருவனையாவது விட்டு வைத்திருக்கக் கூடாதா? தர்மத்தை எடுத்துரைத்த விகர்ணனையாவது நீ உயிருடன் வாழ அனுக்கிரகம் செய்திருக்கலாம் அல்லவா?'' என்று கேட்டாள் காந்தாரி.

கண்ணன் பதில் சொல்லவில்லை. தர்மம் எது? அதர்மம் எது? இது இறைவனுக்குத்தான் தெரியும்; மனிதர்களாகிய நமக்கு, நாம் நன்மை பெறுவது மட்டும் தான் தர்மமாகத் தெரியும். கண்ணனின் லீலையில் அதர்மத்தையே கண்டு கொள்ளக் காந்தாரியால் முடிந்தது. மனம் பொறாமல் சாபம் கொடுத்தாள் அந்தப் பத்தினி...

''கண்ணா! எங்களுடைய குலம் பூண்டோடு அழிய நீ காரணமாகஇருந்தாய். அதனால் துன்புற்றுத் தவிக்கும் நான்—நூறு புத்திரர்களையும் பறிகொடுத்த நான்—சாபமிடுகிறேன். நான் பத்தினியாக வாழ்ந்தது உண்மையானால், உன்னுடைய குலமும் இப்படியே அடியோடு அழிந்துபோகும். யாதவ குலத்தினர் அனைவரும், தாங்கள் ஒரே சமூகத்தினர் என்பதையும் மறந்து ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு போரிட்டு ஒருவர் கூட மிச்சமில்லாமல் அழிந்து போவார்கள்!'' என்று சாபமிட்டுவிட்டாள் காந்தாரி.

கண்ணன் தர்மத்தை நிலைநாட்டவே பாரதப் போரில் பங்கு கொண்டான். அதர்மத்தைக் களைய அவன் அந்தப் போரில் மேற்கொண்டசெய்முறைகள் பல, நம்மைப் போன்றவர்களுக்கு அதர்மமாகத்தான்தோன்றக் கூடும். புதல்வர்களைப் பறிகொடுத்த காந்தாரிக்கும் அப்படித்தான் தோன்றிற்று. உத்தமபத்தினியாக வாழ்ந்தவளாதலால், காந்தாரியின் சாபம் தர்மத்துக்குப் புறம்பாக இருந்தாலும் பலிக்கத் தான் செய்தது! கண்ணனின் மறைவை ஒட்டி, யாதவ குலத்தினர் ஒருவரோடு ஒருவர் போரிட்டு இருந்த இடம் தெரியாமல் அழிந்து போனார்கள்!

★

நன்றி:— ஞானபூமி.

# புற்றெடுக்கும்...

(IX ஆம் பக்கத் தொடர்)

நிலைத்து நிற்கின்ற அறிகுறிகளைத்தரும்

புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டு பிடிப்பது தான் வெற்றிகரமான சிகிச்சைக்கு வழி. புற்றுநோய் இயக்கம் எட்டு ஆபத்து சிக்னல்களை மக்களுக்கு அறிவுறுத்துகிறது. இவைபோன்ற குணங்குறிகள் இருந்தால் புற்றுநோயின் ஆரம்பமாக இருக்கலாம் என்ற சிவப்பு விளக்கு மனதில் ஒளிரவேண்டும்.

பெண்களின்மார்பகப்புற்றுநோய் ஒரு பிரச்சினை. மார்பகத்தில் கட்டிகளோ கடினமான பகுதிகளோ காணப் படுதல்—சிக்னல் ஒன்று. பெண்கள் தங்கள் மார்பகங்களை பரிசோதித்துக் கொள்வது அவசியம்.

தோலில் கட்டிகள், சின்னக் கழலைகள் மச்சங்கள் இருப்பதுண்டு. கட்டிகள், கழலைகள், மச்சங்களில் ஏற்படுகின்ற திடீர் மாற்றங்கள்—ஒருதோல் புற்றுநோய்க்குரியமாற்றமாக இருக்கலாம்—சிக்னல்இரண்டு

சாதாரணமான உணவுப் பழக்கங்கள், சமிபாடு, மலங்கழித்தல் போன்ற செயற்பாடுகளில் குழப்பங்கள் வருவதுண்டு. உணவு விழுங்க முடியாத தன்மை, வாந்தி, வயிற்றுநோ, சமிபாடின்மை, வயிற்றோட்டம், மலசிக்கல் போன்றவை நீடித்து நிற்கக் கூடும். நிலைத்து நிற்கின்ற உணவுச் சமிபாடு, மலங்கழித்தல் போன்ற செயற்பாடுகளில் ஏற்படுகின்ற மாற்றம்—இது இன்னமொரு சிக்னல். உணவுக் கால்வாய்ப் புற்றுநோய்க்கான கட்டி.

இருமல், குரலில் மாற்றம் போன்றவை சில வேளைகளில் ஏற்படுவதுண்டுஆனால் நிலைத்து நிற்கின்ற இருமல், குரலில் மாற்றம் — போன்றவை சுவாசத்தொகுதிப் புற்றுநோய்கள் ஆரம்பமாக இருக்கலாம் சிக்னல் நான்கு.

பெண்களில் மாதவிடாய் களின்போது அதிக இரத்தப் பெருக்கும்மாதவிடாய் தவிர்ந்த காலப் பகுதிகளில் இரத்தஇழப்பும் — கர்ப்பப்பை சம்பந்தமான கட்டிகளுக்கான சமிக்ஞையாகலாம். சிக்னல்—ஐந்து

உடலின் இயற்கையான துவாரங்களுக் கூடாக இரத்தக் கசிவு —வாய், காது, மூக்கு, குதம், குறி' போன்றன வழியாக—சிக்னல் ஆறு.

வீக்கம், கட்டி, புண் போன்றவை நீண்ட நாள்களுக்கு குணமாகாது நிலைத்திருத்தல் —சிக்னல் ஏழு.

உடல் நிறை, பட்டினி கிடந்தால் குறையும்.ஆனால் காரணம் தெரியாது உடல் மெலிந்துகொண்டு செல்வது புற்று நோயின் அறிகுறியாகலாம். உடல் நிறைக் குறைவு — இதுவும் புற்றுநோய்க்கான ஓர் அறிகுறி. சிக்னல்—எட்டு.

இப்படி எங்கள் உடலை நன்கு அவதானித்தால் புற்றுநோயினை ஆரம்பத்தில் கண்டுபிடிக்கலாம்; சிகிச்சையைப் பெறலாம். புற்றுநோயை ஏற்படுத்துவதில் பல காரணிகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றுள் புகைத்தல், மதுபாவனை, கதிர்வீச்சு, வளி மாசுறுதல் போன்றன பிரதானமானவை. உணவுப் பழக்க வழக்கங்களும் இதில் ஆட்சி செலுத்துகின்றன. புகையிலை, வெற்றிலை போடுதல் போன்றவை வாய்ப் புற்று நோய்க்கு வழிகோலும். புகைத்தல் — சுவாசப் பைப் புற்றுநோய் உட்படப் பல புற்றுநோய்களும், மது— உணவுக்கால்வாய்ப் புற்றுநோய்க்கும் காரணமாகிறது.

நோயின் ஆரம்ப கட்டத்தில் சிகிச்சை வெற்றியளிக்கிறது; மற்றைய உறுப்புக்களுக்கு பரவிய நிலை, சிக்கலாகிறது.

பூலோகம் முதல் நாளே முள்முருக்களவு ரோஜாச் செடியை தறித்திருந்தால், வீடழிந்திருக்காது. ஆனால் அவர் இப்போது வீடு மாறி விட்டார். ஆனால் உடலை மாற்ற முடியுமா? தெரியவில்லை. ★

# பொங்கலோ பொங்கல்...

(X ஆம் பக்கத் தொடர்)

செல்லம்மா ஏதோ சொல்லிச் சமாளித்து மூத்த மகன் வீட்டில் தங்கிவிட்டாள். திவாகரனுக்குத்தான் தாய் போனது பெரிய கவலை. வீடே வெறிச்சோடிப் போன மாதிரி இருந்தது அவனுக்கு.

தைப்பொங்கல் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. உற்சாகமேயில்லாமல் ஏதோ கடமைக்காகச் செய்வது போல்வாழைக் குலைகளைப் பழுக்கவைப்பதற்காக புகை ஊதி விட்டு வருபவனிடம் துளசி சொல்கிறாள்.

''...இண்டைக்கு நல்ல நாள். கடைக்குப் போய்ப் புதுப்பானை வாங்கி வந்திட்டால் பிறகு மற்ற வேலைகளைக் கவனிக்கலாம்...''

மனைவி சொன்னதை ஏற்று அவன் கடைக்குப் போகிறான். கையில் புதுப் பானையும், மனதில் சோர்வுமாக அவன் வீட்டுக்குத் திரும்பி வீட்டுப் படியில் கால் வைக்கையில் அவனுக்குப் பின்னால் அண்ணன் ஆனந்தனுடைய மோட்டார் சைக்கிள் இரைந்துகொண்டு வந்து நிற்கிறது. திரும்பிப் பார்த்த திவாகரன்,

''அம்மா வந்திட்டா... பொங்கலோ பொங்கல்... பொங்கலோ பொங்கல்...'' என்று தன்னையே மறந்தவனாய்க் கத்தினான்.

''...என்னடா தம்பி இது. பொங்கலுக்கு நாலைஞ்சு நாள் கிடக்கு. நீ இப்பவே பொங்கல் பானையை வைச்சுக் கொண்டு பொங்கலோ பொங்கல் எண்டு கத்துறாய்...''

தமையன் கேட்டதும் திவாகரன் பதில் சொல்லாமல் அசடு வழியச் சிரிக்கிறான். துளசி சொல்கிறாள்.

''மாமி போனது அவருக்குச் சரியான கவலை. உற்சாகமில்லாமல் சலிச்சுப் போயிருந்தவர். மாமியைக் கண்டவுடனை சந்தோஷக் திலை கத்தியிருக்கிறார்...''

''...ஓ...அப்படியா...அம்மா எங்கடை வீட்டை வந்த அடுத்த நாளே திவாகரன் வீட்டுக்குப் போகப் போறன். கூட்டிக்கொண்டு போ எண்டு கேட்டவ. எனக்கு நேரமில்லாததால இண்டைக்குத் தான் கூட்டிக் கொண்டுவர முடிஞ்சுது...''

ஆனந்தன் தாயை விட்டு விட்டுப் போகிறான். திவாகரனுக்கு மகிழ்ச்சியோடு, ஒரு விஷயத்தை அறிய மிகுந்த ஆவல்.

''இவ்வளவு ஆசைப்பட்டு அண்ணன் வீட்டுக்குப் போன அம்மா அடுத்தநாளே எங்கடை வீட்டுக்குத் திரும்பி வரப்போறன் என்று கேட்டது ஏன்?''

அவன் கேட்பதற்கு முன்பே செல்லம்மா தானாகவே சொல்கிறாள்—

''...தம்பி திவா, எனக்கு அங்கை எதுவுமே பிடிக்கேல்லையடா தம்பி. ஆனந்தன் பெரிய உத்தியோககாரன். எனக்கு இனாம் வாங்கித் தந்தவன் என்று அவனைப் பெரிசாய் மதிச்சன். நீ தோட்டக்காரன் தானேயெண்டு உன்ன இளக்காரமாய் நினைச்சன். இரண்டு நாள் அங்கை தங்கியிருந்தபிறகு தானே உண்மை விளங்குது. நீ அன்றாடம் தோட்டத்திலையிருந்து புதுசாய் காய்கறி கொண்டு வருவாய். சமைச்சுச் சாப்பிட எவ்வளவு ருசியாய் இருக்கிறது. அங்கை கடையிலை கடும் விலை குடுத்து காய்ஞ்ச போன காய்கறி வாங்கிச் சமைப்பினம். எனக்குப் பிடிக்கேல்லை. நீ உன்ரை மாட்டிலை பால் கறந்து கொண்டு வருவாய். நல்ல சுவையாய் இருக்கும். ஆனந்தன் பால் விக்கிற இடத்திலை வாங்கிற பால் ஒரே வெடுக்கு. ஆனந்தன்ரை பெண்சாதி, ''மாமி சாப்பாட்டைப் போட்டுச் சாப்பிடுங்கோ'' எண்டு சொல்லிப் போட்டுக் கதைப் புத்தகம் வாசிப்பா. துளசியைப் போலை இருந்த இடத்திலை கொண்டுவந்து தர மாட்டா. இங்கை தைப் பொங்கல் வருகுதெண்டு எவ்வளவு ஆரவாரப் படுவீங்கள். அங்கை ஒரு ஆயித்தத்தையும் காணேல்லை. பொங்கலுக்கு முதல் நாள் கடைக்குப் போய் ஒரு சீப்பு வாழைப்பழத்தையும், அரிசியையும் வாங்குவினமாம். நீயெண்டால் தோட்டத்திலை விளையிறபடியால் ஒரு குலையை வெட்டி அடுக்கி விடுவாய்...பாக்கச் சந்தோஷமாய் இருக்கும். உன்னோடை இருக்கிறது தான் எனக்குச் சந்தோஷம். இனி உன்னை விட்டுப் போகமாட்டன்...''

திவாகரனுக்கு உச்சி குளிர்ந்து. மகிழ்ச்சியாய் இருந்தது.

''...சரி இரம்மா. நான் தோட்டத்துக்குப் போட்டு வாறன். பயறு முத்தி நெற்றாகிக் கிடக்கு. புடுங்கிக் கொண்டு வந்தால் பொங்கலுக்கு மோதகம் அவிக்கலாம். முதல் சூரியனுக்குப் படைச்சுப் போட்டுத்தான் பயறு அவிக்க வேணும்...''.

''நில் தம்பி, தேத்தண்ணி குடிச்சிட்டு நானும் வாறன். தோட்டத்தைப் பார்க்க எனக்கும் ஆசையாய்க் கிடக்கு...''

செல்லம்மா இன்றைக்குத் தான் சந்தோஷமாய் மகனுடைய தோட்டத்துக்குப் போகிறாள்.

[illegible] ★

# வெட்டுக்கிளி...

(VII ஆம் பக்கத் தொடர்)

மின்றி வலது, இடது பக்கமும்கூட பார்க்கமுடியும். வெட்டுக்கிளிகள் ஆறு கால்களால் நடக்கின்றன. இவைகள் உணவைச் சாப்பிடும் போது முன்பக்கமுள்ள இரண்டு கால்களால் அவற்றைப் பிடித்துக்கொள்ளும். பின்பக்கமுள்ள கால்கள் பலம் வாய்ந்து இருப்பதால் அதனால் முன்நோக்கிச் செல்லவும், பறக்கவும் அந்த கால்கள் பயன்படுகின்றன.

செடி, கொடிகளில் உள்ள இலைகளைத்தான் இவை பெரும்பாலும் சாப்பிடும், பருத்திச் செடி, சோளம் போன்ற செடிகளின் இலைகளை இவைகள் விரும்பிச் சாப்பிடும். பயிர்களை அழிக்கும் பூச்சி என இவற்றிற்கு பெயர் உண்டு. நீண்ட கொம்பு உள்ள வெட்டுக்கிளிகள் சிறிய பூச்சிகளையும் வேட்டையாடி சாப்பிடும். செத்துக்கிடக்கும் மிருகங்களின் சதைப்பகுதியையும் சாப்பிடும். பறவைகள், பல்லி, எலி, பாம்பு, சிலந்தி ஆகியவை இதன் எதிரிகள். இவைகளைப் பார்த்தவுடன் வெட்டுக்கிளிகள் துள்ளிக் குதித்து ஓடிவிடும்; அல்லது பறந்து விடும். எங்கேயாவது ஒளிந்துகொள்ள முடியாவிட்டாலும் உடனடியாக ஓடாவிட்டாலும் வெற்றிலை சாறு போன்ற திரவத்தை வேகமாக துப்பும்; அல்லது தனது வலுவான தாடைகளால் கடிக்கும்.

வெட்டுக்கிளிகள் தன் பின்னங்கால்களை தன் இறகுகள் மீது தேய்ப்பதன் மூலம் சப்தத்தை எழுப்பும். ஒவ்வொரு பூச்சியும் தனக்கென ஒரு வித்தியாசமான சப்தத்தை எழுப்பும். சில ஆண் பூச்சிகள் தன் ஜோடி பெண் பூச்சியை அழைக்கப்பாட்டுப் பாடுவது போல் சப்தம் எழுப்பும். இந்த சப்தத்திற்கு தகுந்தவாறு அதன் உடல் மற்றும் தலையில் உள்ள கொம்புகள் நடனமாடும்.


சோடைகால இறுதியில் பெண் வெட்டுக்கிளிகள் பூமியில் உள்ள பொந்துகளில் முட்டை இடும். ஒரே நேரத்தில் இரண்டு முட்டைகள் முதல் 120 முட்டைகள் வரை இடும். புதிய பூச்சிகள் பெரிய பூச்சிகளைப் போலவேஇருக்கும். ஆனால், அவைகளுக்கு இறகுகள் மட்டும் இருக்காது. அடுத்த 40 முதல் 60 நாள்களுக்கு குட்டி பூச்சிகள் அதிகம் சாப்பிட்டு விரைவாக வளர்ச்சி பெறும். அவைகள் முழுமையாக வளர்ச்சி அடையுமுன் தன் உடலில் உள்ள வலுவான மேல் ஓட்டை ஐந்து முதல் ஏழு முறை உடைத்து மாற்றிக் கொள்ளும்.

சில நாடுகளில் ஒரே சமயத்தில் பல நூறு கோடிகளாகப் பெருகி பெரும் படையெடுப்புப் போல் பரவும் வெட்டுக்கிளிகள், வேளாண்மைத் துறையையே அழித்துவிடும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அந்நாடுகள் வெட்டுக்கிளிக்கு எதிராகப் போர்ப் பிரகடனமும் செய்வதுண்டு.

# விடைகள்

Vii ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ளபுதிர்களுக்கானவிடைகள்.

கண்டுபிடியுங்கள்




அம்புக்குறிகள் எத்தனை

ஐம்பத்தியைந்து அம்புக் குறிகள்.

உங்களுக்குத்தெரிகிறதா?

(அ) பிளேட், (ஆ) மின்குமிழ் (பல்ப்), (இ) கோப்பை, (ஈ) பூட்டு, (உ) 'அயர்ன்' பெட்டி, (ஊ) தையல் இயந்திரம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பெரும்புதூரில் சோனியா காந்தி ஆரம்பித்த தேர்தல் பிரசாரம்!

**உலக உலா**

என்.பி.சீலன்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் விதவை மனைவி சோனியா காந்தி தமிழ் நாட்டின் ஸ்ரீ பெரும்புதூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கிரஸுக்கான தனது முதலாவது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீபெரும்புதூரில் அதே இடத்தில் வைத்து தேர்தல் பிரசாரம் ஒன்றின் போது அவரது கணவர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டிருந்தார்.

காங்கிரஸின் கோட்டையாக முன்னொரு காலத்தில் இருந்த தென் இந்திய மாநிலங்களில் ஒன்றான தமிழ் நாட்டில் சோனியா காந்தி ஆரம்பித்த தேர்தல் பிரசாரம், வேகமாகச் சரிந்து வரும் காங்கிரஸின் செல்வாக்கை தூக்கி விடாது விட்டாலும் காங்கிரஸ் மேலும் பிளவுபட்டுப் போவதை ஓரளவு தடுக்கும் என்று அவதானிகள் நம்புகின்றனர்.

சோனியாகாந்தியின் தேர்தல் பிரசாரத்தின் பின்னரும் காங்கிரஸில் இருந்து பலர் வெளியேறி பாரதீய ஜனதாக்கட்சியுடன் சேர்ந்துள்ளனர். அதே போன்று காங்கிரஸுக்கும் சில கட்சித் தலைவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

லாலுபிரசாத் யாதவ் தலைமையிலான ராஷ்டிரிய ஜனதா தள், கன்ஷிராம் தலைமையிலான பகுஜன சமாஜக்கட்சி ஆகியவை உள்ளடக்கிய ஏழு கட்சிகள் கூட்டணி பாரதீய ஜனதாக்கட்சியை எதிர்த்துப் போராடப் போவதாகவும் —

காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கப் போவதாகவும் — அறிவித்துள்ளது. எனினும் இக் கூட்டணி தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கக் கூடிய பலம் வாய்ந்தது அல்ல.

சோனியாவின் பிரசாரம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற எவரையும் காங்கிரஸுக்குள் மீண்டும் இழுத்து விட உதவவில்லை. அதே போன்று பாரதீய ஜனதாக் கட்சியில் உள்ளோரிலும் எவரையும் காங்கிரஸ் பக்கம் இழுக்கவில்லை.

### பிரியங்காவுடன் சோனியா

சோனியாகாந்தி ஸ்ரீபெரும்புதூரில் நடந்த கூட்டத்தில் 15 நிமிட நேரம் மட்டுமே உரையாற்றினார். அதுவும் ஆங்கிலத்திலேயே அவரின் உரை அமைந்தது.

பலத்த பாதுகாப்புக்கள் மத்தியில் தனது மகள் பிரியங்காவுடன் அவர் அங்கு வந்திருந்தார்.

அங்கு நடந்த கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர்களுடன் அவர் பேசுகையில், காங்கிரஸின் தலைமைப் பதவியை ஏற்கும் நோக்கமோ அல்லது இந்தியாவின் பிரதமர் ஆகும் விருப்பமோ தமக்குக் கிடையாது என்று கூறினார். சீதாராம் கேசரி தலைமைப் பதவி வகிப்பதில் எந்த வித சர்ச்சையும் கிடையாது என்றும் அவர் சொன்னார்.

எனினும் தேர்தல் பிரசாரத்துக்கு தமது மகள் பிரியங்காவையும் (வயது 25) அவர் அழைத்து வந்தது அவரது எதிர்கால நோக்கங்களைப் புலப்படுத்துவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

சோனியா காந்தி கடந்த ஆறு வருடங்களாக அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தது தமது குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருதியே. அவர்களையும் அரசியலுக்குக் கொண்டு வரக் கூடாது என்ற நோக்கம் சோனியாவுக்கு இருந்தது.

தற்பொழுது சோனியாவின் அரசியல் பிரவேசம் பிரியங்காவுக்கு அரசியல் பாதையைத் திறந்து விட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ரொபர்ட் வாட்ரா என்ற வர்த்தகரைத் திருமணம் செய்த பிரியங்கா திருமணத்தின் பின் பள்ளி ஆசிரியர் வேலையை கைவிட்டு விட்டார். சகோதரர் ராஹுல் தற்பொழுது இங்கிலாந்தில் தொழில் பார்த்து வருகிறார்.

கடந்த 50 வருடகால இந்திய வரலாற்றில் 5 வருடங்கள் தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் காங்கிரஸ் ஆட்சியே நடைபெற்றுள்ளது.

எனினும் 1996 தேர்தலில் கடைசியாக காங்கிரஸ் கட்சி பெரும் படு தோல்வியைச் சந்தித்தது. பாரதீய ஜனதா தனித்து கூடுதல் ஆசனங்களைப் பெற்றது.

ஸ்ரீ பெரும்புதூரில் சோனியாகாந்தி ஆற்றிய உரையில் மதரீதியாக இந்தியா பிளவுபடுவதைத் தடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

மதவாதக்கட்சி என்றும் வட இந்திய மாநிலக்கட்சி என்றுமே பாரதீய ஜனதா கடந்த காலங்களில் அழைக்கப்பட்டு வந்தது.

ஆனால் எதிர்வரும் தேர்தலில் எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றுவது என்பதில் பாரதீய ஜனதா தலைவர்களான வாஜ்பாயும், அத்வானியும் உறுதியாக இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் அண்ணா தி.மு.க. வுடனும் மற்றும் சில கட்சிகளுடனும் கூட்டணி அமைத்துக் கொண்டதன் மூலம் வட இந்திய மாநிலக் கட்சி என்ற பெயரை பாரதீய ஜனதா மாற்றிக் கொண்டுள்ளது.

அதேபோன்று பஞ்சாப் மாநிலத்தில் அகாலி தளத்துடன் கூட்டணி அமைத்தது மூலம் இந்து மதக்கட்சி என்ற பெயரை மாற்ற முயற்சித்து வருகிறது.


பாரதீய ஜனதாவின் தற்போதைய போக்கு இந்தியாவில் உள்ள 12 கோடி முஸ்லிம் மக்களின் ஆதரவை பெறப் போதுமானது என்று கூற முடியாவிட்டாலும் கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும்போது எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம்களின் கணிசமான ஆதரவை பாரதீய ஜனதாவினால் பெற முடியும் என்று நம்பப்படுகிறது. ஏற்கனவே முஸ்லிம் தலைவர்கள் பலருடன் பாரதீய ஜனதாத் தலைவர்கள் பேச்சு நடத்தி உள்ளனர்.

## ஐக்கிய முன்னணி வாக்குகளே சிதறுண்டு போகும்

அடுத்த மாதம் 16 ஆம் 22 ஆம் 28 ஆம் திகதியும் மார்ச் 7 ஆம் திகதியும் நடைபெற உள்ள தேர்தல்களிலும் பாரதீய ஜனதாக் கட்சியே தனித்து கூடுதல் ஆசனங்களைப் பெறப் போகிறது. அறுதிப் பெரும்பான்மை பெற்று இக் கட்சி தனித்து ஆட்சி அமைக்க முடியுமா அல்லது இல்லையா என்பதே தற்போதைய பிரச்சினை. இதனைத் தடுத்து நிறுத்துவதும் சோனியா காந்தியின் தேர்தல் பிரசாரத்தின் நோக்கம்.

### பாபர் மசூதி விவகாரம் நீதிமன்றத்துக்கு

இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து முஸ்லிம்களின் வாக்குகள் காங்கிரஸ் கட்சிக்கே கிடைத்து வந்தன. 1992 இல் வட இந்திய நகரான அயோத்தியில் முஸ்லிம்களின் பாபர் மசூதி பாரதீய ஜனதா கட்சித் தொண்டர்களினால் உடைத்து தரைமட்டமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பாரதீய ஜனதாவுடனான முஸ்லிம்களின் உறவு மேலும் சீர்குலைந்திருந்தது.




14 ஆம் நூற்றாண்டில் அயோத்தியை வெற்றி கொண்ட மொகலாய மன்னன் ஒருவன் இராமர் கோயில் இருந்த இடத்தில் இந்த மசூதியைக் கட்டியதாக பாரதீய ஜனதாக்கட்சி தெரிவிக்கிறது.

எனினும் முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறும் நோக்கத்துடன் இந்த விவகாரத்தில் சிறிது மென்மை போக்கை தற்போது கடைப்பிடிக்க பாரதீய ஜனதா முற்பட்டு வருகிறது.

பாபர் மசூதி விவகாரத்தை நீதிமன்றம் மூலம் தீர்க்கலாம் என்று பாரதீய ஜனதா அறிவித்துள்ளது.

அத்துடன் மதசார்பின்மையை வலியுறுத்தும் இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு பாரதீய ஜனதா கட்டுப்படுகிறது என்றும் — மதசார்பின்மையை பாரதீய ஜனதா தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய் உத்தர பிரதேசத்தின் லக்னோ தொகுதியிலும் அத்வானி குஜராத்தின் காந்தி நகரிலும் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர்.

ஆட்சிக்கு வந்தால் பிரதமர் யார் என்ற தெளிவான நிலைப்பாட்டுடன் தேர்தலில் பாரதீய ஜனதா போட்டியிடுகிறது. காங்கிரஸோ அல்லது ஐக்கிய முன்னணியோ தமது பிரதமர் குறித்து இதுவரை அறிவிக்கவில்லை.

### பயனியர் பத்திரிகை கருத்துக் கணிப்பு

கடைசியாக ஜனவரி 2ஆ, 3ஆம் திகதிகளில் இந்தியாவின் பயனியர் பத்திரிகை மேற்கொண்ட கருத்துக் கணிப்பின்படி லோக சபையின் மொத்தம் 545 ஆசனங்களில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு 260 முதல் 270 வரையான ஆசனங்கள் கிடைக்கும் என்றும்—

காங்கிரஸுக்கு 130 ஆசனங்கள் முதல் 150 வரையான ஆசனங்கள் கிடைக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர் வாஜ்பாய் என்று 48 சதவீதமானோரும் சோனியா காந்தி என்று 24 சதவீதமானோரும் இந்த கருத்துக் கணிப்பில் தெரிவித்துள்ளனர். காங்கிரஸை சோனியாவினால் வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்ல முடியாது என்றும் பெரும்பாலானோர் தெரிவித்துள்ளனர்.

### தொகுதி பங்கீட்டில் இழுபறி

கடந்தகால அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த கட்சிகள் இம்முறை ஆட்சியைப் பிடிக்கும் நோக்குடன் ஒரே கூட்டணிகளில் சேர்ந்திருப்பதால் பல மாநிலங்களில் தொகுதிப் பங்கீட்டில் இழுபறி நிலவிவருகிறது.

தமிழ் நாட்டில் தி.மு.க— தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி நீடித்தாலும் மூப்பனாரின் தழும்பல் போக்குத் தொடருகிறது. தமிழ் நாட்டில் உருவாகி உள்ள பலமான அ.தி.மு.க. கூட்டணி, வாழப்பாடி இராமமூர்த்தியின் வெளியேற்றத்தால் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள பலவீனமான நிலை ஆகியவற்றுக்கு மத்தியில் தமிழ் மாநில காங்கிரஸுக்கு தி.மு.க. வுடன் கூட்டுச் சேருவதை விட வேறு வழி இல்லை.

தொகுதிப் பங்கீடு தொடர்பாக தி.மு.க. வும் தமிழ் மாநில காங்கிரஸும் இன்னும் உடன்பாடு ஒன்றுக்கும் வரவில்லை. கடந்த தேர்தலில் தமிழ்மாநில காங்கிரஸுக்கு 20 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. அதேஅளவு தொகுதிகளையே இம்முறையும் அது கேட்கிறது. ஆனால் அவ்வளவு தொகுதிகளை இம்முறையும் ஒதுக்கிக் கொடுக்க தி.மு.க. தயங்குகின்றது.

கடந்தகாலங்களில் தமிழ் மாநில காங்கிரஸுக்கும் தி.மு.க. வுக்கும் இடையில் நிலவிவந்த அவநம்பிக்கைகளே இதற்குக் காரணம்.

அதே போன்று அ.தி.மு.க.—பாரதீயஜனதா கூட்டணியும் தொகுதிப் பங்கீட்டில் தொடர்ந்து இழுபறி நிலையில் இருந்து வருகின்றன. கூட்டணியில் உள்ள மறுமலர்ச்சி தி.மு.க.வுக்கும் பாட்டாளி மக்கள்கட்சிக்கும் 4 அல்லது 5 ஆசனங்கள் மட்டுமே ஒதுக்க முடியும் என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளார். இந்தக் கட்சிகள் கூடுதல் ஆசனங்களைக்கோருகின்றன.

தமிழ்நாட்டில் கடந்த கால தேர்தல்களில் ஓர் ஆசனமாவது பெறத்தவறிய பாரதீய ஜனதா கட்சி இம்முறை ஏழு ஆசனங்களைக் கோருகிறது. அத்துடன் ஒரே தொகுதியைப் பல கட்சிகள் கோருவதால் ஜெயலலிதா பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்.

### கம்யூனிஸ்ட்டுகள் ஆதரவு யாருக்கு?

பாரதீயஜனதாக் கட்சி ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்கு கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவைப் பெறுவதில் காங்கிரஸ் கட்சி தற்பொழுது அக்கறைகாட்டி வருகிறது. ஆனால் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரிகளின் ஆதரவு தொடர்ந்து ஐக்கிய முன்னணிக்கே இருந்துவருகிறது.

இந்து தேசியவாதத்துக்கு எதிராக ஒன்றுபடும்படி இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு (CPI) காங்கிரஸ் விடுத்த அழைப்பை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ. பி. பார்டன் நிராகரித்துவிட்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்மூடித்தனமாக காங்கிரஸ் எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக காங்கிரஸ் தலைவர் ஒருவர்சமீபத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார். பிற்போக்குவாத பாரதீய ஜனதாக் கட்சியையோ அல்லது ஊழல் நிறைந்த காங்கிரஸ் கட்சியையோ ஆதரிக்கப்போவதில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துவிட்டது.

கடந்த நவம்பர் இறுதியில் இந்திய நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட போது, அப்பொழுது ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை குஜ்ரால் கையாண்ட விதம் காரணமாக தேர்தலில் ஏனைய கட்சிகளுக்கு நிகராக ஐக்கிய முன்னணியும் நிற்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

ஆனால்தற்பொழுதுஇந்திய அரசியலில் ஏற்பட்டமாற்றங்கள் ஐக்கிய முன்னணியை மூன்றாவது இடத்துக்குத் தள்ளி விட்டன. சோனியாவின் தேர்தல் பிரசாரம் காங்கிரஸுக்கு அதிக வாக்குகளை பெற்றுக் கொடுக்குமேயானால் நஷ்டமடையப் போவது ஐக்கிய முன்னணியே.

ஐக்கியமுன்னணியின் வாக்குகளே சிதறுண்டு போகப் போகின்றன.

★

## தடுமாறும்...

(1 ஆம் பக்கத் தொடர்)

இன்றைய தினம், மனித குலத்தைச் சூழ்ந்துள்ள இந்தப் பெரும் அபயாத்தை முறியடித்து மனித குலத்தைக் காப்பாற்ற பெண்ணுரிமை இயக்கங்களும், சமய இயக்கங்களும் எழுச்சியுடன் முன் வர வேண்டும். ★

நன்றி:– மங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org